Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

தினமுரசு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 12 ஞாயிற்றுக்கிழமை (28.07.2013) பக்கங்கள் 20 ஓசை – 301





மீனவர்களின் பிரச்சினைக்கு இந்திய தீர்வை ஏற்கமுடியாது

மீனவர் சங்கங்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வருகைதரும் இந்திய மீனவர்களுடன் அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ள கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட பிரதிநிதிகள் பங்குபற்றுவதுடன், கலந்துரையாடலில் எட்டப்படடும் தீர்வு அரசியல் சார்ந்தாக அமையாமல் சுதந்திரமானதாக அமைய வேண்டும். அத்துடன் மீனவர் பிரச்சினைக்கு இந்தியாவால் திணிக்கப்படும் தீர்வெதுவும் வேண்டாம், மாறாக இரு நாடுகளுக்குமான சமத்துவமான தீர்வே வேண்டுமென வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் செயலாளர் சூரியகுமார் தெரிவித்தார்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டமைப்பு ஆகியன இணைந்து வடக்கு, கிழக்கு மீனவர்கள் எதிர்நோக்கும் மீனவர்கள் பிரச்சினை தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பினை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவு சம்மேளனத்தில் நடத்தியவேளை அவர் இவ்வாறு

19 ஆம் பக்கம் பார்க்க

வடமாகாண சபைத்தேர்தல்

யாழ்.மாவட்ட சு.க.வேட்பாளர்கள்

நடைபெறவுள்ள வடமாகாண சபைத்தேர்தலில் சுதந்திரக்கட்சியின் சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் விபரங்களை சுதந்திரக்கட்சி வெளியிட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் சுதந்திரக்கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கு ஏழு பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இன்றையதினம் இவர்கள் வேட்பு மனுவில் ஒப்பமிடவுள்ளதாகவும் அக்கட்சியின் யாழ்மாவட்ட அமைப்பாளார் அங்கஜன்

19 ஆம் பக்கம் பார்க்க

4 பால்மா வகைகளில் இரசாயனம் கலப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பால்மா வகைகள் பலவற்றில் டிசிடி (DCD அல்ல J Dicyandiamide) என்ற ரசாயன பொருள் கலந்திருப்பதாக தொழிநுட்ப ஆய்வுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

வெளிநாட்டு பால்மா வக்கைகளில் டிசிடி இரசாயனம் கலந்திருப்பதாக கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்டிருந்த சர்ச்சைகளின்போது, சுகாதார அமைச்சும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையும் அது பற்றி ஆய்வுகளை மேற்கொண்டிருந்தன.

இந்த பால்மா வகைகளில் உடலுக்கு தீங்கு ஏற்படுத்தும் பொருட்கள் இல்லை என்று சுகாதார அமைச்சும் அறிக்கை வெளியிட்டிருந்தது.

ஆனால் தற்போது மீண்டும்

19 ஆம் பக்கம் பார்க்க

பொதுநலவாயகண்காணிப்பாளர்களை தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுத்துக

வேண்டுகோள் விடுக்கின்றது பவ்ரல்

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்பாளர்களை எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் கடமையில் ஈடுபடுத்த வேண்டுமென பவ்ரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வட, வடமேல் மற்றும் மத்திய மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

இந்தத் தேர்தலின் போது பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த தேர்தல் கண்காணிப்பாளர்களை கடமையில் ஈடுபடுத்துமாறு பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஆசிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் மட்டுமன்றி பொதுநலவாய நாடுகளின் கண்காணிபபாளர்களையும் ஈடுபடுத்த வேண்டியது அவசியமானது என அவர், தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவிடம் கோரியுள்ளார்.

சுதந்திரமானதும், சுயாதீனமானதுமான தேர்தல்களை உறுதிப்படுத்த கூடுதலான தேர்தல் கண்காணிப்பு பணிகள்

19 ஆம் பக்கம் பார்க்க

பிரிட்டன் எம்.பிக்கள் குழுவை சந்திப்பதை தவிர்த்த கோத்தா

(கொழும்பு)

பிரித்தானிய நாடாளுமன்றக் குழுவுடனான சந்திப்பை பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச கடைசி நேரத்தில் நிறுத்தியுள்ளார்.

பிரித்தானிய நாடாளுமன்றக் குழு தற்போது இலங்கையில் உண்மையைக் கண்டறியும் பயணத்தை மேற்கொண்டுள்ளது.

இந்தக் குழு வடக்கு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை பார்வையிட்ட நிலையில், நேற்று முன்தினம் கொழும்பில் அரச தரப்புடனான சந்திப்புக்களை மேற்கொண்டது.

நேற்றுமுன்தினம் பாதுகாப்புச் செயலரை சந்திக்கத் திட்டமிட்டிருந்த நிலையில், பிரித்தானிய 'நாடாளுமன்றக் குழுவுடனான சந்திப்பை கோத்

19 ஆம் பக்கம் பார்க்க

அரசாங்கத்தின் வங்குரோத்து நிலை எதிரணியை விலைக்கு வாங்குவது

– என்கிறது ஐ.தே.க



(கொழும்பு)

கோடிக்கணக்கில் பணத்தைக் கொடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி தேர்தலில் போட்டியிடும் அளவுக்கு அரசாங்கம் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

பொலநறுவை பக்கமுன பகுதியில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அரசாங்கம் தனது பிரபலத்தினால் தேர்தலில் வெல்ல முடியுமென்றால் ஏன் ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை பணம் கொடுத்து விலைக்கு வாங்க வேண்டும்?

அரசாங்கத்தின் வங்கு ரோத்து

19 ஆம் பக்கம் பார்க்க

ராஜீவ் - ஜே.ஆர் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை

– இந்திய மத்திய அமைச்சர் வாசன் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் சிங்கள மக்களுக்கு இணையான பாதுகாப்பு, உரிமை, நலன் அதிகாரத்தில் சமபங்கு உள்ளிட்ட அனைத்து சாராம்சங்களையும் உள்ளடக்கியதுதான் ராஜீவ் - ஜே. ஆர் ஒப்பந்தம். அந்த சாராம்சத்தில் எந்தக்குறையும் வராதபடி நடைமுறைப்படுத்த இந்திய மத்திய அரசு நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

சத்தியமூர்த்தி பவனில் நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே

அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கைத் தமிழர் விடயத்

19 ஆம் பக்கம் பார்க்க

இலங்கையில் ஊடக சுதந்திரம் வரையறுக்கப்பட்டதாக விசனம்

(கொழும்பு)

இலங்கையில் ஊடக சுதந்திரம் வரையறுக்கப்பட்டுள்ளதாக ப்ரீடம் ஹவுஸ் என்னும் உலக ஊடக சுதந்திர அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

2012 ஆம் ஆண்டிலும் ஊடகவியலாளர்கள் பல்வேறு வழிகளில் துன்புறுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவான தேசிய செயற்திட்டத்தில் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துவது குறித்த பல்வேறு நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்ட போதிலும், உண்மையில் அந்தப் பரிந்துரைகள உரிய முறையில் அமுல்ப்படுத்தப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசியல் சாசனத்தில் ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும், வேறு சட்டங்களின் மூலம் கருத்துச் சுதந்திரம் முடக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளது. 1979 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எதிராக பல்வேறு கெடுபிடிகள் காணப்படுவதாகக்

19 ஆம் பக்கம் பார்க்க

மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில் வழங்க தொழில்தருநர்கள் முன்வரவேண்டும்

(யாழ்ப்பாணம்)

மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில்வழங்கல் தொடர்பாக தொழில்தருநர்களிடம் தொடர்ச்சியாக கருத்துக்களை முன்வைத்து வருகிறோம் என்று இலங்கை தொழில் வழங்குநர் சம்மேளனத்தின் உபதலைவர் கனிஸ்ட விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். ஞானம்ஸ் விடுதியில் நடைபெற்ற சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக நிறுவனங்களுக்கான செயலமர்வில் கலந்துகொண்டு மாற்றுத்திறனாளிகள் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

எண்பது வருடங்கள் இலங்கையில் சேவையாற்றியுள்ள எம்புளேயஸ் பெடரேசன் ஒப் சிலோன் நிறுவனம் இன்று முதன்முதலில் யாழ்ப்பாணத்தில் கூட்டுமுயற்சியாக வணிக சமூகத்தினரை சந்தித்து தொழில் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்க முடிந்துள்ளதாகவும் தெரிவித்த அவர், இந்தக் கூட்டின் மூலம் தொழிலாளர்களின் நம்பிக்கையை கட்டியெழுப்பி தொழில் விருத்தியை மேற்கொள்ள முடியுமென்று நம்புவதாகவும் தொழில் தருநர் என்ற வகையில் நீங்கள் கருத்துக்களை முன்வைக்க முடியும்.

மாற்றுத்திறனாளிகளுக்கு உங்கள் நிறுவனங்கள் போன்று இலங்கை பூராவும் உள்ள 33 நிறுவனங்களில் தொழில் வழங்கப்பட்டுள்ளது. எனவே மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில் வழங்கல் தொடர்பாக தொழில்தருநரிடம் தொடர்ச்சியாக கருத்துக்களை முன்வைத்து வருகிறோம் என்றும் தெரிவித்தார்.

யாழ். வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் பூரணச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் யாழ். மாவட்டத்தில் சுமார் 8000 மாற்றுத்திறனாளிகள் இருப்பதாக பிரதேச செயலக புள்ளிவிபரங்கள் மூலமாக தெரியவந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டதுடன், இவர்களில் 37 வீதமானவர்கள் பிறவியில் அங்கவீனர்களாகவும் 63 வீதமானவர்கள் நோய் அல்லது அனர்த்தம் காரணமாக அங்கவீனர்களாகவும் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தச் செயலமர்வில் தொழில் பயிற்சியை நிறைவுசெய்த மாற்றுத்திறனாளிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டது.

யாழ். வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் பூரணச்சந்திரன் மற்றும் நிறுவனத் தலைவர் இந்தச் சான்றிதழ்களை வழங்கி மாற்றுத்திறனாளிகளை கௌரவித்தனர்.

மேலும் இந்நிகழ்வில் பெருமளவு சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (பா)

பச்சை மிளகாயின் விலையில் திடீர் வீழ்ச்சி

மருதனார்மடம் சந்தையில் கடந்த சில நாட்களாக ஒரு கிலோ பச்சை மிளகாயின் விலை 30 ரூபா தொடக்கம் 40 ரூபா வரை சில்லறை விலையாக விற்பனை செய்யப்படுகின்றது.

உற்பத்தியாளர்களால் கொண்டு வரப்படும் மிளகாய் 20 ரூபா விற்கே கொள்முதல் செய்யப்படுவதால் விவசாயிகள் பெரும் கவலை அடைகின்ற நிலைமை காணப்படுகின்றது.

மிளகாய் உற்பத்திக்கான விவசாயிகளின் உற்பத்திச் செலவினம் அதிகமாகின்றது.

கிருமிநாசினிகள், ஏனைய உர வகைகளின் விலை அதிகமாகக் காணப்படுகின்ற வேளையில் தம்மால் உற்பத்தி செய்யப்படும் மிளகாயின் விலை குறைவடைந்ததையிட்டு விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அதேவேளை புடோல் 20 ரூபாவுக்கும், முருங்கைக்காய் 100 முதல் 120 ரூபா வரையும் சில்லறை விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (66)

விரைவில் கார்கில்ஸ் திறப்பு; 350 பேருக்கு வேலைவாய்ப்பு

யாழ். வைத்தியசாலை வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 600 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் காகில்ஸ் நிறுவனத்தின் பல மாடிகளைக் கொண்ட வர்த்தக கட்டடத் தொகுதி விரைவில் திறந்துவைக்கப்படவுள்ளதாக அந்த நிறுவனத்தின் பொது முகாமையாளர் தேவகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். ஞானம்ஸ் விடுதியில் நடைபெற்ற சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக நிறுவனங்களுக்கான செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்விடயத்தைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தகவல் தருகையில்,

இந்தக் கட்டடத் தொகுதியில் வர்த்தக நிலையங்கள், திரையரங்கம், சொகுசு அறைகள், விருந்தினர் பகுதி, பார்வையாளர் அரங்கம் என்பன அமையப்பெற்றிருப்பதாகவும் தெரிவித்த அவர், இதற்கென தமது நிறுவனம் வடக்கு கிழக்கிலிருந்து 350 இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கவிருப்பதாகத் தெரிவித்ததுடன், மாற்றுத் திறனாளிகளுக்குக் கூட தமது நிறுவனத்தில் வேலைவாய்ப்பு வழங்கப்படுவதாகவும், இதற்கு தமது நிறுவனம் இலங்கை தொழில் வழங்குநர் சம்மேளனத்துடன் ஒப்பந்தமொன்றை செய்திருப்பதாகவும் தெரிவித்தார். (பா)

தூக்கில் தொங்கிய இளைஞன் உயிரிழப்பு

(வடமராட்சி)

தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட இளைஞன் ஒருவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த சம்பவம் ஒன்று பொலிகண்டியில் இடம்பெற்றுள்ளது.

பத்திரகாளி கோயிலடியைச் சேர்ந்த சண்முகநாதன் பிரசாத் (வயது - 20) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

பிரஸ்தாப இளைஞன் தனது வீட்டு மாமரத்தில் கயிறு கட்டி தூக்கில் தொங்கியுள்ளார்.

இதனை மாமியார் கண்டு அயலவரின் உதவியுடன் அவரை மீட்டு மந்திகை ஆதார வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்த்தும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்றுக்காலை 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சடலம் மரண விசாரணைக்காக மந்திகை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (116)

மலேசியாவில் வேலைவாய்ப்பு

மலேசியாவில் பல்வேறு பட்ட கம்பனிகளில் வேலை வாய்ப்புக்கள் பல துறைகளிலும் உண்டு.

தொடர்பு: 0779181018 (R/306)

சிறு விளம்பரம்

விற்பனைக்கு

விறாத்துப்பருவ உள்ளூர் கோழிக்குஞ்சு - 375/=, தென்னம்பிள்ளை 75/=, பப்பாசிக்கன்று 25/=, கமுகங்கன்று - 25/= தொடர்பு: 0776556494 (R/253)

நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 173 | திகதி 2013.07.26 | வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள்: 01 04 26 55 | ஆங்கில எழுத்து: I

பரிசுத் தொகை ரூபா. 14,858,140/- வெல்லப்படவில்லை

பரிசு வகை	பரிசுத் தொகை ரூ.	வெற்றியாளர்களின் எண்ணிக்கை	மொத்த பரிசுத் தொகை ரூ.
4 இலக்கங்களுக்கு	1,000,000/-	01	1,000,000/-
ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு	50,000/-	09	450,000/-
ஏதேனும் 3 இலக்கங்களுக்கு	1,000/-	209	209,000/-
ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு	1,000/-	408	408,000/-
ஏதேனும் 2 இலக்கங்களுக்கு	60/-	9007	540,420/-
ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு	40/-	4893	195,720/-
ஏதேனும் 1 இலக்கத்திற்கு	20/-	119156	2,383,120/-
ஆங்கில எழுத்திற்கு	20/-	17254	345,080/-
நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம்	14,858,140/-	-	-
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை			5,531,340/-

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்கொகை ரூபா. 15,091,420/-

2013.07.30ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

நியத்த ஜய

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47 (C/2962) web : www.dlb.lk

மாபெரும் விளையாட்டுப்போட்டி சரவணையில் ஆரம்பம்

(வேலணை)

வேலணை, சரவணை நாக பூசணி அம்மன் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் தீவகத்தின் மாபெரும் விளையாட்டுப் போட்டியினை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளார்.

வேலணை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சரவணை நாக பூசணி அம்மன் விளையாட்டுக் கழகத்தின் எட்டாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அதன் தலைவர் தயானந்தன் தலைமையில் நாகபூசணி அம்மன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இதில் சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், துடுப்பாட்டம், கயிறு இழுத்தல், மாட்டு வண்டிச்சவாரி, சறுக்குமரம் ஏறுதல் போன்ற பல்வேறு போட்டிகள் நேற்று நடைபெற்றதுடன் இன்றும் நடைபெறுகின்றன.

இதேவேளை நேற்று ஈ.பி.டி.பியின் மாவட்ட அமைப்பாளர் கமல், சரவணை நாய்க்குட்டியான் திடலினை பொதுப்பயன்பாட்டிற்கு திறந்து வைத்ததுடன், இதன் பெயர்ப்பலகையினையும் திரைநீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து அப்பகுதி மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் அங்கு கூடியிருந்த மக்களுடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்வில் வேலணை பிரதேச சபைத் தவிசாளர் சிவராசா (போல்), வேலணை பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக நிறுவனங்களுக்கான செயலமர்வு நேற்று யாழ். ஞானம்ஸ் விடுதியில் நடைபெற்ற போது யாழ். மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் பூரணச்சந்திரன் உரையாற்றுவதையும், வளவாளர்கள் அமர்ந்திருப்பதையும் மாற்றுத்திறனாளிகளுக்கு காகில்ஸ் நிறுவனத்தின் பொது முகாமையாளர் சான்றிதழ் வழங்கி கௌரவிப்பதையும் காணலாம். (படங்கள்: பா.பார்த்தீபன்)

மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்பட ஒன்றிணைந்த செயற்பாடு அவசியம்

யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர்

(குருநகர்)

குருநகர் பிரதேச கடற்தொழிலாளர்கள் வாழ்வாதாரம் தொழில்சார் பாதிப்புக்களால் சமீபகாலத்தில் மிகுந்த நெருக்கடிக்கு உட்பட்டிருபபதை நாம் அறிவோம். உங்களின் இதுபோன்ற ஒன்றிணைந்த செயற்பாடுகளால் உங்கள் தொழில் மற்றும் வாழ்வாதாரங்களை கட்டியெழுப்பமுடியும் என யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரி வித்துள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் மவுண் கார்மேல் வீதியில் அமைந்துள்ள குருநகர் கிழக்கு கிராமிய கடற்றொழில் அமைப்பின் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைப்பின் உப தலைவர் அந்தோனி யேசுதாசன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.இதில் கணேசமூர்த்தி தொடர்ந்தும் பேசுகையில், கடற்தொழிலாளர்கள் முகம் கொடுத்து வரும் பல்வேறு நெருக்கடிக்களில் இருந்து மீட்சி அடைய வேண்டிய தேவை அனைத்துத் தொழிலாளர்களுக்கும் உண்டு. அவர்களின் ஒன்றிணைந்த முன்னெடுப்புகளாலேயே தடைகளை வென்று வாழ்வில் முன்னேற முடியும் என்றார்.

மாவட்டக் கடற்றொழில் பரிசோதகர் பா.ரமேஷ்கண்ணா பேசுகையில் தெரிவித்ததாவது,

இந்த அமைப்பு சென்ற வருடம் அமைச்சின் அனுமதியுடன் உருவாக்கப்பட்டது. இக் கூட்டத்தில் தொழிலாளர்கள் பெருமளவில் கலந்து கொண்டிருப்பதைக் காண மகிழ்ச்சியாக உள்ளது.

இந்த தொழிலாளர்களுக்கு பெரிய தேவை உள்ளதனால் தான் இந்த அமைப்பை முன்னாள் தலைவரின் மறைவின் பின்பாகவும் கட்டியெழுப்ப முயன்றுள்ளனர்.

அமைப்பு நல்ல வகையில் நடைபெற்று வந்தால் அதற்கு எங்களுடைய உதவிகளும் கிடைக்கும் என்றார்.

மாவட்டக் கிராமிய கடற்றொழில் சம்மேளனத் தலைவர் நா.பொன்னம்பலம் முன்னிலையில் புதிய நிர்வாகத் தெரிவு நடைபெற்றது.

தலைவராக செ.மத்தியூஸ், உபதலைவராக செ.கிறிஸ்துராஜா, செயலாளராக யோ.றொபின்சன், உபசெயலாளராக அ.பிளேமின், பொருளாளராக பே.அன்ரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாகசபை உறுப்பினர்களாக யே.கொன்ஸன்ரைன், த.ஜெகநாதன்,அ.கொன்ஸன்ரைன், செ.றூபச்சந்திரன் அ.யேசுதாஸன்,அ.யூடா ஆகியோரும் தெரிவாகினர். (68)

வடமாகாணத்தில் 15 மோப்ப நாய்கள்



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் பதினைந்து மோப்ப நாய்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டி ருப்பதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏக்க நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் மூன்று மோப்ப நாய்களும் கே.கே.எஸ். பொலிஸ் பிரிவில் மூன்றும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் மூன்றும ஈரப்பெரியகுளம் மற்றும் வவுனியா பொலிஸ் நிலையங்களில் தலா மூன்று மோப்பநாய்களுமாகவே வடமாகணத்தில் 15 மோப்பநாய்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இவை குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை இனங்கண்டு கொள்ளும் விதத்தில் விசேடமாக பயிற்றுவிக்கப்பட்டிருப்பதாகவும் வடபகுதியில் இடம் பெறும் குற்றச் செயல்களின் விசாரணையின் போது இவை சேவையில ஈடுபடுத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார் (பா,இ)

நோன்பு நூல் வழங்கல்

(திருநெல்வேலி)

பண்ணை ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் தேவஸ்தான வரலட்சுமி நோன்பு நூல் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த 19 ஆம் திகதியிலிருந்து நோன்பு நூலுக்கான பதிவுகள் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நோன்பு நூல் பதிவுகளை செய்து கொள்ள விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (137)

மாணவன் சாதனை

(வடமராட்சி)

யாழ்.தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை மாணவன் இராஜசேகர் விதுஷன் அகில இலங்கைத் தமிழ் தினப் போட்டியில் பிரிவு I ஆக்கத் திறன் வெளிப்பாடு (கதைகூறல்) எனும் போட்டியில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் முதலாமிடத்தைப்பெற்றுள்ளார்.

இவரின் சாதனையை பாடசாலை சமூகத்தினர் பாராட்டியுள்ளனர் (116)

பயனாளிகளை இணைக்கும் விசேட நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

இலங்கை சமூகப்பாதுகாப்புச் சபையின் கிளிநொச்சி மாவட்ட விழிப்புணர்வு நிகழ்வும் , புதிய பயனாளிகளை இணைப்பதற்கான நடமாடும் சேவை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மு.ப 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பிரதிநிதிகள் கௌரவிக்கப்பட உள்ளனர்.

கிளிநொச்சியில் இவ்வருடம் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதும் மிகக் குறுகிய காலத்தில் சிறந்த அடைவு மட்டத்தைக் காட்டியமைக்காகவே இவர்கள் கௌர விக்கப்பட உள்ளனர்

இதன்படி பளை பிரதேச செயலர் சி.சத்தியசீலன், பூநகரி பிரதேச செயலர் கே.எஸ். வசந்த குமார், கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் , மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வே.தபேந்திரன், பளை சமூக சேவைகள் அதிகாரி செல்வி.கே.கேதினி, பூநகரி சமூக சேவைகள் அதிகாரி செ.சுரேந்திரா , கரைச்சி சமூக சேவைகள் அதிகாரி ப.சிவகரன் , பூநகரி பிரதேச கிராம அலுவலர் பி.பாலச்சந்திரன் , பளை பிரதேச கிராம அலுவலர்களான ஆர்.சுதர்சன், ஏ.சுபாஜினி,எஸ். ஜீவிதா , கரைச்சி பிரதேச கிராம அலுவலர் எஸ். சேந்தன் , பட்டதாரி பயிலுநர்களான பளை பிரதேச செயலகப்பிரிவு திருமதி. எஸ். ஜெனிற்ரா, கரைச்சி பிரதேச செயலகப் பிரிவு செல்வி. தி.காயத்திரி, பூநகரி பிரதேச செயலகப் பிரிவு ஜே. சுபாஜினி ஆகியோரே இதில் கௌரவிக்கப்பட உள்ளனர்.

(90)

விண்ணப்பம் கோரல்

(அச்சுவேலி)

நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்களின் போது தேர்தல் கடமைகளில் பல்வேறுபட்ட பணிநிலைகளிலும் தகுதியானவர்களை ஈடுபடுத்துவதற்காக அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள், ஆகியவற்றில் கடமையாற்றும் அரச ஊழியர்களிடமிருந்து அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரச ஊழியர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை தமக்குரிய நிறுவனங்களினூடாகவே பெற்று அவற்றைப் பூர்த்தி செய்து அனுப்பி வைப்பதற்கு ஏதுவாக இது தொடர்பான சுற்றுநிருபமும் விண்ணபப்படிவங்களும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியினால் உரிய அரச நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ்விண்ணப்பப் படிவங்களை விலக்களிக்கக் கூடிய காரணங்களை கொண்டுள்ள அலுவலர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து ஊழியர்களும் தாமதிக்காது சரியான முறையில் பூரணப்படுத்தி அனுப்பிவைகக்கும்படி வேண்டப்பட்டுள் ளனர். (03)

ஓய்வூதியர் சங்கத்தில் இணையுமாறு கோரிக்கை

(முழங்காவில்)

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள 19 கிராம சேவகர பிரிவுகளைச் சேர்ந்த 54 அரச ஓய்வூதியர்கள் பூநகரி பிரதேசத்தில் உள்ள வங்கிகளில் தமது ஓய்வூதியத்தை பெறுகின்ற போதும் தமக்கென இயங்கும் பிரதேச அரச ஓய்வூதியர் சங்கத்தில் அநேகமானோர் இணையத்தவறியுள்ளதனால் தமக்கு கிடைக்கக்கூடிய சலுகைகளை இழந்துள்ளதாக பூநகரிப்பிரதேச ஓய்வூதியச் சங்க தலைவர் கவலை தெரிவித்துள்ளார்.

தற்போது பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் சங்கத்தில் இதுவரை இணையாத 40 இறகு மேற்பட்ட அரச ஓய்வூதியர்களை உரிய சங்கத்தில் அங்கத்துவ படிவங்களை பெற்று சங்கத்தில் இணைந்து சங்கத்தைப் பலப்படுத்துமாறும் கிடைக்கக் கூடிய சலுகைகளை பெற்றுக்கொள்ளுமாறும் தலைவரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (112)



கிளிநொச்சியில் நேற்று முன்தினம் ஆரம்பமான சர்வதேச வர்த்தக கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் கண்காட்சியின் நுழைவாயிலையும், விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் காட்சிப்படுத்தப்பட்ட பனைசார் உற்பத்திப் பொருட்களையும் காணலாம். (29)

நீ எப்போது யாருமற்ற ஏழை, எளியவர்களுக்கு உதவுகிறாயோ, அப்போது ஆண்டவன் உன்னிடம் 'கடன்காரன்' ஆகிறான். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

பழைய குருடியே கதவைத் திறப்பதா!

நம் பிரதேசத்தில் இராணுவ நிர்வாகத்துக்கான நியாயங்களையே தொடர்ந்து வழங்காமல், சிவில் நிர்வாகத்தைக் கையேற்றுக்கொண்டு, தென்னிலங்கைத்தரப்பின் சந்தேகங்களைப் போக்குவதன் வாயிலாக மெல்ல மெல்ல வேண்டிய அதிகாரங்களையும் பெற்று வளம்பெருகும் நம் கனவுப் பிரதேசத்தைக் கட்டியெழுப்பக்கூடிய காலம் வடக்கிற்கு வந்திருக்கிறது.

மனித வரலாற்றில், மிகப் பழமையான நிர்வாகம் இராணுவ நிர்வாகம்தான். நூறு ஆண்டுகளுக்கு முன்புவரைகூட, உலகின் மிகப் பெரும் நிறுவனங்கள், அரசுகளின் படைகளே. நாட்டிற்காக உயிரை விடவும், வெற்றி பெற்றால், கொஞ்சம் கொள்ளையடித்துக் கொள்ளவும் அனுமதி பெற்ற தனி நபர்கள் அடங்கிய மாபெரும் குழு. பெரும்பாலும், உடல் பலத்தாலும், அரச பக்தி அல்லது தேச பக்தியாலும் நிர்வகிக்கப்பட்டு வந்த ஒன்று.

அக்காலகட்டத்தில் எழுதப்பட்ட பல நூல்களும், போர்த் தந்திரங்கள், நாட்டை நிர்வகிப்பது போன்றவையே. Sun Tzu வின் போர்க்கலை, வள்ளுவரின் திருக்குறள், சாணக்கியரின் அர்த்த சாஸ்திரம், மாக்கியாவில்லியின் இளவரசன், அடம் ஸ்மித்தின் "wealth of Nations" போன்றவை படையினர் மூலம் நாட்டை நிர்வகிப்பது பற்றியே பேசியிருககின்றன.

முதலாம் உலகப் போர் காலத்தில், மேலாண்மை என்னும் கோட்பாடு மெல்ல மெல்ல வலுப்பெற்றது. ஒவ்வொரு வேலையையும் சிறு சிறு பாகங்களாகப் பிரித்து, அதற்குத் தேவையான நேரம், உழைப்பு முதலியவை கணிக்கப்பட்டு, வேலையை மேலாண்மை செய்யும் ஒரு நோக்கு தொடங்கியது. இவற்றை சாதாரண பொதுமக்களிலிருந்து அவர்களால் தெரிவு செய்யப்பட்டு வருவோரே செய்யும் நிலை படிப்படியாக உருவாகியது.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்று வள்ளுவர் ஒரு நிர்வாகியின் திறனை வரையறுத்தார். சிறந்த தலைவர்களைத் தெரிவு செய்ய வேண்டிய மக்களின் பொறுப்பும் அதுவே.

நிர்வாகிகளை இரு வகைகளாகப் பிரிக்கலாம். தன் எல்லைக்குள்ளேயே சிந்தித்து அதற்குள் தம்மைத் தலைவர்களாக தக்கவைத்துக் கொள்பவர் ஒரு வகை. இவர்கள் மற்றவர்களையும் கணக்கிலெடுத்து அவர்களது தேவைகளையும் புரிந்து கொண்டு தடைகளை அகற்றி நிரந்தர இலக்கு நோக்கிச் செல்ல முடியாதவர்கள்.

இன்னொருவகை, தன் பிரிவு தாண்டி, தன் நிறுவனத்தின் இலக்கைத் தாண்டி, நிறுவனம் இயங்கும் சூழலையும் வெளிசக்திகளையும் அறிந்து கொண்டு, நிறுவனத்தின் நீண்டதூர இலக்கை நோக்கி, அவற்றை வழி நடத்தும் திறன் கொண்ட நிர்வாகிகள். இவர்கள்தான் தலைவர்கள்!

தம் தரப்பை மட்டுமல்லாது, எதிர்த்தரப்புகளின் எண்ணங்களையும் அவர்களுக்கும் இருக்கக் கூடிய சிக்கல்களையும் யதார்த்தத்தையும் ஒரு மனமுதிர்வுடன் எதிர்கொண்டு தாம் சார்ந்தோருக்கும் புறச் சூழலுக்கும் வெற்றிதேடித் தருபவர்களே மிகப் பெரும் தலைவர்கள்.

இப்போது தமிழ்மக்களுக்கு தங்களது தலைமை எதுவென்பதைத் தீர்மானித்துத் தேர்ந்துகொள்ள வேண்டிய காலம் மற்றுமொருமுறை வந்திருக்கிறது. இதுவரைகாலம்போல எதிர்ப்பு அரசியலின் மூலம், மக்களுக்கு எதையுமே சாதித்துத் தராமல் தங்கள் தலைமையை மட்டுமே காப்பாற்றி வருபவர்களையா அல்லது பகைமறப்பையும் இணக்கத்தையும் முயன்று இந்த நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களிடமும் உண்டாக்குவதன் மூலம் செழிப்பான எதிர்காலத்தைக் கொண்டுவரக் கூடியவர்களையா தலைவர்களாகத் தெரிவுசெய்து கொள்ளப்போகிறோம்? இந்த முடிவிலேயே நம் மக்களின் தொடர் அவலங்களை மாற்றும் விவேகம் தங்கியிருக்கிறது.

-ஆசிரியர்.

உயிர் குடிக்கும் புகைத்தல் பழக்கம்

வருடாவருடம் 20 ஆயிரம் பேர் பலி

உலக சுகாதார ஸ்தாபனம் அபாயமணி

புகையிலை பாவனையினால இலங்கையில் வருடாந்தம் 20 ஆயிரம் பேர் இறப்பதோடு 5 இலட்சம் பேர் பாதிக்கப்படுகின்றனர்.

புகைத்தல் பழக்கம் தடுக்கப்படாவிட்டால் இன்னும் இருபது வருடங்களில் புகைத்தல் பழக்கத்தால் வருடாந்தம் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை 40,000 ஆக அதிகரிக்கும் என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

புகையிலைக்கு எதிராக சுகாதார அமைச்சு பல செயற் திட்டங்களை முன்னெடுத்து வருவதோடு இதற்கு எதிராக புகையிலை கைத்தொழில் துறையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு உரிய பதில் வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் முன்வந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

புகையிலை பாவனைக்கு எதிராக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்து வருவதுடன் இதற்கு எதிராக புகையிலைக் கைத்தொழிற்துறையினர் செயற்பட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு உகந்த பதிலடி கொடுக்க உலக சுகாதார ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம் இரு பிரதிநிதிகளை அண்மையில் இலங்கைக்கு அனுப்பியிருந்தது. உலக சுகாதார ஸ்தாபன புகையிலைக்கு எதிரான திட்ட தலைவர் டாக்டர் அமந்டோ பெருகா, அமெரிக்க புகையிலை கொள்கை தொடர்பான சர்வதேச பிரிவு டாக்டர் ஸ்டெல்லா பியலொவுஸ் ஆகிய உயரதிகாரிகள், சுகாதார அமைச்சு, இலங்கை சுங்க போதை தடுப்பு பிரிவு, அபாயகர ஔடத கட்டுப்பாட்டு சபை, மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் பிரதிநிதிகளை சந்தித்து பேச்சு நடத்தினர். சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜெயதிலகவின் தலைமையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சின் செயலாளர், இலங்கைக்கு மட்டுமன்றி முழு உலகிற்கும் புகையிலை பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. உலகம் முழுவதும் புகையிலை காரணமாக வருடாந்தம் 50 இலட்சம் பேர் இறக்கின்றனர். புகையிலையினால் இலங்கையிலும் 20 ஆயிரம் பேர் இறக்கின்றனர். இலங்கையில் புகையிலைப் பாவனையை மட்டுப்படுத்த சுகாதார அமைச்சு பாரிய திட்டமொன்றை மேற்கொண்டுள்ளது.

இதற்காக 6 விடயங்களை உள்ளடக்கிய கொள்கைத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

புகையிலைப் பாவனை அடையாளம் காணுதல் மற்றும் தடுப்பதற்கான கொள்கை தயாரித்தல், புகையிலையின் பாதிப்பு குறித்து அறிவூட்டுதல் புகையிலை விளம்பரங்கள் மற்றும் பிரசாரங்களை தடை செய்தல், புகையிலை உற்பத்திக்கான வரிகளை அதிகரித்தல் என்பன இதில் அடங்கும். புகையிலை பாவனையை தடுக்க சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக புகையிலை கைத்தொழிலாளர்கள் எடுக்கும் செயற்பாடுகளுக்கு பதிலளிக்க உலக சுகாதார ஸ்தாபனம் முன்வந்தது குறித்தும் அமைச்சின் செயலாளர் நன்றி தெரிவித்தார்.

கணனி திருட்டு

கரவெட்டி யாக்கரு விநாயகர் வித்தியாலயத்தில் கணனி திருடப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு கூரை ஓடு பிரித்து இத்திருட்டு இடம்பெற்றுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. கணனியின் பாகமான திரைப்பகுதியே திருடப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை பாடசாலை அதிபர் இது குறித்து நெல்லியடிப்பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார். இத்திருட்டுச் சம்பவம் குறித்து நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன், அதிபர் மற்றும் காவலாளி ஆகிய இருவரும் கணனியை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸார் ஆலோசனை வழங்கியுள்ளனர். (116)

யுத்தம் ஓய்ந்த நாட்டில் படிப்படியாகவே முன்னேற்றம்

யதார்த்தம் சொல்கிறார் பிரிட்டிஷ் எம்.பி

மனித உரிமைகள் விடயத்தில் இலங்கையை பிரித்தானியாவுடன் ஒப்பிட முடியாது. யுத்தம் ஓய்ந்த நாட்டில் படிப்படியாகவே முன்னேற்றத்தைக் காணமுடியும் என்றும்

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் எலியேனர் லாயிங் தெரிவித்துள்ளார். 30 ஆண்டுகளாக யுத்தம் நீடித்து வந்த இலங்கையின் மனித உரிமை நிலைமைகளை, பிரித்தானியாவுடன் ஒப்பீடு செய்ய முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்காலம் குறித்து எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.இலங்கை நிலைமைகள் குறித்து சாதகமாகவே தாம் நோக்குவதாகக் குறிப்பிட்டுள்ளார். நல்லிணக்கம் மிகவும் முக்கியமானது எனவும், கடந்த காலத்திலேயே தேங்கிக் கிடப்பதில் பயனில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வட மாகாணசபைத் தேர்தல்கள் மிகவும் முக்கியமானவை எனவும், வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப் படுவார்கள் என எதிர்பார்ப்பதாகவும் எலியேனர் குறிப்பிட்டுள்ளார்.

நல்லூரில் ஆடிவேல் ரத பவனி பக்தி பூர்வமாக நிறைவு

நல்லூர் பால கதிர்காம தேவஸ்தானத்தின் ஆடிவேல் ரத பவனி மூன்று நாட்களின் பின்னர் நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் மீண்டும் தேவஸ்தானத்தை வந்தடைந்தது.

மின் விளக்குகளினால் அலங்கரிக்கப்பட்டு வேல், அருணகிரிநாதர், ஐராவதம், இடும்பன், நவல்ரா, தவில் நாதஸ்வரம், ரதம் என்பன வரிசையாகப் பவனி வந்த போது 'வழி எங்கிலும் 'அரோகரா' கோஷத்தை அடியார்கள் ஒலித்தபடி இருந்தனர். வான வேடிக்கை, தவில், நாதஸ்வரம், பேரிகை, கரகாட்டம், குதிரையாட்டம், தீப்பந்தம் போன்றவற்றுடன் பெருந்திரளான மக்கள் புடை சூழ பால கதிர்காமக் கந்தனின் பவனி இடம்பெற்றது.

கடந்த புதன்கிழமை 24 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நல்லூர் பாலகதிர்காம தேவஸ்தானததிலிருந்து புறபப்பட்ட ஆடிவேல் ரதம் பருத்தித்துறை வீதி,யாழ் நகர் அனைத்து வீதிகள், காங்கேசன்துறை வீதி ஆடியபாதம்வீதி வழியாக மீண்டும் பருத்தித்துறை வீதியை அடைந்து தேவஸ்தானத்தை வந்தடைந்தது.

மதியமும் இரவும் வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலயம் சிவன் கோவில், நாச்சிமார் கோவில், கொக்குவிலில் மஞ்சவண்ணப்பதி, திருநெல்வேலி சிவ காம சுந்தரி அம்மன் ஆலயம் என்பவற்றில் தங்கிச்சென்றது. பாலகதிர்காம ஆடிவேல் ரத பவனி 1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, இருபது வருட நிறைவை அடைந்துள்ளது.

நேற்று இரவு ரதம் தேவஸ்தானத்தை வந்தடைந்த பின்னர் கடந்த இருபது வருடங்களாகப் பால கதிர்காமக் கந்தனின் ரத பவனியின் போதும் உற்சவ காலத்தின் போதும் நிறைந்த ஒத்துழைப்பும் உதவியும் வழங்கிய நாதஸ்வரக்கலைஞர் கள், தொண்டர்கள் ஆகியோருக்குப் பாராட்டுவிழா எடுக்கப்பட்டது.

மூத்த பத்திரிகையாளர்களான என்.கே. குலசிங்கம், எஸ். இராமச்சந்திரன் ஆகியோர் தேவஸ்தான முதல்வர் கு.குமாரக்குருக்களினால் பொன்னாடை போர்த்தப்பட்டும் மாலை அணிவித்தும் பாராட்டுப்பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (137)

புலிகளால் மக்கள் மீது திணிக்கப்பட்ட தமிழ்த் தேசியத்தையே இன்று கூட்டமைப்பு தூக்கிப் பிடிக்கின்றது. புலிகளின் தமிழ்த் தேசியம் தனிநாடு என்ற கருத்துருவத்தின் வெளிப்பாடு. தமிழ்த் தேசியம் என்ற பதத்தின் மூலம் தனிநாட்டையே புலிகள் அடையாளப்படுத்தினார்கள். இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தைக் கூட்டமைப்பு முன்வைக்காத போதிலும் அதன் தலைவர்கள் ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்று கூறுகின்றார்கள். உண்மையான கருத்தீடுபாட்டுடன் இதை அவர்கள் கூறுகின்றார்களென்றால் தனிநாட்டை அடையாளப்படுத்தும் தமிழ்த் தேசியத்தை வலியுறுத்துவது பொருத்தமானதாக இல்லை. தமிழ்த் தேசியத்தை இதயபூர்வமாக ஏற்றுக்கொள்வதானால் ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்று கூறுவது ஏமாற்றுக் கோஷம்.

தமிழ்த் தேசியம்

கூட்டமைப்பின் இன்னொரு மாயை

■ சங்கர சிவன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனப்பிரச்சினையின் தீர்வுக்காக எந்தக் கொள்கையும் இல்லாமல் இரண்டு மாயைகளை வைத்து மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கின்றது. ஒன்று சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்ற மாயை. மற்றது தமிழ்த் தேசியம் என்ற மாயை.

சர்வதேச சமூகம் ஒரு கானல் நீர் என்பது இப்போது மக்களுக்கு விளங்கத் தொடங்கிவிட்டது. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று நான்கு வருடங்களாகக் கூட்டமைப்புத் தலைவர்கள் கூறி வருகின்றார்கள். கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் பிரசாரத்தின்போது சர்வதேச சமூகம் பற்றி அளவுக்கதிகமான நம்பிக்கையைக் கூட்டமைப்புத் தலைவர்கள் வளர்த்தார்கள். தீர்வுத் திட்டத்துடன் சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்தின் கதவைத் தட்டுகின்றது என்று சொன்னார்கள். ஆனால், எதுவும் நடக்கவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாகச் சர்வதேச சமூகம் இதுவரை எதுவும் செய்யவில்லை என்பது தான் உண்மை நிலை.

இனப்பிரச்சினையிலோ அதற்கான தீர்விலோ சர்வதேச சமூகத்துக்கு அக்கறை இல்லாத போதிலும் கூட்டமைப்புத் தலைமை அதை எல்லாவற்றுக்கும் தீர்வான மந்திர வார்த்தையாகப்

"நாங்கள் ஐக்கிய இலங்கையில் எங்களுக்கான தீர்வைப் பெறுவதற்குத் தமிழ்நாட்டு நண்பரகள் இடமளிக்க வேண்டும்" என்று நீதியரசர் விக்னேஸ்வரன் "ஹிந்துஸ்தான் ரைம்ஸ்" பத்திரிகைக்கு அளித்த பேட்டி கூட்டமைப்பு வட்டாரங்களிலும் புலம்பெயர் அமைப்புகள் மத்தியிலும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாகச் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்ற கூட்டமைப்பின் நிலைப்பாட்டையும் நீதியரசரின் கூற்று கேள்விக்கு உட்படுத்துகின்றது.



பயன்படுத்துகின்றது. வட மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக நீதியரசர் விக்னேஸ்வரனை நிறுத்திய விடயத்திலும் சம்பந்தன் சர்வதேச சமூகத்தை முடிச்சுப் போடாமல் விடவில்லை. அதிருப்தி தெரிவித்த தமிழரசுக் கட்சிக்காரரைச் சாந்தப்படுத்துவற்காகச் சம்பந்தன் இந்த மந்திர வார்த்தையைப் பாவித்தார். அதற்கு உடனடியாகவே மறுப்பும் வந்தது. விக்னேஸ்வரனின் நியமனத்தில் எந்தவொரு வெளிநாடும் தலையிடவில்லை என்றார் சுமந்திரன்.

நீதியரசர் விக்னேஸ்வரன் "ஹிந்துஸ்தான் ரைம்ஸ்" பத்திரிகைக்கு அளித்த பேட்டி "தமிழ்த் தேசிய" வட்டாரங்களில் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. "ஒபாமாவுக்கான தமிழர்கள்" என்ற பெயரில் அமெரிக்காவில் இயங்கும் அமைப்பு இப்பேட்டியைக் கடுமையாக விமர்சித்ததோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விக்னேஸ்வரனுக்குப் பதிலாக வேறொருவரை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்திருக்கின்றது. "நாங்கள் ஐக்கிய இலங்கையில் எங்களுக்கான தீர்வைப் பெறுவதற்குத் தமிழ்நாட்டு நண்பர்கள் இடமளிக்க வேண்டும்" என்று நீதியரசர் கூறியதே கூட்டமைப்பு வட்டாரங்களிலும் புலம்பெயர் அமைப்புகள் மத்தியிலும் சலசலப்பை ஏற்படுத்தியது. எல்லாவற்றுக்கும் மேலாகச் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்ற கூட்டமைப்பின் நிலைப்பாட்டையும் நீதியரசரின் கூற்று கேள்விக்கு உட்படுத்துகின்றது.

எடுத்ததற்கெல்லாம் தமிழ்த் தேசியம் என்று கூறும் கூட்டமைப்புத் தலைவர்கள் அது எதைக் குறிக்கின்றது என்று கேட்டால் தெளிவான பதிலைத் தருவார்களோ தெரியவில்லை. தேசியவாதம் என்பதே இவர்களின் கையில் தேசியம் என்று சுருங்கிவிட்டது.

தேசியவாதம் பொதுவாகவே பிற்போக்கானது. தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்களைப் பலவீனப்படுத்துவற்கும் ஒரு இனம் மற்றைய இனங்களிலும் பார்க்க மேலானது என வலியுறுத்துவதற்குமே தேசியவாதம் பெருமளவில் பயன்பட்டிருக்கின்றது. தேசிய இனப்பிரச்சினைகளில் பூர்ஷுவாக்களும் குட்டி பூர்ஷுவாக்களும் தேசியவாதத்தைத் தூக்கிப் பிடிப்பது வழக்கம். எனினும் தேசிய விடுதலைப் போராட்டத்தின் குறிப்பான ஒரு கட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய வாதம் தேசிய மீளெழுச்சிக்கும் அரசியல் மற்றும் பொருளாதார சுதந்திரத்துக்குமான ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கும்போது அது ஜனநாயகத் தன்மை கொண்டதாக அமையும். இந்தப் பின்னணியிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழ்த் தேசியத்தைப் பார்க்க வேண்டும்.

ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய வாதம் ஜனநாயகத்தன்மை கொண்டதாக அமைவது இரண்டு விடயங்களில் தங்கியிருக்கின்றது. ஒன்று ஏகாதிபத்திய எதிர்ப்பு. மற்றது இன மீளெழுச்சி. கூட்டமைப்புத் தலைவர்கள் ஏகாதிபத்திய நாடுகளை நேச சக்திகளாக கருதுவதோடு இனப்பிரச்சினையின் தீர்வுக்கான கொள்கை எதுவும் இல்லாமல் வெறுமையை நோக்கிப் பயணிப்பதால் தமிழ்த் தேசியத்தில் ஜனநாயகத் தன்மை இல்லை.

தேசியவாதத்தின் தோற்றம் இரண்டு விதமாக அமையலாம். போராட்டச் செயற்பாட்டின்போது மக்கள் மத்தியில் கருக்கொள்ளும் தேசியவாதத்தைத் தலைமை ஏற்று முன்னெடுத்துச் செல்வது ஒரு வகை. தலைமை மட்டத்தில் கருக்கொண்டு கீழ்நோக்கித் திணிப்பது இன்னொரு வகை. முதலாவது வகைக்குப் பிரெஞ்சுப் புரட்சியின்போது தோன்றிய தேசியவாதத்தையும் இரண்டாவது வகைக்கு ஹிட்லரின் காலத்து ஜேர்மன் தேசியவாதத்தையும் உதாரணமாகக் கூறலாம். புலித் தலைமையினால் கீழ் நோக்கித் திணிக்கப்பட்டதே தமிழர் தேசியம். ஹிட்லரின் ஜேர்மன் தேசியவாதம் ஜேர்மனியின் அழிவுக்கு வழிவகுத்தது போல் புலிகளின் தமிழ்த் தேசியம் தமிழ் மக்களின் அழிவுக்கு வழிவகுத்தது. இந்த வகையில் தமிழ்த் தேசியம் அழிவுகரமானது.

ஆதிக்க சக்திகள் வகுத்த சட்டங்களும், சம்பிரதாயங்களும் தேசிய வாதக் கோரிக்கைகள் நிறைவேறுவதற்குத் தடையாக இருக்கும் நிலையில் தேசியவாதம் அதன் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு எந்த வழியை நாடுகின்றது என்பதிலேயே அதன் முற்போக்குத் தன்மையும் பிற்போக்குத் தன்மையும் தங்கியுள்ளன. பிற்போக்கு நிலைப்பாட்டைக் கொண்ட தலைமை எப்போதும் பிற்போக்குப் பாதையிலேயே செல்லும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நடைமுறைச் சாத்தியமானதும், தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உகந்ததுமான பாதையை நிராகரித்து நடைமுறைச் சாத்தியமற்றதும் அழிவுகரமானதுமான பாதையைத் தேர்ந்தெடுத்ததால் தமிழ்த் தேசியம் பிற்போக்கானது.

புலிகளால் மக்கள் மீது திணிக்கப்பட்ட தமிழ்த் தேசியத்தை இன்று கூட்டமைப்பு தூக்கிப் பிடிக்கின்றது. கூட்டமைப்புத் தலைவர்கள் வெளிப்படுத்தும் அரசியல் நிலைப்பாட்டுக்கும் தமிழ்த் தேசியத்துக்கும் இடையிலான முரண்பாட்டை அவர்கள் விளங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. புலிகளின் தமிழ்த் தேசியம் தனிநாடு என்ற கருத்துருவத்தின் வெளிப்பாடு. தமிழ்த் தேசியம் என்ற பதத்தின் மூலம் தனிநாட்டையே புலிகள் அடையாளப்படுத்தினார்கள். இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தைக் கூட்டமைப்பு முன்வைக்காத போதிலும் அதன் தலைவர்கள் ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்று கூறுகின்றார்கள். உண்மையான கருத்தீடுபாட்டுடன் இதை அவர்கள் கூறுகின்றார்களென்றால் தனிநாட்டை அடையாளப்படுத்தும் தமிழ்த் தேசியத்தை வலியுறுத்துவது பொருத்தமானதாக இல்லை. தமிழ்த் தேசியத்தை இதயபூர்வமாக ஏற்றுக்கொள்வதானால் ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்று கூறுவது ஏமாற்றுக் கோஷம்.

தனிநாட்டை நோக்கிய பயணத்துக்காகவே தமிழ்த் தேசியம் என்ற பதத்தைப் புலிகள் பயன்படுத்தினார்கள். கூட்டமைப்பும் அதே நோக்கத்துக்காகவே தமிழ்த் தேசியத்தைக் கையில் எடுக்கின்றதா? அப்படி இல்லையென்றால் தமிழ்த் தேசியம் என்ற தேசியவாதத்தின் மூலம் எத்தகைய தீர்வை நோக்கிப் பயணிக்கின்றார்கள் என்பதைக் கூட்டமைப்புத் தலைவர்கள் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

இனநல்லிணக்க முயற்சிகளில் இதுவரை சாதித்தது என்ன?

(கொழும்பு)

யுத்தத்துக்குப்பிந்திய இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி தொடா பாகவும், இன· நல்லினக்கம் தொடர்பாகவும் சர்வதேச நீதி மன்றம் இலங்கை அரசிடம் விபரம் கோரியுள்ளது.

இவ்வாறான நிலமைகள் குறித்தும் நாட்டில் உள்ள இனங்களுக்கிடையில். நல்லிணக்கத்தை ஏற்படுத்து வதற்காக அரசு இது வரை மேற்கொண்ட முயற்சிகள் குறித்தும் சர்வதேச நீதிமன்றத்துக்கு விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது.

இதற்காக ஏற்கனவே ஹோககில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதி ஹசாசி ஒவாபாவை, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது, கடந்த காலங்களில் இலங்கையின் பல்வேறு துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் அமைச்சர், நீதிபதிக்கு விளக்கமளித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இந்து சமுத்திரத்தின் பாதுகாப்புத் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டதாவும் தெரிவிக்கப்படுகிறது.

தெரிவுக்குழுவில் இருந்து வெளியேறுவேன்

அமைச்சர் விமல் எச்சரிக்கை

அமைச்சர் விமல் வீரவன்ச பாராளுமன்றத் தெரிவுக்குழுவிலிருந்து விலகப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தேசியப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்படாவிட்டால், தெரிவுக்குழுவிலிருந்து விலக நேரிடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காணி காவல்துறை அதிகாரங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரைவில் தீர்மானிக்கப்பட வேண்டுமென அவர வலியுறுத்தியுள்ளார்.

காணி காவல்துறை அதிகாரங்கள் தொடர்பில் உடனடியாக பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆராய வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

முக்கியமான விடயங்களுக்கு உரிய முன்னுரிமை அளிக்கப்படாவிட்டால் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதில் பயனில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆஸி.செல்ல முயற்சி மூவர் கைது



சட்ட. விரோதமாக அவுஸ்ரேலியா செல்வதற்குரிய ஏற்பாடுகளுடன் பதுங்கியிருந்த மூவரைத்தாம் கைதுசெய்து இருப்பதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சந்திவெளி எனுமிடத்தில் வைத்து இவர்கள் மூவரும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலை தொடர்ந்து இவர்கள் கைது செய்யப்பட்டனர்.கைதானவர்கள் மூவரும் வடபகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் கிழக்கிலிருந்து கடல் மார்க்கமாக இவர்கள் அவுஸ்ரேலியா நோக்கிய கடற்பயணத்தை மேற்கொள்ள உத்தேசித்திருந்தனர் என்றும் விசாரணையின் மூலம் தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்களை நீதிமன்றத்தில். ஆஜர் செய்வதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டிருப்பதாக ஏறாவூர் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

தெரிவுக்குழுவுக்கு மனு கொடுக்க பொதுமக்களுக்கு வாய்ப்பு

13ஆவது திருத்தச்சட் டத்தைப் பலவீனப்படுத்தும் நோக்கில் இலங்கை அரசின் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின 2 ஆவது அமர்வு நேற்றுமுன்தினம் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம்பெற்றது.

பொதுமக்களிடம் இருந்து கருத்தைப்பெற்று திருத்தங்களை செய்ய, அரசதரப்பு பிரதிநிதிகளை மட்டுமே உள்ளடக்கிய தெரிவுக்குழு முன்னதாக முடிவு செய்திருந்தது.

இதுதொடர்பான அறிவிப்பு பத்திரிகைகளில் வெளியிடப்பட்டதுடன், வரும் ஓகஸ்ட் 15ஆம் திகதிக்குள் கருத்துகளைத் தரும்படியும் கேட்கப் பட்டிருந்தது.

இந்தநிலையில், தெரிவுக்குழுவின் 2ஆவது அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றபோது, ஊடகங்களில் வெளியிடப்பட்ட பொதுமக்களுக்கான இந்த அறிவிப்பு தெளி வற்றிருப்பதாக உறுப்பினர்கள் சிலர் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், மீண்டும் தெளிவான அறிவிப்பை வெளியிட்டு, அதற்கான கால அவகாசத்தையும நீடிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதையடுத்து, தெளிவான அறிவிப்பை மீண்டும் வெளியிட்டு, பொதுமக்கள் கருத்தை தெரிவிப்பதற்கு ஓகஸ்ட் 15ஆம் திகதிவரை ஒரு மாதகால அவகாசத்தை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தனிநபர்கள், குழுக்கள், அமைப்புக்கள் தமது கருத்துக்களை வாய்மூல சாட்சியாக அளிக்க நாடளுமன்றத் தெரிவுக் குழு வாய்ப்பளிக்கவுள்ளது.

தூங்கி விழுந்தார் சாரதி மதிலுடன் மோதியது பஸ்

11 பேர் படுகாயம்



கொழும்பில் இருந்து மாத்தறை நோக்கி பயணித்த தனியார் சொகுசு பஸ் பலபிட்டிய ரந்தோம்ப பகுதியில் சுவரில் மோதி விபத்துக்குள்ளானதில் 11 பயணிகள் காயமடைந்துள்ளனர்.

அவர்களில் ஐவரின் நிலை கவலைக்கிடம் என்பதால் அவர்கள் கராபிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 5 மணியளவில் இவ்விபத்து ஏற்பட்டதாகவும் சாரதி சுமார் நான்கு தடவைகள் நித்திரையில் இருந்ததை கண்ட பயணிகள் சத்தமிட்டுள்ளதாக ஆரம்பக்கட்ட பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சின்னத்துரை ராஜேந்திரன் வடக்கில் ஜே.வி.பி. வேட்பாளர்

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர்களை ஜே.வி.பி தெரிவு செய்துள்ளது.

இதனடிப்படையில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஜே.வி.பியின் முதன்மை வேட்பாளராக சின்னத்துரை ராஜேந்திரன் போட்டியிட உள்ளார்.

வட மேல் மாகாண சபைத் தேர்தலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கமால் குணரத்ன போட்டியிடுகிறார். மத்திய மாகாண சபையின முதன்மை வேட்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கமமே கெதர திஸாநாயக்க போட்டியிடுகிறார்.

மாகாண சபைகளுக்கான வேட்புமனுக்களை ஜே.வி.பி எதிர்வரும் 31 ஆம் திகதியும், முதலாம் திகதியும் தாக்கல் செய்ய தீர்மானித்துள்ளது.

சீனியில் இரசாயனம் இல்லை பகுப்பாய்வில் உறுதி

இறக்குமதி செய்யப்படுகின்ற சீனியில் உபாதை மிக்க இரசாயன கலவைகள் எவையும் கலக்கப்படவில்லை என்று, இரசாயன பகுப் பாய்வில் உறுதியாகி இருப்பாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படுகின்ற சீனி வகைகளில் கெட்மியம் மற்றும் ஆசனிக் போன்றவை காணப்படுவதாக முன்னர் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சு பரிசோதனைக்கு உட்படுத்தி இருந்தது. இந்தப் பரிசோதனைகளில் அவ்வாறான பொருட்கள் எவையும் கலக்கப்பட்டிருக்கவில்லை என்று உறுதியாகி இருப்பதாக, சுகாதார அமைச்சின் சுற்றாடல் சுகாதார பிரிவின் பணிப்பாளர் ஆனந்த ஜயலால் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஸ் பிரஜை கொலை அமைச்சர் பசில் வருத்தம்

பிரித்தானிய தன்னார்வ தொண்டர் குரஹாம் சாக்கீ படுகொலைச் சம்பவத்திற்காக, இலங்யையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபகஷவருத்தம் வெளியிட்டதாக பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் சிமோன் டான்சூக் தெரிவித்துள்ளார்.

குர்ஹாம் சாக்கீ படுகொலை மற்றும் அவரது ரஸ்ய காதலி தாக்கப்பட்டமைக்காக அமைச்சர் பசில் ராஜபக்ஷ மன்னிப்புக் கோரியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவம் குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் சட்ட மா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் தொடர்ச்சியாக கேள்வி எழுப்ப உத்தேசித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய நாடாளுமன்றில் இது குறித்து கேள்வி எழுப் பப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

குர்ஹாம் சாக்கீ கொலை குறித்த விசாரணைகள் நிறைவடையாவிட்டால் அது குறித்து பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளின் போது கேள்வி எழுப்ப வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

2011ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினமன்று குர்ஹாம் சாக்கீ மற்றும் அவரது ரஸ்ய காதலி தாக்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதலில தன்னார்வ தொண்டரான குர்ஹாம் சாக்கீ படுகொலை செய்யப்பட்டார்.



குமண வனவிலங்குப் பூங்காவுக்கு அண்மைய வாரங்களில் உல்லாசப்பயணிகள் படையெடுத்து செல்ல ஆரம்பித்துள்ளனர். அங்கே உள்ள வனவிலங்குகளின் காட்சிகள் ...

கரைச்சி பகுதி மாற்றுவலுவுள்ளோருக்கு நலனோம்பு அட்டை வழங்கும் திட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப்பிரிவில் வசிக்கும் மாற்றுவலுவுள்ளோர்களுக்கு சமூக நலனோம்பு அடையாளஅட்டை வழங்குவதற்கான வேலைத்திட்டத்தின் முதலாம் கட்டம் எதிர்வரும் ஒகஸ்ட் 01,02 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன், வடமாகாண சமூகசேவைகள் திணைக்களப்பணிப்பாளர் ஆகியோரின் வழிகாட்டலில்கரைச்சி பிரதேசசெயலர் கோபால பிள்ளை நாகேஸ்வரன் மேற்கொண்டுள்ளார்.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் இதற்கான வேலையை இரு குழுக்களாக செய்ய உள்ளனர். இதில் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வே.தபேந்திரன் தலைமையில் ஒரு குழுவினரும், கண்டாவளை சமூக சேவைகள் அதிகாரி சு.ஜெயானந்தராஜா தலைமையில் ஒரு குழுவினருமாக இப்பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

மாற்றுவலுவுள்ளோர் அனைவரும் ஏற்கனவே 4 பக்க படிவம் நிரப்பி பதிவு செய்யப்பட்டுள்ளனர். பதிவு செய்யாமல் தவற விடப்பட்டோரும் இந்த வேலைத்திட்டத்தில் பதிவு செய்யப்பட உள்ளனர். மாற்றுவலுவுள்ளோர் அனைவரும் இலவசமாக புகைப்படம் எடுக்கப்பட்டு பதிவு செய்யப்பட உள்ளனர். பின்னர் சமூக நலனோம்பு அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்காக அவர்கள் தமது குடும்பஅட்டை, அடையாள அட்டை சகிதம் அறிவிக்கப்படும் இடங்களில் உள்ள கிராம அலுவலர் அலுவலகங்களுக்கு உரிய நேரத்தில் சமூகமளிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 01ஆம் திகதி வியாழக்கிழமை குழு 1- காலை 9 மணி ஜெயந்திநகர்,காலை 11.30 மணி கணேசபுரம், பிற்பகல் 12.30 மணி திருநகர் தெற்கு, பிற்பகல் 2.00 மணி திருநகர் வடக்கு, 3.30மணி உருத்திரபுரம் கிழக்கு, அதே தினத்தில் குழு 2 - காலை 9 மணி ஆனந்தபுரம், காலை 11 மணி தொண்டமான்நகர், 12.00 மணி விவேகானந்தநகர், பிற் பகல் 1.30 மணி கனகாம்பிகைக் குளம், பிற்பகல் 3.30 மணி அம்பாள்நகர்அடுத்த நாள் 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை குழு 1 - காலை 7 மணி கிருஸ்ணபுரம் முற்பகல் காலை,10 மணி மலையாளபுரம், பிற்பகல் 12 மணி பாரதிபுரம் ,பிற்பகல் 3.00 மணி பொன்நகர் அதே தினம் குழு 2- காலை 7 மணி இரத்தினபுரம், காலை 9.30 மணி திருவையாறு மேற்கு ,முற்பகல் காலை 11 மணி திருவையாறு ,பிற்பகல்1.00 மணி மருதநகர் , 2.30 மணி கிளிநகரம்.இந்த நேர ஒழுங்கில் மாற்றுவலுவுள்ளோரைச் சமூகமளிக்குமாறு பிரதேச செயலரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேரடியாக சமூகமளிக்க முடியாத மாற்றுவலுவுள்ளோருக்கு வீட்டில் சென்று உரிய அதிகாரிகளால் புகைப்படம் எடுக்கவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாற்றுவலுவுள்ளோரின் சமூகநலனோம்பு விடயத்தில் இவ் அடையாள அட்டை விநியோகம் சிறந்த சேவையை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. (90)

ஆங்கிலப்பாடல் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லார் கோட்ட ஆங்கிலப் பாடல் போட்டிகள் எதிர்வரும் 31ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

மேலும் யாழ். கோட்டமட்ட ஆங்கிலபாடல் போட்டி எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி காலை 8.30 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்களின் போது தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள அரசஊழியர்கள் தமது வாக்குகளை அளிப்பதற்கு ஏதுவாக தபால்மூல வாக்களிப்புக்கு அவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பப்படிவங்கள் அவர்கள் கடமையாற்றும் நிறுவனங்களுக்கு அதற்கான அறிவுறுத்தல்களுடன் மாவட்ட தேர்தல் அலுவலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேற்படி விண்ணப்பப்படிவங்களை விண்ணப்பதாரிகள் சரியான தகவல்களுடன் பிழையின்றி பூர்த்தி செய்து அடுத்த மாதம் 02 ஆம் திகதிக்கு முன்னர் அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் உறுதிப்படுத்தலுடன் அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (03)

மகோற்சவம்

(அச்சுவேலி)

நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 31ஆம் திகதி புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

இத்திருவிழாக்களில் எதிர்வரும் 8ஆம் திகதி தேர் திருவிழாவும் மறுநாள் 9ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

எனவே அடியார்கள் அனைவரும் பூசைக்குத் தேவையான பொருட்களுடன் ஆலயத்திற்கு வருகை தந்து பூசைகளில் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப்பெற்றுக் கொள்ளுமாறு ஆலய உபயகாரர்கள் அறிவித்துள்ளனர். (85)

கல்விமேம்பாட்டு விழாவும் ஆக்கத்திறன் கண்காட்சியும்

(கிளிநொச்சி)

கைதடி மக்கள்நலன்பேணும் நட்புறவுக்கழகத்தின் கல்வி மேம்பாட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைதடி மேற்கு சரஸ்வதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

கழகத்தின் லண்டன் ஒன்றியத்தின் அனுசரணையில் கழகத தலைவர் இ.கந்தசாமி தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கழகத்தின் லண்டன் ஒன்றியத்தலைவர் நா.கனோத், சிறப்பு விருந்தினராக கைதடி மேற்கு கிராம சேவையாளர் கே. சிவகுமாரசர்மா ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக புலம்பெயர் நாடுகளிலிருந்து வருகை தந்துள்ள உறவுகள் கலந்து கொள்ள உள்ளனர். நிகழ்வின் வரவேற்புரையை கழகத்தின் கல்வி இணைப்பாளர் திருமதி. நிர்மலா மகேந்திரன், நன்றியுரையை கழகத்தின் செயலாளர் வே.சின்னத்தம்பி ஆகியோர் நிகழ்த்த உள்ளனர்.2014 ஆம் ஆண்டு முதலாம் வகுப்பில் கல்வி பயில உள்ள மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இத்தினத்தில் முற்பகல் 10 மணி முதல் முன்பள்ளி மாணவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சியும நடைபெறவுள்ளது. (90)



இவ்வருடஇறுதிக்குள் கிளிநொச்சிக்கான புகையிரத போக்குவரத்தினை ஆரம்பிக்கும் பொருட்டு ஓமந்தையிலிருந்து கிளிநொச்சி வரைக்குமான புகையிரதப்பாதை புனரமைப்புப்பணிகள் மிக வேகமாக இடம் பெற்றுவருகிறது.

அந்தவகையில் கிளிநொச்சி புகையிரத நிலையப்பாதையும் புனரமைக்கப்படும் காட்சி (29)

ரமழான் நற்சிந்தனை

உங்களிடம் ஒரு மாதம் வந்துள்ளன. இதில் ஆயிரம் மாதங்களை விட சிறந்த ஓர் இரவு இருக்கின்றன. எந்த மனிதர் அவ்விரவின் நன்மையை இழந்து விடுகின்றாரோ அவர் நன்மைகள் அனைத்தையும் இழந்தவராவார். துர்பாக்கியம் உடையவர்களைத் தவிர வேறு எவரும் அவ்விரவின் நன்மைகளை இழந்து விடமாட்டார்.

நூல்:- இப்னுமாஜா

முன்னாயத்தக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயவருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகவுள்ள நிலையில் முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தொண்டைமானாறு தெற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்க கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கடந்த 8ஆம் திகதி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கூடடத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படவுள்ளதுடன் ஏனைய செயற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளதாக பருத்தித்துறை பிரதேசசெயலர் ஆர்.டி. ஜெயசீலன் அறிவித்துள்ளார்.

முரசின் இன்றைய பலன்

(28.07.2013 ஞாயிற்றுக்கிழமை)

விஜய வருஷம் ஆடி மாதம் 12ஆம் திகதி.ரேவதிநட்சத்திரம் பி.இ 04.31 வரை ஷஷ்டித்திதி ,அமிர்தசித்தயோகம்

இராகுகாலம 04.32- 06.02வரை. சுபநேரம 09.02- 10.32 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

மேடம்	சகோதர உதவி,புலமைப்பரிசில் கிடைத்த செய்தி,விவாகத்திற்காக விளம்பர எண்ணம்,பிதாவின் நோயின் தாக்கம் குறைவடைதல்,சுவீப்பில் அதிர்ஷ்டம்.
ரிஷபம்	இழுபட்ட விடயமொன்று நிறைவேறல்,காதலில் ஏற்பட்ட பிரச்சினை முற்றுப்பெறுதல்,வங்கியால் கடனுதவி,குடும்பத்தில் குதூகலம்,கொடுத்தவாக்கை நிறைவேற்றல்.
மிதுனம்	விவாகமுயற்சி,மக்களின் உயர்வு கேட்டு மகிழ்வு, மலிவு விலைக்கு பொருட்கள் பெறல், கைக் கெட்டியும் வாய்க்கெட்டாமை,திருடரைப் பிடிக்க அயலவர் உதவி.
கடகம்	தாயாரின் தேகநலம் சுகப்படுதல், தாழ் குருதி அமுக்கத்தினால் அவஸ்தைப்படல் ,வாகனம் மனை காணி விற்க விளம்பர எண்ணம்,வீதி ஒழுங்கு மீறியதால் எச்சரிக்கை.
சிம்மம்	கடற்பயணம் கைவிடும் உத்தேசம், கன்னியர் உறவால் மானக்கேடு,பணவரவு, மருத்துவச்செலவு, தொலைந்தது கிடைத்தல்,தலைமை தாங்க அழைத்தல்.
கன்னி	ஆலோசிக்காமல் கையொப்பமிட்டமையால் கெடுசூழல்,பதவி இறக்கிவிடலாம் என்ற சஞ்சலம், விபத்தினால் உறுப்பொன்று பாதிப்பு.
துலாம்	அவசரபுத்தி அடக்காத முன்கோபம் அன்பின் பலனைக் கெடுக்கும்,பிதாவழி உதவி,பயணம் பற்றிய சுபசெய்தி,உயர் குருதிஅமுக்கத்தினால் நோய் நிலை.
விருச்சிகம்	புழக்கத்திலுள்ள பெயரை மாற்றும் யோசனை, மாமன் உறவில் விரிசல், ஆயுதத்தினால் காயம், காதலில் சந்தேகக்கேடு, வரவு குறைதல், அதிகாரிகளினால் சஞ்சலம்.
தனுசு	தொழில் நிரந்தரமாக்கற் செய்தி, பயணத்திற்கான ஏற்பாடு,விவாக முயற்சி இழுபடல், பிரயாணத்தின் போது அருகிலிருப்போரால் தொல்லை, பணவரவு, குழந்தைப் பேறு.
மகரம்	வியாபாரமேன்மை,காரியசித்தி,பேச்சுவார்த்தை இழுபடல்,பூப்படைதல்,பயணம் இடைத்தங்கல் நாட்டில் சேர்த்தல்.
கும்பம்	கௌரவப் பதவிக்குச் சிபார்சு,கடன் கட்ட நண்பர் உதவி, குழந்தைப்பேறு, மங்கள காரியம், காதல் உறவு, நோய் குணமாதல்,இலாபம்.
மீனம்	விவாகம் முற்றுப்பெறுதல், வாகனயோகம், உறுதியான நிலையில் இருத்தல்,அதிரழ முழவினால் காரிய சித்தி,சந்தேக நிவர்த்தி.

'சார்க்' நாடுகளுக்கிடையிலான கனிஷ்ட விளையாட்டு விழா

இலங்கை குழாமில் 3 யாழ். வீரர்கள்

(யாழ்ப்பாணம்)

"சார்க்" நாடுகளுக்கிடையில் நடைபெறவுள்ள கனிஷ்ட விளையாட்டு விழாவில் இலங்கை சார்பாக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று வீர, வீராங்கனைகள் இடம்பிடித்து அசத்தியுள்ளனர்.

"சார்க்" நாடுகளுக்கிடையிலான கனிஷ்ட விளையாட்டு விழா அடுத்த மாத நடுப்பகுதியில் இந்தியாவில் நடைபெறவுள்ளது.

எல்விஸ்

இப்போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள இலங்கை குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள 88 பேரில் மூன்று தமிழர்களே இடம்பிடித்துள்ளனர்.

இதில் தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி வீராங்கனை அனித்தா கோலூன்றிப் பாய்தல் போட்டியிலும், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி வீரர் றொகான் கோலூன்றிப் பாய்தல் போட்டியிலும், சென். பற்றிக்ஸ் கல்லூரி வீரர் எல்விஸ் 100 மீற்றர் தடைதாண்டல் போட்டியிலும் பங்குகொள்ளவுள்ளனர்.

இவர்கள் அண்மையில் நிறைவடைந்த வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியில் அசத்தியுள்ளதுடன், கடந்த ஆண்டு இடம்பெற்ற தேசிய மட்டப் போட்டிகளில் பதக்கம் வென்று அனைவர் கவனத்தையும் ஈர்த்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகளில் பங்குகொள்ளத் தெரிவாகிய வீர,வீராங்கனைகளுக்கு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டு நலன் விரும்பிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர் யாழ். மாவட்டத்தின் விளையாட்டுத் திறன் வளர்ச்சி நிலையை நோக்கி செல்கின்றதாகவும், இதற்கு சார்க் நாடுகளுக்கிடையிலான போட்டிகளில் மேற்படி வீர,வீராங்கனைகள் தகுதி பெற்றமை எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது எனவும் அவர்கள் தெரிவித்தனர். இதனை மேலும் ஊக்குவித்து, தக்கவைத்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் சார்க் நாடுகளுக்கிடையிலான போட்டிகளில் மேற்படி வீரர்கள் வெற்றிவாகை சூடவேண்டும் என பிரார்த்திப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் 17 வயதுப் பிரிவுக்கான 20 பேர் கொண்ட அணியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி வீரர் துவாரகசீலன் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி., 93)

அனித்தா



றொசான்

ஒரு ஓவரில் அதிக ஓட்டம் பெரேரா 2ஆம் இடம்



(பல்லேகல)

ஒரு ஓவரில் அதிக ஓட்டங்களை விளாசிய இரண்டாவது வீரர் என்ற சிறப்பை இலங்கை அணியின் சகலதுறை வீரர் பெரேரா பெற்றுள்ளார்.

நேற்று முன்தினம் நிறைவடைந்த இலங்கை, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒரு நாள் போட்டியிலேயே இவர் இம் மைல் கல்லை எட்டினார்.

இப்போட்டியில் தென்ஆப்பிரிக்க சுழற்பந்து வீச்சாளர் றொபின் பீற்றர்சன் வீசிய ஒரே ஓவரில் திசரா பெரேரா 5 சிக்சரும், ஒரு பவுண்டரியும் விளாசி துவம்சம் செய்தார். ஒரு வைட்டும் வீசப்பட்டது. இந்த ஓவரில் மட்டும் 35 ஓட்டங்கள் எடுக்கப்பட்டது. ஒரு நாள் போட்டியில் ஒரு ஓவரில் எடுக்கப்பட்ட 2ஆவது அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். 2007ஆம் ஆண்டு உலக கோப்பை போட்டியில், நெதர்லாந்துக்கு எதிராக தென்னாபிரிக்க வீரர் கிப்ஸ் ஒரே ஓவரில் 6 சிக்சருடன் 36 ஓட்டங்கள் எடுத்ததே உலக சாதனையாக இருந்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.

இந்தியா - சிம்பாப்வே
3ஆவது ஒரு நாள் போட்டி இன்று
மைதானம் : ஹராரே.
நேரம் : பிற்பகல் 12.30

கரீபியன் பிறிமியர் லீக் மிஸ்பா ஒப்பந்தம்

(செயின்ட் லூசியா)

கரீபியன் பிறிமியர் லீக் (சி.பி.எல்.,) தொடரில், பாகிஸ்தான் அணி கப்டன் மிஸ்பா, செயின்ட் லூசியா அணியில் ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

இந்தியாவில் நடக்கும் பிறிமியர் கிரிக்கெட் தொடர் போல, மேற்கிந்தியத்தீவுகளில் முதன்முறையாக கரீபியன் பிறிமியர் லீக் (சி.பி.எல்.,) தொடர், ஜூலை 30ஆம் திகதி முதல் ஆக., 24ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இதில் ஆன்டிகுவா, பார்படாஸ், கயானா, ஜமைக்கா, செயின்ட் ஈலூசியா, டிரினிடாட் அண்டு டுபாகோ என ஆறு அணிகள் பங்கேற்கின்றன. ஒவ்வொரு அணியிலும் உள்ளூர் வீரர்களுடன், சில வெளிநாட்டு வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி செயின்ட் லூசியா அணியில் இங்கிலாந்து வீரர் லூக் பாமர்ஸ்பச் இடம் பெற்றிருந்தார். சமீபத்தில் இவர், இத்தொடரில் இருந்து விலகினார். இவருக்கு பதிலாக, சமீபத்தில் முடிந்த மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில், தொடர் நாயகன் விருது வென்ற பாகிஸ்தான் கப்டன் மிஸ்பா ஒப்பந்தம் செய்யப்பட்டார். இதனையடுத்து மிஸ்பா, டரன் சமி, ஆல்பி மோர்கல், தமிம் இக்பால், கிப்ஸ், டினோ பெஸ்ட், டேவான் ஸ்மித் ஆகியோருடன் இணைந்து விளையாடவுள்ளார்.

இது குறித்து செயின்ட் லூசியா அணியின் துணை பயிற்சியாளர் மாத்யூ மேனார்ட் கூறுகையில், பாமர்ஸ்பச் விலகியதை அடுத்து, இவருக்கு நிகரான மாற்று வீரரை தேர்வு செய்ய நினைத்தோம். பாகிஸ்தான் கப்டன் மிஸ்பா சரியான நபராக கருதியதால், ஒப்பந்தம் செய்தோம். இவரது அனுபவம், எங்கள் அணியின் வெற்றிக்கு நிச்சயம் கைகொடுக்கும். தவிர இவர், அணியில் உள்ள இளம் வீரர்களுக்கு முன் உதாரணமாக விளங்குவார் என்றார்.

செயின்ட் லூசியா அணியில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சி. அணி நிர்வாகம் எதிர்பார்க்கும் வகையில் எனது ஆட்டத் திறன் வெளிப்படும் என்று நம்புகின்றேன். இது ஒரு புதிய உணர்வைத் தரும் என மிஸ்பா உல். ஹக் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இறுதியில் நோர்வே

(நொர்கோபிங்)

பெண்கள் யூரோ கோப்பை கால்பந்து தொடரின் இறுதிப் போட்டிக்கு நோர்வே அணி தகுதி பெற்றது.

சுவீடனில், 11ஆவது பெண்கள் யூரோக் கோப்பைக் கால்பந்து தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் அரையிறுதியில் நோர்வே, டென்மார்க் அணிகள் மோதின. போட்டியின் ஆரம்பத்தில் நோர்வேயின் கிறிஸ்டென்சன் (3ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். பின் போட்டி முடிய 3 நிமிடத்துக்கு (87) முன், டென்மார்க்கின் நட்சன் (87ஆவது நிமிடத்தில்) ஒரு கோல் அடிக்க, 1-1 என, சமன் ஆனது.

இதையடுத்து, போட்டி கூடுதல் நேரத்திலும் இரு அணியினரும் கோல் அடிக்கவில்லை. இதனால், போட்டி தண்ட உதை மூலம் வெற்றிதோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் நோர்வேயின் குல்பிராண்ட்சென், டெக்கெரஸ், ரோனிங், ஜெல்டி ஆகியோர் கோல் அடித்தனர். டென்மார்க் சார்பில் நதிம், புரோகார்ட் மட்டும் கோல் அடிக்க, 4-2 என்ற கணக்கில், நோர்வே வென்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் நோர்வே அணி, நடப்பு சம்பியன் ஜேர்மனியை சந்திக்கிறது.

சேர்பிய வீரருக்குத் தடை

(லண்டன்)

உலகின் முன்னாள் 12ஆம் நிலை வீரரும், 2010ஆம் ஆண்டில் டேவிஸ் கோப்பையை வென்ற சேர்பிய அணியில் இடம் பிடித்தவருமான விக்டோர் டிரோக்கிக்கு சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் 18 மாதம் தடை விதித்துள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் நடந்த மான்டிகார்லோ ரென்னிஸ் போட்டியின் போது விக்டோருக்கு ஊக்க மருந்து சோதனை நடத்தப்பட்டது. அப்போது சோதனைக்கு சிறுநீர் அளித்த விக்டோர் இரத்த மாதிரி கொடுக்க மறுத்து விட்டார். அந்த நாளில் உடல்நிலை சரியில்லாததால் இரத்தம் கொடுக்கவில்லை என்று விக்டோர் தெரிவித்த விளக்கத்தை தீர்ப்பாயம் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டது. தீர்ப்பாயம் விசாரணை முடிவில் 27 வயதான சேர்பியா வீரர் விக்டோருக்கு 18 மாதம் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. விக்டோரின் தடைக் காலம் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி நள்ளிரவில் முடிவடையும் என்று சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

வடபிராந்திய வை.எம்.சி.ஏ. மென்பந்து கிரிக்கெட் மானிப்பாய் வசமானது கிண்ணம்



(மானிப்பாய்)

வடபிராந்திய வை.எம்.சி.ஏ அணிகளுக்கிடையில் நடைபெற்ற மாபெரும் மென்பந்து கிரிக்கெட் தொடரில் மானிப்பாய் வை.எம்.சி.ஏ. அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

வட பிராந்திய வை.எம்.சி.ஏ களின் மட்டுப்படுத்தப்பட்ட மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி கடந்த 22ஆம் திகதி மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாட-சாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் வடபிராந்திய வை.எம்.சி.ஏ. அணிகள் பல பங்குகொண்டன. இருப்பினும் இதன் இறுதிப் போட்டிக்கு மானிப்பாய் வை.எம்.சி.ஏ. அணியும், உடுவில் வை.எம்.சி.ஏ. அணியும் தகுதி பெற்றன. அணிக்கு 11 பேர் கொண்ட இப்போட்டி 8 ஓவர்களைக் கொண்டதாக இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மானிப்பாய் வை.எம்.சி.ஏ. அணி எட்டு ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 80 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய உடுவில் வை.எம்.சி.ஏ. அணி 6 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 24 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதன் மூலம் மானிப்பாய் வை.எம்.சி.ஏ. அணி கிண்ணத்தைக்கைப் பற்றிக்கொண்டது.இப்போட்டி நிகழ்வுவடமாகாண வை.எம்.சி.ஏ.களின் தலைவர் தேசமானி லயன் செல்வராஜாதலைமையில் நடைபெற்றது. வெற்றிக்கிண்ணத்தை பிரதம விருந்தினராக கலந்துகொண்ட சர்வதேச லயன்ஸ் கழக பிராந்திய ஆலோசகர் லயன் தியாகராஜா வழங்கிக்கௌரவித்தார்.

இப்போட்டிக்கான அனுசரனையாளர்களாக கொமஷல் வங்கியின் யாழ். கிளை மற்றும் மானிப்பாய் சிட்டி லயன்ஸ் கழகம் ஆகியன வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிறப்புற நடைபெற்ற மழலைகள் விளையாட்டு

(வேலணை)

வேலணைக் கோட்ட முன்பள்ளிகளின் விளையாட்டு அல்ல விளையாட்டு மழலைகள் விழா கடந்த 25ஆம் திகதி நிலைய முன்றலில் சிறப்புற நடைபெற்றது.

இப்போட்டி நிகழ்வில் மண்டைதீவு, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவைச் சேர்ந்த முன்பள்ளி சிறார்கள் பங்குகொண்டு பார்வையாளர்களை பரவசப்படுத்தினர்.

உடற்பயிற்சிப் போட்டியில் புங்குடுதீவு முன்பள்ளி முதலாமிடத்தையும், வேலணை முன்பள்ளி இரண்டாமிடத்தையும், நயினாதீவு முன்பள்ளி மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

ஒட்டுமொத்தமாக பத்து விளையாட்டு நிகழ்வுகளில், வேலணைப் பிரதேச முன்பள்ளி நான்கு போட்டிகளில்வெற்றி பெற்று முதலாமிடத்தையும், மூன்று போட்டிகளில் வெற்றிபெற்ற புங்குடுதீவு மற்றும் நயினாதீவு முன்பள்ளிகள் இரண்டாமிடத்தைப் பகிர்ந்து கொண்டன.

வேலணைப்பிரதேசமுன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி மோ. சுதாயினி தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் யோன். குயின்ரன், வேலணைப் பிரதேச தவிசாளர் சின்னையா சிவராசா, கௌரவ விருந்தினராக பிரதேச முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ப. அருரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (21)

விளையாட்டுச் செய்திகள்

பாரம்பரிய விளையாட்டு விழா இன்றுடன் நிறைவு

(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்திற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான பாரம்பரிய மற்றும் பெரு விளையாட்டுப் போட்டிகளின் நிறைவு விழா இன்றைய தினம் இடம்பெறவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கமைவாக நடாத்தப்பட்டு வரும் இப்போட்டி நிகழ்வுகள் கடந்த ஒரு வாரமாக இடம்பெற்றன. இன்றைய இறுதி நாள் நிகழ்வுகளில் பாரம்பரிய விளையாட்டுகள், தடகளப் போட்டிகள் என்பன இடம்பெறவுள்ளதாகவும், இப்போட்டிகளில் பங்குகொண்டு போட்டியாளர்களை உற்சாகப்படுத்துமாறு ஏற்பாட்டாளர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

25ஆவது தேசிய இளைஞர் சேவை மன்ற விளையாட்டு காலப்பந்தில் கிண்ணம் வென்றது மன்னார்

(பொலநறுவை)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் 25ஆவது தேசிய கால்பந்தாட்டப் போட்டியில் மன்னார் மாவட்ட இளைஞர் சேவை மன்ற அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடாத்தப்பட்டு வரும் 25ஆவது தேசிய விளையாட்டு விழா பொலநறுவை மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றது. இவ்விளையாட்டுவிழாவின் ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த யாழ். மாவட்ட இளைஞர் அணி மற்றும் மன்னார் மாவட்ட இளைஞர் அணிகள் மோதின.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மாறி மாறி பந்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தன. இதன் காரணமாக முதல் பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இரு அணிகளாலும் கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

இரண்டாவது பாதி ஆட்ட ஆரம்பத்தில் யாழ். மாவட்ட அணிக்குக்கிடைத்த இரு வாய்ப்புக்களை அந்த அணி சரியான முறையில் பயன்படுத்தியது. இருப்பினும் கோல் கம்பத்தில் பட்டு பந்து வெ-ளியேறியது. தொடர்ந்து சுதாகரித்துக்கொண்டு ஆக்ரோஷமாகச் செயற்பட்ட மன்னார் மாவட்ட இளைஞர் அணி அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு முன்னிலை வகித்தது. இதற்குப் பதில் கோல் அடிக்கும் முனைப்பில் யாழ். மாவட்ட அணி தீவிரமாக ஈடுபட்டபோதும் அது இறுதி வரை முடியவில்லை. இறுதியில் மன்னார் மாவட்ட அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இதேவேளை, தடளப் போட்டியில் இரண்டு புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன.20 வயதுக் குட்பட்ட பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். எல். எஸ். சில்வா 5.63 மீற்றர் தூரம் பாய்ந்து புதிய சாதனை நிலைநாட்டியுள்ளார்.

புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த லக்ஷானி 5.52 மீற்றர் தூரம் பாய்ந்து இருந்ததே சாதனையா-கும். இவர் தற்போது அதனை முறியடித்துள்ளார். இப்போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த கே. என். சி. தர்மசேனவும், வெண்கலப் பதக்கத்தை குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த வினோதாவும் பெற்றனர்.

இதேவேளை இரண்டாவது போட்டி சாதனையாக நகர இளைஞர் மன்றத்தின் வீரர் கருணாரத்ன 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் 2.11 மீற்றர் பாய்ந்து புதிய சாதனை படைத்துள்ளார்.

இவர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த உயரம் பாய்தலில் மிலான் நிகழ்த்தியிருந்த சாதனையையே அவர் முறியடித்துள்ளார். வெள்ளிப் பதக்கத்தை குருநாகல் மாவட்டத்தைச்சேர்ந்த தனுக்கவும் வெண்கலப் பதக்கத்தை அதே மாவட்டத்தைச் சேர்ந்த தனஞ்சயாவும் பெற்றுக்கொண்டார்.

அத்துடன் 20 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த துலஞ்சவும் வெள்ளிப் பதக்கத்தை உபேந்திரவும், வெண்கலப் பதக்கத்தை சத்துரங்கவும் பெற்றனர். கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த யூ. ஜி. எல். ஜே. ரணசிங்க, 20 வயதுக்குட்பட்டபெண்களுக்கா5000மீற்றர் இறுதிப் போட்டியில் தங்கப்பதக்கத்தையும்வெள்ளிப் பதக்கத்தை குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த மதுசா-ணியும், வெண்கலப் பதக்கத்தை இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த சகுந்தலாவும் பெற்றனர்.

பெண்களுக்கான பரிதி வட்டம் வீசுதலில் இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த லக்மகா தங்கப் பதக்கத்தையும் வெள்ளிப் பதக்கத்தை ஹர்சனியும் வெண்கலப் பதக்கத்தை லக்ஷிகாவும் பெற்றனர். பெண்களுக்கான கபடிப் போட்டியில் கேகாலை அணி கண்டி மாவட்ட அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது. (93)

மாகாண வலைப்பந்து யாழ். மாவட்டம் சம்பியன்

வடமாகாண வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்டம் சம்பியன் பட்டத்தைக்கைப்பற்றிக்கொண்டது. வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மாகாண மட்ட வலைப்பந்தாட்டப் போட்டி அண்மையில் மன்னார் நகர சபை மைதானத்தில் இடம்பெற்றது. இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச்சேர்ந்த அணிகள் பங்குகொண்டன. இதன் இறுதிப் போட்டிக்கு கிளிநொச்சி மாவட்ட அணியும், யாழ். மாவட்ட அணியும் தகுதி பெற்றன. விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஆரம்பம் முதலே யாழ். மாவட்ட அணி ஆதிக்கம் செலுத்தியது. இறுதியில் யாழ். மாவட்ட அணி 72-13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக்கைப்பற்றிக்கொண்டது. (93)

25 வருடங்களுக்கு முன்னர், முதன் முதலாக புலிகள் அமைப்பின் தலைவர்களாக இருந்த படியால் தான், செய்திகளில் அடிபடுகின்றனர்.

ஏற்கனவே, நூற்றுக் கணக்கான முன்னாள் புலி உறுப்பினர்கள், இலங்கை இராணுவத்தில் சேர்ந்துள்ளனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடுவதற்கு, கரை புரண்டு ஓடுகின்றது. ஆனால், பேரினவாத அரசில், நீதியரசர் பதவி வகித்த ஒருவர், அந்த அதிகாரக் கட்டமைப்பின் மீதான தனது விமர்சனங்களை எங்காவது பதிவு செய்துள்ளாரா என்று தெரியவில்லை. மேற்கத்திய நலன்களுக்கு சார்பான இலங்கை அரச கட்டமைப்பில்,

விக்னேஸ்வரன் யாருடைய வேட்பாளர்?

— கலையரசன் கட்டுரையிலிருந்து.

நடத்தப்பட்ட, வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபைத் தேர்தலில், வட மாகாணத்தில் வாக்குப் பதிவு நடக்கவில்லை. புலிகளின் அச்சுறுத்தல் காரணமாக, யாரும் வேட்பு மனு போடவில்லை. அன்று, இந்திய இராணுவத்துடன் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எப். மட்டுமே, வேட்பு மனு தாக்கல் செய்திருந்தது. அதனால், ஈபிஆர்எல்எப் வேட்பாளர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்கள்.

இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்துடன், வட-கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு, இலங்கையில் பிற மாகாண சபைகளுக்கு தேர்தல்கள் நடத்தப்பட்டாலும், வட-கிழக்கு மாகாண சபை கவனிப்பாரற்று இருந்தது. தற்போது, கிழக்கில் இருந்து பிரிக்கப்பட்ட, வட மாகாணத்தில் நடக்கும் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமல்லாமல், முன்னாள் புலிப் பிரமுகர்களும் சுதந்திரக் கட்சி வேட்பாளர்களாக களமிறக்கி விடப்பட்டுள்ளனர். கேபி, தயா மாஸ்டர், தமிழினி, ராம், நகுலன் என்று ஒரு பெரிய பட்டாளமே, சுதந்திரக் கட்சி சார்பாக போட்டியிடுகின்றனர். இவர்கள், முன்னொரு காலத்தில்,

முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதைத் தொடர்ந்து, குறிப்பாக, தமிழ் மத்தியதர வர்க்கத்தினர் மத்தியில் மகிழ்ச்சிப் பிரவாகம்

நாடாளுமன்றம் மட்டுமல்லாது, நீதித் துறையினரும் கூட அரசின் அங்கமாக இருப்பார்கள். "சிங்களப் பேரினவாதம்" என்று சொல்லும் பொழுது, ஒட்டுமொத்த அரச கட்டமைப்பையும் குற்றஞ்சாட்டுகின்றோம் என்பதை பலர் உணர்வதில்லை. அதனால் தான், விடுதலைப் போராட்டம் தொடங்கிய ஆரம்ப காலங்களில் நீதிமன்றங்கள் எரிக்கப்பட்டன. நீதிபதிகளுக்கு கொலைப் பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. ஆகவே, அத்தகைய பின்னணியை கொண்ட ஒருவர், எந்தளவுக்கு தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வார் என்பது கேள்விக்குறியே. மேலும், விக்னேஸ்வரன் தெரிவு தொடர்பாக, சம்பந்தரும், மகிந்த ராஜபக்சவும் ஒரு பொது உடன்பாட்டுக்கு வந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

அண்மையில், த.தே.கூ., இந்திய அரசு, இலங்கை அரசு ஆகியவற்றுக்கு இடையில் நடந்த முத்தரப்பு பேச்சுவார்த்தையின் விளைவாகவும், விக்னேஸ்வரனை வடக்கு மாகாண முதலமைச்சராக்கும் முடிவு அமைந்ததாகப் பேசப்படுகிறது.

இங்கிலாந்து அரண்மனையில் கட்டபொம்மனின் படம்!

கட்டபொம்மன் ஆங்கிலேயருக்கு எதிராக நடத்திய போரும் இராமநாதபுரத்தில் கலெக்டர் லூசிங்டன் முன்னிலையில் அவனது அதிகாரி கிளார்க் என்பவனை வெட்டி வீழ்த்திவிட்டு லாகவமாகத் தப்பிச் சென்றதையும் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் பாளையக்காரர்கள் மன்னர்களை உசுப்பி எழுச்சி பெறச் செய்ததையும் இங்கிலாந்து ராணியிடம் விவரிக்கப்பட்டது. கட்டபொம்மனின் துணிவையும் வீரத்தையும் கேள்விப்பட்டு ஆச்சரியம் அடைந்தார் இங்கிலாந்து ராணி. உடனே கட்டபொம்மனின் படத்தைப் பார்க்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அப்போதைக்கு அந்த வசதி இல்லாததால், ஓர் ஓவியரை வைத்துக் கட்டபொம்மனின் உருவம் ஓவியமாகத் தீட்டப்பட்டு கலெக்டர் ஜாக்சனால் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டது.

இந்திய விடுதலைக்குப் பின்னர் கட்டபொம்மனின் தபால் முத்திரையை வெளியிட இந்திய அரசு முடிவு செய்தது. ஆனால் கட்டபொம்மனின் படம் கிடைக்கவில்லை! என்று இங்கிலாந்து அரசிடம் கேட்கப்பட்டது. இங்கிலாந்து ராணியின் பக்கிங்ஹாம் அரண்மனையில் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த கட்டபொம்மனின் படம்தான் இந்திய அரசு வெளியிட்ட கட்டபொம்மனின் தபால் முத்திரையாகும்! எதிரிகளால் போற்றப்படும் கோட்டைகளையும் கொத்தளங்களையும் மணிமகுடத்தையும் அரண்மனையையும் உயிரையும் இழந்தாலும் கட்டபொம்மன் தன் சொந்த மண்ணிற்கும் மக்களுக்கும் மன்னன் என்ற முறையில் அவன் காட்டிய துணிவும் போர்க்குணமும் இங்கிலாந்து அரண்மனையில் இடம்பெற்றது.

('தேரும் போரும்' நூலில் பி.ஆர். சந்திரன்.)

பிழையின்றித் தமிழ் 35

– ஞானச்செல்வன் –

சில்லென்று காற்று – ஓர் ஆராய்ச்சி:

"சில்லென்று பூத்த சிறுநெருஞ்சிக் காட்டினிலே
நில்லென்று சொல்லி நிறுத்தி வழி போனாலே"

இந்தப் பாடல் வரிகள் பலருக்கும் தெரியும். திரைப்பாடலாகப் பாடப்பட்டிருப்பினும் தனிப்பாடல் திரட்டு எனும் நூலில் இருக்கும் தமிழ்ப்பாட்டு இது. தண்ணி சில்லென்று இருக்கு என்று பேசுகிறோம். "சில்லென்று காத்து வீசுது" என்பதுவும் பேச்சு வழக்கில் உள்ளது. இந்தச் சில் தமிழா? தமிழில் சில் என்பதற்கு அற்பம், சிதறிய பகுதிகள், சில எனும் பொருள்கள் உண்டு. சில்+சில= சிற்சில. சில்லறை (பாக்கி, சொச்சம்) வழக்கத்தில் உள்ளது. ஆங்கிலத்தில்தான் ஊாடைட எனும் சொல் மிகக் குளிரானது எனும் பொருளில் காணப்படுகிறது. சிலுசிலுவென நீர் ஓடியது - சில் ஒலிக்குறிப்பாய் வருதல் உண்டு.

"சும்மா ஜில்லென்று இருக்கணும்" "ஜில் ஜில் ஜிகர்தண்டா" என்பன மிகக் குளிர்ச்சியைக் குறிக்க நம் புழக்கத்தில் உள்ள கிரந்த எழுத்தோடு (ஜி) கூடிய சொற்கள். சிலீரென்று காற்றடிக்குது என்றும் சொல்கிறோம். இந்தச் சில், சிலீர், ஜில், ஊாடைட எல்லாம் ஒன்றா?

ஒரே மாதிரிச் சொற்கள் பலமொழிகளில் இருப்பது உண்மையே. ஆயினும் தமிழ் மிகத் தொன்மைவாய்ந்த மொழி. தமிழிலிருந்து பல சொற்கள் பிறமொழிகளில் கலந்துள்ளன. குறிப்பாகத் தமிழிலிருந்து ஆங்கிலம் ஆகி, மீண்டும் அது தமிழ் வடிவம் பெற்றமையும் உண்டு.

குறுக்கு என்றால் நாமறிவோம். நகரங்களின் விரிவாக்கப் பகுதிகளில் cross street என்று காண்கிறோம். இதனைத் தமிழில் குறுக்குத் தெரு என்போம். கிறித்துவ சமய அடை யாளம் குறொஸ் எனப்படுகிறது. இந்தக் குறொஸ் - குறுக்கு எனும் சொல்லின் திரிபேயாகும். இந்தக் குறொஸ், பின்னர் குருசு என்று பாதிரிமார்களால் எழுதப்பட்டது. பிற்காலத்தில் சிலுவை எனப் புதிய சொல் உண்டாயிற்று.

நாமம் (பெயர்) எனும் சொல்லிலிருந்தே நேம் (யெஅந) வந்தது. பிதா (தந்தை) ஃபாதர் ஆனார். மாதா (அன்னை) மதர் ஆனார். தந்தையெனும் தூய தமிழ்ச் சொல்லே டாடி (னயனல) ஆயிற்று. அம்மா எனும் தமிழ்ச் சொல்லே மம்மி ஆயிற்று.

ஒன்று - ஒன் என்பதும், திரிகடுகம் (திரி-மூன்று) திரி- திரீ என்றாகியிருப்பதும், எட்டு - எயிட் என்பதும், பெருமை "ப்ரௌட்" ஆனதும், பழம் - ஃபுரூட் ஆனதும் ஒப்புநோக்கத்தக்கன.

ஏனிந்த ஒலிப்பு?

சிவன், சிவா, சக்தி இச்சொற்களை நாமறிவோம். இவற்றை ஷிவன், ஷிவா, ஷக்தி என்று இப்போது சிலர் பேசி வருகிறார்கள். ஏன்? நான் "ஷத்தியமாய்ச் சொல்கிறேன்" என்றார் ஒருவர். ச வரும் இடங்களில் எல்லாம் உச்சரிப்பது சிலரது வழக்கமாக உள்ளது. ஷெய்தி ஏன்னவென்றால், என்று பேசுகிறார்கள். சண்முகம் - இதனை ஷண்முகம் என்பது வழக்கம்தான். ஷண்முகத்தை, சண்முகம் என்பது சரியே. ஷண் என்பது ஆறு எனப் பொருள்படும். ஷண் மதம் அறுவகைச் சமயம் என்போம். ஷண்முகத்தை ஆறுமுகம் என்போம்.

இப்போது வேடிக்கை (வேதனை?) என்னவென்றால் ஒரு திரைப்பட இயக்குநர் தம்பெயரை ஷெல்வன் என்று வைத்துக் கொண்டுள்ளார். செல்வன் என்பது தனித்தமிழ். தூய தமிழ்ச் சொல். இதனை ஷெல்வன் என்றாக்கியது கொடுமையன்றோ? சங்கர் - ஷங்கர் ஆகலாம். செல்வன், ஷெல்வன் ஆகக்கூடாதா? என்று சிலர் வினவுவர். ஆம், ஆகக் கூடாது. ஷங்கர் வடசொல். தமிழில் சங்கர் என்றோம். சரி. செல்வன் தமிழ்ச்சொல். இதை ஷெல்வன் ஆக்கலாமா?

ஷெல் என்றால் என்ன? ஆங்கிலத்தில் பறவையின் கூட்டை ஷெல் என்பர். சிப்பியையும் ஷெல் எனலாம். ஷெல்வன் எனும் சொல்லுக்கு வடமொழியிலாவது பொருளுண்டா? இல்லை.

பெயர் புதுமையாக இருக்க வேண்டும். பொருளைப் பற்றியெல்லாம் எங்களுக்குக் கவலையில்லை என்ற மனப்போக்கு வரவேற்கத்தக்கதா? சிவம் - செம்மை, தூய தமிழ்ப் பெயர். சிவத்தை ஷிவம் ஆக்குவது தவறு. சிவத்தினின்று வந்த சொல் சைவம். ஷிவ ஷக்தி என குழகுழ பேச்சு எதற்கு? தமிழைச் சிதைப்பதற்கா? அந்தச் சமயத்தில் என்பதைக் கூட அந்த ஷமயத்தில் என்கிறார்களே! அறிவாளர் (அறிவுஜீவி)களுக்கு அழகா, இது?



மார்க் ட்வைனின் வீடு

– எஸ்.ராமகிருஷ்ணன் –

அமெரிக்கப் பயணத்தில் நான் இருவரது வீடுகளைப் பார்க்க விரும்பினேன், ஒன்று வில்லியம் போக்னர் மற்றொன்று ஜாக் லண்டன். இருவர் எழுத்தின் மீது அதிகமான விருப்பம் கொண்டிருந்த காரணத்தால் அவர்களின் நினைவிடங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் பயணதிட்டமிடலில் அது சாத்தியமாகவில்லை.

Hartford இல் உள்ள அமெரிக்க எழுத்தாளர் மார்க் ட்வைன் ம்யூசியத்திற்குச் சென்றிருந்தேன், ட்வைனின் வீட்டைச் சுற்றிப்பார்க்க கட்டணம் 20 டொலர். அருங்காட்சியகத்தில் அவரது படம் போட்ட பேனா, கீ செயின், ரீ-சேர்ட் போஸ்டர்கள், புத்தகங்கள் கிடைக்கின்றன. இது தவிர ட்வைனிற்கு விருப்பமான ஒரு கோப்பித்தூளும் விற்கிறார்கள்.

மார்க் ட்வைனின் இயற்பெயர் சாமுவேல் லாங்கோர்ன் கிளமென்ஸ். படகோட்டிகள் ஆற்றின் ஆழம் 12 அடி இருப்பதைக் குறிக்க “மார்க் ட்வைன்” என்று குறிப்பிடுவார்கள். அதை கட்டுரை எழுதத் தொடங்கிய போது தனது புனைபெயராக்கி கொண்டார்.

அங்கத எழுத்திற்குச் சரியான அடையாளம் ட்வைன். ட்வைனின் டொம்சாயரையும் ஹக்கிள்பெரி பின்னின் சாகசங்களையும் எனது பள்ளிநாட்களில் வாசித்தபோது, அன்று அது வெறும்புனைகதையாக மட்டுமே புரிந்திருந்தது. ஆனால் பின்னாளில் அமெரிக்க வரலாற்றை வாசித்த பிறகு மார்க் ட்வைனின் இலக்கியப் பங்களிப்பு எவ்வளவு முக்கியமானது என்பதை உணர முடிந்தது.

ஒருவகையில் மார்க் ட்வைன் தான் சரியான அமெரிக்க அடையாளம். அவரிடம் காணப்படும் எள்ளல், சரளமும், நுட்பமுமான எழுத்துமுறை, கறுப்பின அக்கறை, தீராத பயண அனுபவங்கள், சமகால அரசியல் போக்குகள் மீதான சாட்டையடி விமர்சனம் மற்றும் கட்டற்ற சுதந்திர மனப்போக்கு ஆகியவை அமெரிக்க இலக்கிய வரலாற்றில் அவரைத் தனித்த ஆளுமையாக அடையாளம் காட்டுகின்றன.

அமெரிக்காவின் நவீன எழுத்துகள் அத்தனையும் மார்க் ட்வைனிடமிருந்து தோன்றியவையே என்று ஹெமிங்வே ஒரு நேர்காணலில் குறிப்பிடுகிறார்.

ட்வைனின் அப்பா ஜோன் மார்'ல் கிளமென்ஸ், டென்னசியைச் சேர்ந்த ஒரு வணிகர். புகழ்பெற்ற எழுத்தாளராக இருந்த போதும் ட்வைன் கடன்தொல்லை காரணமாக மிகுந்த நெருக்கடியை அனுபவித்தார். கடனை அடைப்பதற்காகச் சொற்பொழிவுகள் மேற்கொள்ள உலகப்பயணம் மேற்கொண்டார் ட்வைன்.

1895இல் இந்தியாவிற்கு வந்து தங்கி இந்திய மக்களையும், பண்பாட்டு சிறப்புகளையும், இயற்கை வனப்புகளையும் பற்றி Following the Equator என்ற புத்தகம் ஒன்றினை எழுதியிருக்கிறார்.

கல்கத்தா, பூனா, அலகாபாத், காசி, ஜெய்பூர், டில்லி, மும்பை என்று பல்வேறு நகரங்களிலும் ட்வைன் தங்கியிருந்து சொற்பொழிவுகள் ஆற்றியிருக்கிறார். இந்தியர்கள் பேசும் ஆங்கிலத்தை அவர் மிகுந்த நையாண்டி செய்து இந்தப் புத்தகத்தில் எழுதியிருப்பது சுவாரஸ்யமானது.

தனது காலகட்டத்தில் நடைபெற்ற அறிவியல் சோதனைகள் மற்றும் சிந்தனைகளில் அதிக ஈடுபாடு காட்டியவர் மார்க் ட்வைன். அவரே சில கண்டுபிடிப்புகளுக்கான உரிமைகளையும் பெற்றிருக்கிறார்.

ட்வைனைப் பற்றிப் பல்வேறு கதைகள், வேடிக்கைத் துணுக்குகள் வழக்கில் இருக்கின்றன. அதில் பல பொய்யானவை, ஆனாலும் மக்கள் மத்தியில் பிரபலமாக விளங்குகின்றன. ட்வைனின் நகைச்சுவை தனிச்சிறப்பு வாய்ந்தது.

மார்க் ட்வெய்ன் ஒரு தீவிரமாகச் சுருட்டுப் பிடிக்கக் கூடியவர்.

எப்போதுமே பிடிப்பீர்களா என்று ஒரு பத்திரிகையாளர் கேட்டதற்கு ட்வைன் சொன்ன பதில்:

தூங்கும்போது பிடிப்பதில்லை.

எல்லையற்ற இந்தப் பிரபஞ்சத்தில் தனது தேசம் இழந்து போனதற்காகக் கவலைப்படும் மன்னனின் கவலைக்கும் உடைந்த பொம்மைக்காக வருத்தப்படும் குழந்தையின் கண்ணீருக்கும் அதிகம் வித்தியாசமில்லை என்றார் மார்க் ட்வைன்.

ட்வைனின் எழுத்துகள் இன்றும் வாசிக்கப்படுவதற்கு இந்த மானுடநேசமே முக்கிய காரணம். “பெரிய எழுத்தாளர்களின் எழுத்துகள் வைன் மாதிரி, என்னுடைய எழுத்துகள் தண்ணீர் போன்றது. என்ன எல்லோரும் தண்ணீரைத் தான் குடிக்கிறார்கள்” என்று ட்வைன் சொன்ன வாசகம் கொண்ட போஸ்டர் ஒன்றினை அந்த ம்யூசியத்திலிருந்து வாங்கினேன்.

ட்வைனின் வீட்டினை சுற்றிமுடித்து விட்டு வந்து அருகில் உள்ள மரப்பலகை ஒன்றில் உட்கார்ந்து கொண்டோம். பருத்த மரங்களுடன் அந்தப் பகுதி மிக அமைதியாக இருந்தது. நூறு வருஷங்களுக்கு முன்பு அது இன்னும் அமைதியும் அழகும் கொண்டிருந்திருக்க வேண்டும்.

ஒரு எழுத்தாளனின் வீட்டினை தேடி வந்து பார்த்து அவரது சிறப்புகளைப் பேசி, மகிழ்ந்து, அவர் சார்பான நினைவுப்பொருள்களை வாங்கிச் செல்லும் மனிதர்களைப் பார்த்துக் கொண்டிருப்பது சந்தோஷமாக இருந்தது.

புதுமைப்பித்தனுக்கோ, ஜானகி ராமனுக்கோ, கு.அழகிரிசாமிக்கோ இது போல அழகிய நினைவகம் அமைத்து மக்கள் கொண்டாட மாட்டார்களா என ஆதங்கமாகவும் இருந்தது.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எப்.கென்னடி (John F.Kennedy) அமரிக்க காங்கிரஸில் ஆற்றிய அங்குரார்ப்பண சொற்பொழிவில் ஓர் தத்துவத்தை முன் வைத்தார்.
“சக அமெரிக்கர்களே!
நாடு உங்களுக்கு என்ன செய்கிறது என்று கேட்காதீர்கள்,
நாட்டுக்கு நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேளுங்கள்”

கலீல் முதல் வாலி வரை

– என்.சொக்கன் –

(JFK ஜனவரி 20 1961)

இந்த 30 செக்கன் தத்துவம் 52 வருடங்ககளுக்கு முன்பு சொன்னது ஆயினும் இன்றும் உலக மூலை முடுக்கெங்கும் எதிரொலிக்கிறது. விசேஷமாக அரசியல்வாதிகளின் ஒலி பெருக்கிகளில்!

முழங்கியது என்னவோ JFK யின் உதடுகள் - ஆனால் அதை எழுதிக் கொடுத்த தியோடர் சி சொரென்சன் (Theodore C Sorensen - TCS) இன் பெயர் பலருக்கு தெரியாது. JFK -TCS கூட்டு எங்கிருந்து இந்த வசனங்களை கடன் வாங்கினார்கள்?

ஒரு சாரார் JFKயின் பள்ளிக்கூட ஆசிரியரிடமிருந்து என்று வாதிட்டாலும் அது எழுத்து வடிவில் கலீல் ஜிப்ரான் (Khalil Gibran *1813-1913*) என்ற இலக்கியவாதியின் புதையலில் காணப்படுகிறது. லெபனானில் பிறந்து அமெரிக்காவுக்கு கடல் கடந்த ஜிப்ரானின் விசிறி JFK. அக்கால மத்திய நாட்டு அரசியல் நிலை குறித்து, *1925*இல் ஜிப்ரான், The New Frontier எனும் ஆங்கில படைப்பில் கீழ்வரும் வரிகளைப் படைத்தார்.

“யார் நீ?, நாடென்ன செய்தது எனக்கு என்று கேட்கும் அரசியல் வாதியா?

அல்லது நாட்டுக்கு நான் என்ன செய்யமுடியும் எனக் கேட்கும் அக்கறைவாதியா?

முற் கட்சியாயின் நீ ஒரு ஒட்டுண்ணி, பிற் கட்சியாயின் நீயொரு பாலைவனைச்சோலை”.

காலம் சென்ற மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அரசியல் தத்துவங்களை தனது திரைப்படங்களின் மூலம் பாமர மக்களுக்கு எடுத்துச்சென்றது யாவரும் அறிந்ததே. வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல ஒழுங்காக எம்ஜியாரின் படங்களில் குறைந்தது ஓர் அரசியல் - தத்துவ பாடலாவது அமையும். இந்த இடைவிடாமுயற்சி அவருக்கு தமிழ் நாட்டு முதலமைச்சர் பதவியை இறுதியில் பெற்றுத்தந்தது.

அந்த வரிசையில் இடம் பெற்ற ஓர் தத்துவப் பாடலுக்கு ஜிப்ரான்-JFK வரிகளை பாடலாசிரியர் வாலி பாவித்துள்ளார். நான் ஏன் பிறந்தேன் (1972) படத்தில் சங்கர் கணேஷ் இசையில் T.M.சௌந்தரராஜன் பாடிய பாடல். வாலியின் வரிகள்:

“நாடென்ன செய்தது நமக்கு என
கேள்விகள் கேட்பது எதற்கு?
நீ என்ன செய்தாய் அதற்கு என
நினைத்தால் நன்மை உனக்கு”
ஆமாம் நாங்கள்
எல்லோரும் எந்த வர்க்கம்?
ஒட்டுண்ணியா அல்லது
பாலைவனைச்சோலையா?

தெரியுமா?

- ஒட்டகத்தின் பால் கறந்தவுடன் கெட்டியாகிவிடும்.
- சூரியனை நேருக்கு நேர் பார்க்கக்கூடிய ஒரே பறவை கழுகு.
- அவுஸ்ரேலிய தேனீக்களுக்கு கொடுக்கு கிடையாது.
- முட்டையிட்டுக் குஞ்சு பொரித்துப் பால் கொடுக்கும் ஒரே உயிரினம் அவுஸ்திரேலியாவிலுள்ள ப்ளாட்டிபஸ் ஆகும்.
- சுவாசிக்காமல் வாழும் உயிரினம் ஈஸ்ட் எனும் நுண்ணுயிரி ஆகும்.
- ஒரு புற்றிலுள்ள எறும்பு அடுத்த புற்றில் நுழைவதேயில்லை.
- பூச்சிகளில் தூரப்பார்வை உடைய சிறப்புக்குரியது வண்ணத்துப் பூச்சி.
- ஆண் நைட்டிங்கேல் பறவைதான் பாடும். பெண் பறவை பாடாது.
- வாத்துகள் அதிகாலையில் மட்டுமே முட்டையிடும்.
- கம்பளிப் பூச்சியின் உடல் 2000இற்கும் மேற்பட்ட தசைகளால் ஆனது.
- ஆபிரிக்காவில் வாழும் பாஸன்ஸி என்னும் ஒருவகை நாய் குரைக்காது.
- பெங்குவின் நீருக்குள் பறக்கும் பறவையாகும்.



இரட்டையர்!

குரங்கு இனத்தில் இரட்டையர்கள் பிறப்பது மிகவும் அபூர்வம். நெதர்லாந்திலுள்ள உயிரியல் பூங்கா ஒன்றில், அண்மையில் கொரில்லா குரங்கு ஒன்று இரட்டைக் குட்டிகளை ஈன்று அனைவரையும் அதிசயத்தில் ஆழ்த்தியுள்ளது. படத்தில் அந்தக் குட்டிகளின் தாய் எவ்வளவு பாசத்தோடு அவைகளை வைத்துக் கொண்டிருக்கிறது பாருங்கள். அருகில் இருப்பவர் தந்தை.ஜ

செல்பேசி சிம்கார்ட்களை Hack செய்ய முடியும்

செல்பேசிகளில் பயன்படுத்தப்படும சிம்கார்ட்களை Hack செய்ய முடியும் எனத் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தற்போது பாவிக்கப்பட்டுவரும் சிம் கார்ட்களின் தொழில்நுட்பம் பழமைவாய்ந்தவையாகக் காணப்படுவதுடன் அவற்றினை நவீன தொழில் நுட்பத்தில் உருவாக்கப்பட்ட ஸ்மார்ட் கைபேசிகளில் பயன்படுத்தும்போது இலகுவாக Hack செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான வழிமுறையை ஜேர்மன் நாட்டு புரோகிராமரான கார்ஸ்டன் நோல் என்பவர் கண்டறிந்துள்ளார். இதுபற்றி தெரிவித்த நோல் என்னிடம் ஏதாவது ஒரு செல்பேசி இலக்கத்தினை தந்து சில நிமிட அவகாசமும் தாருங்கள், நான் அந்த இலக்கத்திற்குரிய சிம் கார்ட்டினை எனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதுடன் அதன் ஒரு நகலையும் உருவாக்கிக் காட்டுகின்றேன்" எனத் தெரிவித்துள்ளார்.

பேஸ்புக் அறிமுகப்படுத்தும் புத்தம்புதிய விளையாட்டு



பல மில்லியன் கணக்கான பயனர்களை தன்னகத்தே கொண்டுள்ள முன்னணி சமூக வலைத்தளமான பேஸ்புக் தனது பயனர்களுக்காக புத்தம் புதிய விளையாட்டு ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதிகளவான பயனர்கள் நீண்டநேரத்தை பேஸ்புக தளத்துடன் செலவு செய்கின்றனர்.

இவ்வாறானவர்களுக்கு ஒரு சுவாரஸ்யம் நிறைந்த பொழுபோக்கு அம்சமாக Facebook Board Game என்ற இப்புதிய விளையாட்டு இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேஸ்புக்கில் நமக்கென ஓர் அக்கவுண்ட் இருந்தால், நம்மோடு பலர் நண்பர்களாக, அஞ்சல் அனுப்பிக்கொண்டிருப்பார்கள். நாம் அவற்றைப் பார்த்து உறுதி செய்துவிட்டால், அவர்கள் பேஸ்புக்கில் இடும் அஞ்சல்கள் நமக்குத்தொடர்ந்து வரும். இதில் என்ன பிரச்சினை என்றால், நாம் அவர்களின் அழைப்பினை ஏற்ற பின்னரே, அவர் இடும் தகவல்கள் நமக்கு ஒப்பானவை அல்ல என்று தெரியவரும். சிலர் தேவையற்ற வகையில் அரசியல் தகவல்களையும், பெண்களின் படங்களையும் இடுவார்கள். இவர்களை உடனே நம் நண்பன் என்ற நிலையிலிருந்து நீக்கவே விரும்புவோம். இதற்கு என்ன செய்யலாம்?

பேஸ்புக்கில் நண்பனை நீக்கும் வழி

பேஸ்புக் சென்று, குறிப்பிட்ட அந்த நபரின் டைம்லைன் செல்லுங்கள். அந்த நபருக்கான லிங்க்கில் கிளிக் செய்தால் போதும். உங்களுக்கு அவர் குறித்த தளம் கிடைக்கும். இந்த டைம் லைன் பொக்ஸின் மேலாக Friends என ஒரு லிங்க் கிடைக்கும். இதில் கிளிக் செய்தால் கிடைக்கு மெனுவில், Unfriend என்பதில் கிளிக் செய்திடவும். இதனைச்செய்தால், அவரின் நண்பர்கள் பட்டியலிலிருந்து உங்கள் பெயர் நீக்கப்படும். மீண்டும் அவருக்கு நண்பன் ஆக விரும்பினால், மீண்டும் ஒரு new friend request கொடுக்க வேண்டும்.

விருப்பத்திற்கேற்ப செய்திகளைத்தேடித் தரும்



ப்ரிஸ்மட்டிக் அப்ளிகேஷன்ஸ் (prismatic app) பயனர்களின் விருப்பத்திற்கேற்ப செய்திகளை தேர்ந்தெடுத்துக் கொடுக்கிறது. நாம் ஒரு செய்தியை படிக்க இணையத் தளத்தில் தேடினால், ஒரே நேரத்தில் ஏகப்பட்ட செய்திகள் வந்து நிற்கின்றன. அதிலிருந்து, நாம் விரும்பும் செய்தியை வகைப்படுத்தி, தேடிக்கண்டுப்பிடிப்பது என்பது சவாலான விஷயம். இனி, செய்திகள் படிக்கும் அனுபவத்தை இனிமையாக மாற்ற வந்துள்ளது ப்ரிஸ்மட்டிக் அப்ளிகேஷன்ஸ். ப்ரிஸ்மட்டிக் அப்ளிகேஷன்ஸ் ஒரு வித்தியாசமான மென்பொருளை உபயோகிக்கிறது. அந்த மென்பொருளானது இணையம் முழுவதிலும் செய்திகளைத்தேடி, பயனர்களுக்கு ஆர்வம், ஆச்சரியம், சீற்றம், மகிழ்ச்சிக்குள்ளாவது போன்ற உணர்வுகளை வழங்கக்கூடிய செய்திகளை வழங்குகிறது.

காலப்போக்கில், இந்த மென்பொருள் பயனர்களின் ஆர்வம் மற்றும் நடவடிக்கைக்கேற்ப மாறிக்கொள்கிறது. இதன் கண்டுபிடிப்பாளர்கள், இந்த அப்ளிகேஷன்ஸ் பயனர்களின் எதிர்பார்ப்பை புரிந்து கொண்டு, அவர்களின் சொந்த தேடல்களில் கிடைத்திடாத, அவர்கள் சற்றும் எதிர்பார்க்காத செய்திகளையும் வழங்குகிறது. பயனர்கள் இதை ஒரு முறை பதிவிறக்கம் செய்து, வேறொரு சமூக ஊடக கணக்கின் மூலமாக பதிவு செய்து கொள்ள வேண்டும். அதிலிருந்து, நம்மைப் பற்றியும், நம்முடைய ஆர்வங்கள் பற்றியும், ப்ரிஸ்மட்டிக் ஆப் தகவல்களை பெற்றுக்கொள்கிறது.

அதன் பின்னர் பயனரின் விருப்பத்திற்கேற்ப செய்தி கட்டுரைகள், வலைப் பதிவுகள் உள்ளிட்ட விரும்பத்தக்க தகவல்களையும், பின்னர் அதனைப் பின்பற்றி வரக்கூடிய செய்திகளின் தகவல்களையும் அளிக்கிறது. ப்ரிஸ்மட்டிக் ஆப் தொகுத்து அளிக்கும் செய்திகளை, குறித்துக் கொள்ளவும், அதனை ட்வீட் செய்யவும், அதனை சேமித்து பின்னர் படித்துக்கொள்ளவும் வழிவகை செய்யும் திறன் கொண்டது என்பது இதன் கூடுதல் சிறப்பம்சமாகும்.



மடிக்கணனி மடியில் வேண்டாம்

மடியின் மீது லப்டொப்பை அதிக நேரம் வைத்துப்பயன்படுத்துவதால் ஏதேனும் பிரச்சினை வருமா? லப்டொப்பை மடியில் வைத்துப் பயன்படுத்துபவர்களுக்கு நிறச்சிதைவு நோய் அதிகம் வருகிறது என்கிறார்கள் தோல் நோய் மருத்துவர்கள்.. அதிலிருந்து வெளிவரும் வெப்பத்தால் தோல்பகுதி சிவந்து போகும். பிறகு அந்த இடத்தில் சிறிய கொப்புளங்கள் உருவாகி அரிப்பு ஏற்படும். அதை சொறியச் சொறிய அந்த இடதில் தோலின் நிறம் மாறி, தடித்த கறுப்பான தோலாக மாறிவிடும். இதற்கு "ரோஸ்டட் ஸ்கின் சின்ட்ரோம் என்று பெயர்.

லப்டொப்பில் காரீயம் சேர்த்திருப்பார்கள். அதிக நச்சுத்தன்மை நிறைந்த இது உடலுக்கு பல ஆபத்துகளை உருவாக்கும். லப்டொப்பை தொடர்ச்சியாக அருகில் வைத்துப் பார்ப்பதால் கண்ணுக்கு அடியில் இரத்த ஓட்டம் குறைந்து, கருவளையம் நிரந்தரமாகத் தங்கிவிடும்.

மடியின் மேல் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அரைமணி நேரத்துக்கு மேல் வேண்டாம். துணி, தலையணை, பிளாஸ்டிக் பொருட்களின் மீதும் லப்டொப்பை வைத்து பயன்படுத்துவது ஆபத்தானது. லப்டொப்பில் இருந்து வெளியாகும் வெப்பத்தைக் கட்டுப்படுத்த இப்போது "கூலிங் பேட்" உபகரணங்கள் வந்துவிட்டன. குழந்தைகளிடம் இருந்து லப்டொப்பை சற்றுத் தள்ளியே வைததிருங்கள்.

கூகுள் குரோம் முதலிடம்



ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், பிரவுசர் உலகில நுழைந்தது குரோம் பிரவுசர். அப்போது இன்டர்நெட் எக்ஸ்புளோரர் கோலோச்சிக் கொண்டிருந்த நேரம். ஆறே மாதத்தில், மைக்ரோசொப்ட் நிறுவனத்திற்கு போட்டியாளராய் கூகுள் நின்றது. தொடர்ந்து குரோம் பிரவுசரின் வாடிக்கையாளர் எண்ணிக்கை பெருகத்தொடங்கியது. அண்மையில், இணைய செயற்பாடுகளைக் கண்காணித்து வரும் ஸ்டேட் கவுண்ட்டர் (StatCounter) குரோம் பிரவுசர் தற்போது முதல் இடத்தைப் பிடித்துள்ளதாக அறிவித்துள்ளது. அதுவும் மிக அதிகமான எண்ணிக்கை வித்தியாசத்தில் இந்த முதல் இடத்தைக்கைப்பற்றியுள்ளது. ஜூன் மாத தகவல்களின் படி, குரோம் உலகளாவிய அளவில், 43 சதவீத இணையப் பயனாளர்களை வாடிக்கையாளர்களாகக் கொண்டுள்ளது. ஆனால், இன்ரநெற் எக்ஸ்புளோரர் 25 சதவீத வாடிக்கையாளர்களையே, தன்னிடத்தில் வைத்துள்ளது. பயர்பொக்ஸ், ஏறத்தாழ 20 சதவீதம் பேருக்கே சேவை செய்து வருகிறது. அடுத்த நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களில், சபாரி மற்றும் ஒப்பரா உள்ளன.

குரோம் பிரவுசர் இந்த அளவிற்கு வேகமாக வளர்ந்தது எவ்வாறு என அறிய சிலருக்கு ஆவலாக இருக்கலாம். மைக்ரோசொப்ட் இந்தப் பிரிவில், யாரும் போட்டிக்கு வர முடியாத நிலையில் இருந்து வந்தது. சற்று வேகமும், நான் எண்ணுகிறபடி வளைக்கக் கூடிய யூசர் இண்டர்பேஸ் அமைந்த பிரவுசரை மக்கள் தேடிய போது, பயர்பொக்ஸ் கிடைத்தது. ஆனால், குரோம் வந்த பின்னர், அதுவும் மாறியது. மொபைல் சாதனங்களில், அன்ட்ரோய்ட் இயக்கத் தொகுப்புடன் கிடைக்கப்பெற்ற குரோம் பிரவுசரை அனைவரும் பயன்படுத்தத் தொடங்கியதால், குரோம் பிரவுசரின் வாடிக்கையாளர் எண்ணிக்கை உயர்ந்தது. இதனுடன் வேகம், வாடிக்கையாளரின் எதிர்பார்ப்பிற்கேற்ப தரப்படும் வசதிகள், குரோம் பிரவுசருக்கு இந்த இடத்தைக் கொடுத்துள்ளன.

பரீட்சார்த்திகளுக்கான அடையாள அட்டை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கவும்

அதிபர்களுக்கு அறிவுறுத்து

(அச்சுவேலி)

எதிர்வரும் மார்கழி மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத தரா தர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடசாலைப் பரீட்சார்த்திகள் உரிய வயதினை அடைந்திருப்பின் தாமதிக்காது உடனடியாகவே தமது பாடசாலை அதிபர்களுக்கூடாக தேசிய அடையாள அட்டையினைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர்களினால் மாணவர்களுக்கும், பாடசாலை அதிபர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பதினாறு வயதினைப் பூர்த்தி செய்திருந்தும் இதுவரை தேசிய அடையாள அட்டையினைப் பெறுவதற்கு விண்ணப்பிக்காதவர்கள் தொடர்ந்தும் காலம் தாழ்த்தாது அடையாள அட்டையினைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மாணவர்கள் உரிய காலத்தில் அடையாள அட்டையினைப் பெற்றுகப் கொள்வதன் மூலம் பரீட்சையின் போது ஏற்படக்கூடிய பல்வேறு பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்பதால் இவ்விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்துமாறும் வலயக்கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு மேற்படி செயற்பாட்டினை மேற்கொள்வதன் மூலம் இலகுவாக் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் வலயக்கல்வி பணிப்பாளர்களினாலும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

சிறுமிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம் சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறை பொலிஸ் பிரிவில் இரு சிறுமிகளை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கிய சந்தேக நபர் ஒருவர் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளார்.

13, 14 வயதுடைய .பாடசாலைச்சிறுமிகளை கல்வி கற்றுத்தருவதாகக் கூறி பாலியல் துஷ்பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார்

இவ்வாறு மேற்கொண்ட ஒரு ஆசிரியர் எனவும் அவர் கந்தர் மடம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும் 36 வயதுடையவர் என்றும் பொலிஸ் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் கடந்த மே, யூன் மாதங்களில் தொடர்ச்சியாக இடம் பெற்றதாகவும் கடந்த 22ஆம் திகதியே சிறுமிகளால் காங்கேசன் துறை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் இடம் பெற்ற பொலிஸாரின் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உரும்பிராய், பகுதியைச் சேர்ந்த 15 வயதுச் சிறுமி ஒருவர் 25 வயதுடைய ஊரெழுவைச் சேர்ந்த சந்தேக நபரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டதாகவும், கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட பிரஸ்தாப நபர் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆவரங்கால் பகுதியில் 8 வயது சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் 19 வயதுடைய ஆவரங்கால் மேற்கைச்சேர்ந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ,பா)

ஓவியப் பயிற்சியும் திரைப்படக் காட்சியும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி உருத்திரபுரம் காந்தி நிலைய சிறுவர் இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாணவர்களுக்கான ஓவியப் பயிற்சியும் அதனைத்தொடர்ந்து காந்தி வரலாற்றுத் திரைப்படக்காட்சியும் இடம்பெறவுள்ளன.

காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை காந்தீயம் இதழாசிரியர் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தியின் நெறிப்படுத்தலில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் காந்தி நிலையத்தலைவர் தி. இராசநாயகம் தொடக்க உரையாற்றி ஆரம்பித்து வைப்பார்.

இப்பயிற்சி வகுப்பில் வளவாளர்களாக இணுவில் இந்துக்கல்லூரி சித்திரப்பாட ஆசிரியர் செ. ஜெகன் மற்றும் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன் த.சுகந்தன் ஆகியோர் கலந்து கொள்வர்.

தொழில்நுட்ப பாடநெறிக்கு மாணவர்களை இணைத்தல்

(சுன்னாகம்)

புதிதாக உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட தொழிநுட்ப பாடத்துறையில் கல்வி கற்பதற்கு எதிர்வரும் 31 ஆம் திகதி வரை மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படுவார்கள் என மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

புதிதாக இணையும் மாணவர்கள் தமது அனுமதியினை பெற்றுக்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட இப்பாடநெறியானது வலிகாமம் கல்வி வலயத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரி வட்டு இந்துக் கல்லூரி, வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (66)

நான்காவது அமர்வு

(முழங்காவில்)

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் கடந்த ஒரு மாதகாலமாக இயங்கிவரும் பூநகரி மத்தியஸ்தர் சபையின் நான்காவது அமர்வு இன்று காலை பூநகரி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பூநகரியில் வசிப்பவர்களின் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதிக்கு குறைவான பிணக்குகளை மத்தியஸ்தர் சபையில் சமர்ப்பித்து சம்பந்தப்பட்டவர்கள் சுமுகமான தீர்வைப்பெற்றுக் கொள்ளமுடியுமென பூநகரி மத்தியஸ்தர் சபை தவிசாளர் வெ.சொக்கநாதன் கேட்டுள்ளார். வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் பிணக்குகளுக்கான பதிவை மேற்கொள்ள முடியுமென தெரிவிக்கப்படுகிறது. (112)

அளவெட்டி அருணாசலம் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடமாகாண கல்வித்திணைக்கள முறைசாராக் கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் ச.கைலாசநாதன் மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம்.

பதிவிறக்கப் பெட்டகம்

ஒருவர் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவர் செய்தித்தாளை சிறு சிறு துண்டுகளாகக் கிழித்து, ரயில் ஜன்னல் வழியே வெளியே விட்டெறிந்து கொண்டே வந்தார்.

இதைப் பார்த்த சக பயணி ஒருவர், "எதுக்காக பேப்பரைக் கிழிச்சு ஜன்னல் வழியே வெளியே எறிந்துகொண்டே வாறீங்கள்?" என்று கேட்டார்.

"அதுவா? வேறொன்றுமில்லை... சிங்கமோ, யானையோ ரயிலை வழி மறிக்காமல் இருக்கத்தான் பேப்பரைக் கிழிச்சுப் போடுகிறேன்"

அதைக் கேட்ட சக பயணிக்கு ஒன்றும் புரியவில்லை.

"ஒரு சிங்கமோ, யானையோ இதுவரை கண்ணிலேயே படவில்லையே? பிறகு எதுக்கு பேப்பரைக் கிழிச்சுப் போடுறீங்கள்?" என்று கேட்டார்.

அதற்கு அவர் சொன்னார்: "பார்த்தீங்களா? என்னுடைய டெக்னிக் எப்பிடி வேலை செய்யுது பாருங்கள்!"

*** *** *** ***

ஒரு ஏழை மனிதர் வெயிலில் நடந்து சென்று கொண்டிருந்தார். அவரது துன்பம் கண்டு, குதிரையில் சென்று கொண்டிருந்த செல்வந்தன் ஒருவன் தன் செருப்புகளைக் கொடுத்தான்.

சிறிது தூரம் நடந்த பின் நின்று விட்டார் அந்த மனிதர்.

குதிரையில் வந்த செல்வந்தன், "ஏன்?" என்று கேட்டான்.

"குடையும் கொடுத்தால் நன்றாக இருக்கும்!" என்றார் அவர். அப்படியே செய்தான் செல்வந்தன்.

கொஞ்ச தூரம் நடந்த அவர், மீண்டும் நின்றார்... இப்போதும் ஏனென்று கேட்டான் செல்வந்தன்.

"குதிரையையும் கொடுத்தால் நன்றாக இருக்கும்..." என்றார் அந்த மனிதர்.

அவரின் பேராசையைக் கண்டு, கோபம் கொண்டான் செல்வந்தன். சவுக்கால் அவர் முதுகில் இரண்டு இழுப்பு இழுத்தான்.

அடிபட்ட அவர், "கோபிக்காதீர்... வீட்டுக்குப் போனதும், குதிரையையும் கேட்டிருந்தால் கொடுத்திருப்பீர்களோ என்ற சஞ்சலம் இருந்திருக்கும்... சவுக்கடி பட்டதும் அது தீர்ந்து போயிற்று..." என்றார்.

*** *** *** ***

ஒருவன் இறந்த பிறகு சொர்க்கத்திற்குப் போகிறான். அங்கே ஒரு சிற்றுண்டிச்சாலை இருக்கிறது. உள்ளே போகிறான். விதவிதமான தின்பண்டங்கள், பலகாரங்கள், இனிப்பு காரங்கள் இருக்கின்றன.

விலைப்பட்டியலைப் பார்க்கிறான் அதிக விலை! தலையைச் சுற்றுகிறது.

காசாளராக இருப்பவன் சொல்கிறான்:

"நீங்கள் எதை வேண்டுமானாலும் சாப்பிடுங்கள். பில் உங்களுக்குத் தரப்படாது. உங்கள் மகன் வரும்போது அந்த பில் தரப்படும்"

அதனால் இவனும் போய் உட்கார்ந்து மூக்குப் பிடிக்க சாப்பிட்டுவிட்டுத் திருப்தியோடு வெளியே வருகிறான்.

பில் தரப்படுகிறது.

பார்க்கிறான் – 10,000 ரூபாய்.

அவனுக்கோ அதிர்ச்சி.

சாப்பிட்டது 1000 ரூபாய் கூட இருக்காது. பில் இல்லை என்கிறார்கள். இப்போது அதற்குப் பத்தாயிரம் ரூபாய் பில் என்கிறார்கள்.

"சொர்க்கத்தில் அநியாயம்" என்கிறான்.

அதற்கு அந்த ஹோட்டல்காரன் விளக்குகிறான்:

"நீங்கள் கேட்டது சரிதான். உங்கள் பில் 1000 ரூபாய்தான் வருகிறது. அதை உங்கள் மகன் வரும்போது அவரிடம்தான் கொடுத்து வசூலிப்போம்"

"அப்படி என்றால் இது?" என்றான் இவன்.

"இது உங்கள் அப்பா சாப்பிட்டுவிட்டுப் போன பில்" என்றான் ஹோட்டல்காரன்.

*** *** *** ***

டாக்டர் மத்தேயு பெய்லி என்பவர் ஜோர்ஜ் மன்னருக்கு மருத்துவ ஆலோசகர். இலக்கியவாதியும் கூட.

ஒரு நாள் எழுத்தாளர் ரெனோல்ட்ஸ் என்பவர் தன் உடல் நிலையைப் பரிசோதித்துக் கொள்ள மத்தேயுவிடம் வந்தார்.

"டாக்டர், நான் அதிகம் எழுதுவதால் என் உடல் நிலை மோசமாகி விட்டதா?" என்று கேட்டார்.

அதற்கு மத்தேயு, "நீங்கள் அதிகமாக எழுதுவதால் உங்கள உடல் நிலை கெட்டுப் போக வாய்ப்பில்லை. உங்கள் பெயர் தான கெட்டுப் போகிறது" என்றார்.

இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு வாய்ப்பு

அங்கிருந்தவாறே விண்ணப்பிக்கலாம்



(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலின்போது இடம்பெயர்ந்த வாக்காளர்கள் தாம் இடம் பெயர்ந்து வசிக்கம் பகுதிகளிலேயே வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்க முடியும் அதற்கான ஏற்பாடுகள் மேற கொள்ளப்பட்டிருக்கின்றன.

அதேவேளைவவுனியா மாவட்டத்தில் 94,367 பேர் வாக்காளர்களாக பதிவு செய்யப்படடுள்ளனர் என வவுனியா மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் என். கருணாநிதி தெரிவித்தார்.வட மாகாணசபை தேர்தலில் வவுனியா மாவட்ட வாக்குப் பதிவாளர்கள் தொடர்பில் அவரிடம் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவித்த அவர்,

"தற்போதுள்ள வாக்காளர்களுடன் மேலதிகமாக பதிவு செய்யப்படவுள்ளவர்களின் விபரங்களும் இத் தொகையுடன் சேர்க்கப்படவுள்ளது. இவர்கள் வாக்களிப்பதற்காக 81 வாக்களிப்பு நிலையங்கள் வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ளன.

தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை கோரியதன் அடிப்படையில் அவை தற்போது கிடைத்த வண்ணமுள்ளன. அந்த வகையில் தபால் மூலமாக வாக்களிக்க விரும்புபவர்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 2 ஆம் திகதிக்கு முன் எமக்கு கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

அதேபோல் இடம் பெயர்ந்தவர்கள் 2012 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் பதிவு செய்து வெவ்வேறு காரணங்களுக்காக வேறு மாவட்டங்களில் வசிக்கும் பட்சத்தில் இவர்கள் இடம்பெயர்ந்த பிரதேசத்திலேயே வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் கிராம அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு விண்ணப்பிக்க வேண்டியவர்கள் நேரடியாக விண்ணப்பப் படிவங்களை தேர்தல் ஆணையாளருக்கோ அல்லது எம்மிடமோ சமர்ப்பிக்க முடியும். இதேவேளை வட மாகாண தேர்தலுக்காக வவுனியா மாவட்டத்தில் தேர்தலை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன எனத் தெரிவித்தார்.

வல்லைவெளியில் அரங்கேறும் நாகரிகமான நிதி மோசடி

பொறுப்புக் கூற யாரும் இல்லையா?

(வடமராட்சி)

யாழ்.குடாநாட்டில் இப்போது பணமோசடி செய்வதற்கு பல்வேறு வழிகள் நாளுக்கு நாள் அறிமுகமாகி வருகின்றது.

இந்தவகையில் இந்தவாரம் வல்லை வெளியில் உள்ள முனியப்பர் ஆலயத்துக்கு முன்னால் சில இளைஞர்கள் தரித்து நின்றனர். அந்த வீதியால் செல்லும் வாகனங்கள் அனைத்தையும் வழிமறித்து தமது கையில் இருந்த அதிஷ்ட லாபச்சீட்டுக்களை பயணிகளிடம் திணித்தனர்.

பலர் வேறு வழியின்றி பணம் கொடுத்து பெற்றுக்கொண்டனர். சிலர் விளக்கம் கோரினர் அவர்கள் கொடுத்தவிளக்கம் முன்னுக்குப்பின் முரணானதாகவும் குழ ப்பமாகவும் இருந்தது.

இவ் விடயம் தொடர்பாக துருவி விசாரித்த போது இந்த முயற்சி இளவாலையில் உள்ள நாகதம்பிரான் ஆலய த்தின் பேரில் முறை தவறிய நிதி சேகரிப்பு என்று தெரிய வந்தது.இந்த மோசடிக்கு வலிதென் மேற்கு பிரதேசசபையும் உடந்தையாக இருந்நதா? என்ற சந்தேகமும் மேற்கிளம்பியது. பயதிணிகள் பலர் தமக்குள்ளே புளுங்கிய வண்ணம் பயணத்தை தொடர்ந்தனர். உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்துவார்களா?.

(116)

பாதுகாப்பு அதிகாரிகளின் தொலைபேசிகள்

ஆஸி.யிலிருந்து ஒட்டுக்கேட்கப்படுகிறதா?

சிங்களப் பத்திரிகை அதிர்ச்சித்தகவல்

(கொழும்பு)

பாதுகாப்பு உயர் அதிகாரிகளின் தொலைபேசிகள் அவுஸ்ரேலியாவிலிருந்து ஒட்டுக்கேட்கப்படுவதாக திவயின என்ற சிங்கள பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவின் பயின்கெப் என்னும் இடத்திலிருந்தே இவ்வாறு ஒட்டுக் கேட்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவே இவ்வாறே இரகசியமாக அவுஸ்ரேலியாவிலிருந்து இலங்கைப் பாதுகாப்பு உயர் அதிகாரிகளின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்டு வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தற்போது ரஸ்யாவின் மொஸ்கோ விமான நிலையத்தில் தங்கியிருக்கும் சர்ச்சைக்குரிய அமெரிக்க சீ.ஐ.ஏ உளவுப் பிரிவு முன்னாள் அதிகாரி எட்வர்ட் ஸ்னோவ்டன் இந்தத் தகவலை அம்பலப்படுத்தியுள்ளார்.

பிரபுக்கள் மற்றும் பாதுகாப்புஉயரதிகாரிகளின் தொலைபேசி உரையாடல்கள் இவ்வாறு ஒட்டுக் கேட்கப்படுகின்றன.

அமெரிக்கதேசிய பாதுகாப்பு முகவர் நிறுவனத்தினால் அவுஸ்திரேலியாவில் காணப்படும் இரகசிய மையம் நடத்தப்பட்டு வருவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

தொழில்னுட்பத்துறைப்பாட அறிமுகம்

மாணவர்க்கான அரியவாய்ப்பு



த.தவசேகா
(B.S.C/P.G.D.E/P.G.D.P/MED) (MERIT)
ஆசிரியர்:யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

க.பொ.த உயர்தரப்பிரிவில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொழில்னுட்பத்துறை கற்கை பற்றி தற்போது யாழ் குடாநாடெங்கும் பரவலாக பேசப்படுகிறது.

இதனை பற்றி மாணவர்களும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் அறிந்திருக்க வேண்டியது முக்கியமானதொன்றாக தென்படுவதால் இத்துறை தொடர்பான விழிப்புணர்வு அனைவர் மத்தியிலும் ஏற்படுதல் காலத்தின் தேவையாகும்.

இத்துறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாடங்களை அவதானிப்போமாயின் பிரதான பாடமாக தொழினுட்பத்திற்கான விஞ்ஞானம் காணப்படுவதுடன் இரண்டாவது பாடமாக உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்/பொறியியல் தொழினுட்பவியல் என்பவற்றில் இருந்து ஒன்றையும் மூன்றாவது பாடமாக பொருளியல், புவியியல்,மனைப் பொருளியல், ஆங்கிலம், தொடர்பாடல் மற்றும் ஊடகக்கற்கை,தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் ,சித்திரம், வணிகக் கல்வி, விவசாய விஞ்ஞானம், கணக்கியல் என்பவற்றில் இருந்து ஒன்றையும் தெரிதல் வேண்டும்.

இதனைபின்வருமாறு வரைபடத்தில் காட்டலாம்.



1.பொருளியல்
2.புவியியல்
3.மனைப்பொருளியில்
4.ஆங்கிலம்
5.தொடர்பாடல் மற்றும் ஊடகக்கற்கை
6.தகவல் மற்றும் தொர்பாடல் தொழினுட்பவியல்
7.சித்திரம்
8.வணிகக்கல்வி
9.விவசாய விஞ்ஞானம்
10.கணக்கியல்

பிரதான பாடமாக தொழினுட்பத்திற்கான விஞ்ஞானத்தை அவதானித்தால் அதில் அமையும் அலகுகள் பின்வ ருமாறு.

1.நுண்ணுயிரியல்
2.உயிர் மூலப்பொருட்களின் முக்கியத்துவம்
3.பல்பகுதியப் பதார்த்தங்களின் பயன்பாடு
4.பிளாஸ்ரிக்கு மீள்சுழற்சி
5.செரமிக்,கண்ணாடி,நனோ பதார்த்தங்கள்
6.இலங்கையின் இரசாயன கைத்தொழில்கள்
7.அடிப்படைக்கணிதம்
8.திரிகோண கணித விகிதம்
9.கேத்திர கணிதம்
10.சார்புகள்
11.விவரணப்புள்ளி விபரவியல்
12.காவிகள்
13.விசை
14.விறைப்பான பொருளொன்றின் சமனிலை
15.நியூட்டனின் விதிகள்
16.புவியீர்ப்பு
17. இயக்கம்
18.கணனி
19.கணனிப்பணிசெயல் முறைமைகள்
20. மென்பொருளின் பயன்பாடு
21.இணையமும் தொடர்பாடலும்
22.சடப்பொருளின் பொறிமுறை இயல்புகள்
23.பாயிகள்
24.மின்னியலும் காந்தவியலும்
25.இலத்திரனியல்
26.வெப்பம்
27.அலைகள்

இவ் அலகுகளை நோக்கும்போது உயிரியல்,புவியியல், விவசாயம்சார் அலகுகள் ஆறும் கணித பௌதீகவியல் அலகுகள் பதினேழும் கணனி அலகுகள் நான்கும் உள்ளடக்கப்பட்டிருக்கிறன. இதில் இருந்து இப் பிரதான பாடத்தை கற்பதற்கு கணித அறிவு மிக முக்கியமானதாக காணப்படுகின்றது.

பொறியியல் தொழினுட்பவியல் எனும் பாடத்தை அவதானிக்கும் போது பின்வருமாறு அலகுகள் காணப்படுகின்றன.

1.பொறியியல் தொழினுட்பத்திற்கான அறிமுகம்
2.அடிப்படை மோட்டார் வாகன தொழினுட்பம்
3.அடிப்படை மின் தொழினுட்பம் வீட்டுமின்சுற்று
4.அடிப்படை கட்டுமான தொழினுட்பம்
5. அடிப்படை உற்பத்தி தொழினுட்பம் பொருத்தும் தொழினுட்பம்
6.பொறியியல் வரைபுகள்
7.அலகுகளும் அளவீடுகளும்
8.இயக்க மற்றும் வலு ஊடுகடத்தும் மூலகங்கள்.
9.தொழினுட்பம் தொடர்பான பாதுகாப்பும் சுகாதாரமும்
10.மின் இயந்திரங்களும் வலு முறைமைகளும்
11.அடிப்படை இலத்திரனியலும் அவற்றின் பிரயோகமும்
12.வீட்டு நீர் விநியோகமும் சுகநல வசதிகளும்
13. திரவ இயந்திரங்கள் (பம்பி,சுழலி)
14.பொறியியல் தரங்களும் தரக்கட்டுப்பாட்டு முறைமைகளும்
15.அளத்தல்.
16.மதிப்பீடும் B.O.Q வை தயாரித்தலும்
17.முயற்சியாண்மையும் முகாமைத்துவமும்

பாடத்தை நோக்கும்போது கூடிய அளவு கணித விடயங்கள் அமைந்துள்ளதால் கணித ஆர்வம் கூடிய மாணவர்கள் இத்துறையை தெரிவு செய்வது சிறந்ததாகும்.கணித ஆர்வம் குறைந்தவர்கள். இப்பாடத்திற்கு மாற்றீடாக உயிர் முறைத் தொழினுட்பவியலை தெரிவு செய்ய முடியும்.உயிர்முறைத் தொழில்னுட்பவியல் பாடம் தொடர்பான தெரிவு நாளைய தொடரில்...

தொடரும்........

க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்

இரசாயனவியல்

(கடந்த செவ்வாய்கிழமையின் தொடர்ச்சி...)

* இரசாயன வாங்கி- - இரசாயனப் பொருட்கள் நீரில் கரைந்த நிலையிலேயே வாங்கிக் கலங்கள் தூண்டப்படும்
* பூச்சிகளில் கூட்டுக்கண் (நிறப்பார்வை)
* மனித கண்
* மண்டையோட்டின் முற்புறம், என்பினால் ஆக்கப்பட்ட குழியில் அமைந்தது.
* மேல் கீழ் மடல்களினால் பாதுகாப்பு.
* மனித கண் வில்லை - மளமளப்பான தசை
* அவலில் - கூம்புக்கலங்கள் மட்டும்.

- கோல் கலம் □ றொடேர்சின் , பார்வை ஊதா (120×106)
கூம்புக் கலம் — Photopsin, Iodopsin (6×106)
< - பிரிவலு ::: கோல் கூம்புக்கலம்
(பல கோல்க்கலங்கள் ஒரு இருமுனைவுக் கலத்தில் இணைக்கப்பட்டு இருக்கும்)

* பார்வைக்கான கணத்தாக்கு பாதை
(மனித விழித்திரை - நேர்மாறான விழித்திரை)
ஒளிவாங்கிக் கலப்படை → இருமுனைவு நரம்புக்கலம் → நரம்புத் திரட்டுக்கலம் → பார்வை நரம்பு பார்வைக்கோப்பு → பக்கமுழந்தாழிக்குரிய திரட்டு → பிடர்ச் சோணை

* மனித கண்ணின் தன்னமைவு
::: பொருளுக்கும், கண்ணுக்கும் இடையிலான தூரம் வேறுபடும் போதும் விம்பத்தை கண்ணின்

* விழித்திரையில் குவிக்கும்
கண்ணின் திறன்

* மனித கண் பார்வை - **இருவிழிப் பார்வை** *அல்லது* **திண்மத்தோற்றப் பார்வை**
(இரண்டு விம்பம் ஒரு விம்பமாக மூளையினால் உணரப்படுதல்)
* நுட்பமான பார்வை, நிறப்பார்வை - கூம்புக் கலம்
* தலைவாயில் (மச்சை/ பொட்டு)
தோற்பை (தலை புவியீர்ப்பு சார்பான அசைவை உணர்ந்து உடற் சமநிலையை பேணுதல்) சிறுபை
(தலை பக்கப்புறமாக அசைக்கப்படும் போது ....)

* அரைவட்டக் கால்வாய் (முகடு)
வேகமாற்றம், திசைமாற்றம் என்பனவற்றை உணர்ந்து உடற் சமநிலையை பேணுதல்)

* தோல் மேற்றோல்
(புறமுதலுரு உருவாக்கம்))
உட்தோல் (இடைமுதலுருப்படை)
* மேற்றோல் (குருதிக் கலனைக் கொண்டிராதது, மெரனின் குழியங்கள் காணப்படும்)
  - கொம்புருப் படை
  - தெளிவுப்படை
  - சிறுமணிப்படை
  - சிறுமுட் படை
  - மல்பீசியன் படை
  - இறந்த கலங்கள்

* பல கலப்படை

தளர் .தொடுப்பிழையம்
* உட்தோல் (தொடுப்பிழையம்)
மயிர் நிறுத்தித் தசை □□ மளமளப்பான தசை

* **அகஞ் சுரப்பிகளின் சிறப்பியல்புகள்**
* **கானற்ற சுரப்பி**
* **அதிகளவிலான குருதித் தரவை உடையன.**

* முலைச் சுரப்பியில் பால் சுரத்தலை தூண்டுவது - புரோலக்ரின்
* வெளியேற்றலைத் தூண்டுவது - ஒக்சிரோசின்

*TRH → TSH → T3,T4

* CRH ACTH → Cortisol

* GnRH → FSF → Inhibin, Oestrogen
. LH → Testostrone , Progestrone , Oestrogen

* மன அழுத்தநிலை
அதிரீனலீன் , கோட்டிசோல், ACTH, CRH

* நீர்ப்பீடனத்துடன் தொடர்புடைய அகஞ்சுரப்பி □□ தைமஸ் சுரப்பி (கீழ்கழுத்துச் சுரப்பி)
* ஓமோன் □□ தைமோசின்

* பிரசாரண சீராக்கத்தில் பங்கேற்கும் பிரதான அங்கம் □ சிறுநீரகம்
* ஓமோன் □ ADH, Aldestrone

* கன்னிப்பிறப்பு என்பது.... பெண் புணரியானது கருக்கட்டலுக்கு உள்ளாகாது அது ஒரு தனியனாக விருத்தியடைதல்.***(இலிங்கமுறையின*** விசேட வடிவம்) (தேனீ, பல்லி)

* கன்னிக் கனியமாதல் என்பது........ பூவின் சூலகத்தில் இருந்து கருக்கட்டல் நடைபெறாமலேயே பழம் விருத்தியடைதல்

* கன்னிப்பிறப்பின் போது உருவாக்கப்படும் எச்சங்கள் வாழ்தகவுடையன. ஆனால் கன்னிக் கனியமாதலில் உருவாகும் வித்துக்கள்

வாழ்தகவற்றவை.

* புணரி - தனிக்கலத்துக்குரிய ஒரு மடியமான சிறத்தலடைந்த இனப்பெருக்க கலம்

* Kingdom Animalia இல் புணரியாக்கத்தில்::::: ஒடுக்கற்பிரிவு
* Kingdom Planthe இல் ::::: இழையுருப்பிரிவு

* அனேகமான தரைவாழ் விலங்குகளில் நடைபெறும் கருக்கட்டல் வகை எது? அதற்கான காரணத்தையும் சுருக்கமாக விளக்குக?
* அகக்கருக்கட்டல்,
* ஏனெனில் தரைச்சூழலில் சூழல் வெப்பநிலை உயர்வானது.
* ஆகவே புணரிகளை உலர்தலில் இருந்து தடுத்து பாதுகாப்பதற்காகும்.

- மனித ஆண் இனப்பெருக்கத் தொகுதியுடன் தொடர்பான துணையான சுரப்பிகள்

1. சுக்கிலப்புடகம் (02)
2. முன்னிற்கும் சுரப்பி

* விந்துக்களின் ***உடற்தொழிலியல் ரீதியான முதிர்வு*** என்பது.... இயங்கும் ஆற்றல் அதிகரிக்கப்படுவதும், கருக்கட்டும் தன்மையை பெற்றுக் கொள்ளுதலும் ஆகும். இது ***விதை மேற்றிணிவில*** நடைபெறும்.

* விந்துப்பிறப்பாக்கத்தை ஆரம்பிப்பது FSH ஆகும். (LH, Testostrone பங்குகொள்ளும்)

* விந்தின் கருவுக்கு மேற்புறத்தில் உச்சிமூர்த்தம் காணப்படும். இது திரிபடைந்த இலைசோசோம் ஆகும்.

காணப்படும் நொதியங்கள்

- Trypsin
- Pepsin
- Hyaluronidase

* **Testosrone** விந்துப்பிறப்புக்கலங்கள் விந்துக்கலங்களாகும் போது நடைபெறும் வளர்ச்சியையும், விருத்தியையும் ஒழுங்காக்கும்.

* **ஆண்களில்** சுக்கிலச் சிறுகுழாயின் முதிர்ச்சியும், விந்துக் கலங்களின் உற்பத்தியும் நடைபெறுதல் (முதற்பால் இயல்பு)

* **பெண்களில** மாதவிடாய் சக்கரமும், சூல்கொள்ளல் ஆரம்பித்தல் (முதற்பால் இயல்பு)

* முளைய நிலையிலேயே சூல் உற்பத்தியாக்கப்பட்டுவிடும்.

* கருக்கட்டல் நிகழும் தானம் - பலோப்பியன் குழாய்

* கருப்பையின் 03 படைகள்
* Peri matrium (கருப்பைச் சுற்று)

* Myo matrium (கருப்பைத் தசை)
* *Endo matrium (கருப்பை அகத்தோல்)* □□□ தொழிற்பாட்டுப்படை

* பெண்ணின் புணர்ச்சி அங்கம் யோனி மடல்

* மனிதப் பெண்ணின் சூலில் மஞ்சட் கரு அல்லது கருவூன் காணப்படுவதில்லை.
(தாயிடம் இருந்து போசணை)

* விந்துக்கள் இயங்கும் ஆற்றல் அதிகரிக்கப்பட்டு விந்துக்கள் அதி உயிர்ப்புத்தன்மையை பெறுதல் □ **Capasitation** ஆகும் (பெண் இனப்பெருக்கச் சுவட்டில்)

• **உட்பதித்தல் என்றால் என்ன?**
அரும்பர் சிறைப்பையானது கருப்பையை அடைந்து போசணை அரும்பர் சடைமுளைகள் மூலம் கருப்பை அகத்தோலுடன் இணைக்கப்படுதல்.

* கருப்பையில் அரும்பர்சிறைப்பை நிலையிலேயே பதிக்கப்படும்.

* சூல்வித்தகம் - **Only Mamalia** (குருதி கலப்பது இல்லை)

* கருத்தாங்கல் காலத்தில் பால் சுரக்கப்படும் **(HPL)** எனினும் பால் வெளியேற்றம் இல்லை.
***Progestrone* ,, Oxytocine ஐ** நிரோதிக்கும.

* கர்ப்ப காலத்தில் கருப்பை சுவரினை Progestrone தளர்வு நிலையில் பேணும்.

* சூல் வித்தகத்தினால் **Prostogladin** (Oxytocin தாண்டும்)

தாய்ப் பாலில் உள்ள புரதங்கள்

கேசினோஜன்

இலக்ரோ அல்புமின்

குளோபியூலின்

* மனித இனத்தின் கூர்ப்பு சார்ந்த வெற்றிக்கு காரணமாக அமைவது...... மனிதனின் உளவிருத்திக்கு நீண்ட காலம் எடுத்தல்

LH
FSH
மஞ்சட் சடலம்

கிராபியன் புடைப்பு

* முதலான புடைப்பு

LH
FSH

Progestrone, சிறிதளவு Oestrogen
Oestrogen

* பல்விந்துக் கருக்கட்டலை தடுப்பது.....
1. உச்சிமூர்த்த நொதியங்கள், தெளிவு வலயத்தில் உள்ள ஏனைய விந்துவாங்கி தானங்களை அழிக்கும்.
2. மேற்பட்டடை சிறுதுணிக்கை நொதியங்கள் தெளிவு வலயத்தை மேலும் கடினமாக்கும்.

* உண்மையான கருக்கட்டல் என்பது?
ஆண்முதிர்வு வழிக் கருவும், பெண் முதிர்வு வழிக்கருவும் இணைதல.
முளைய மென்சவ்வு - கோரியன், அமீனியன், அலந்தோயி, கருவூன்பை
தொப்பூள் நாண் - அலந்தோயி, அமீனியன், கருவூன்பை
ஆண்களில் நிரந்தர பிறப்புக் கட்டுப்பாட்டு முறை - Vasectomy மேற்கொள்ளல்.

* பெண்களில்....... -சிறுகுழாய் இழையிடல் (Tubal ligation)
* தாவரங்களில் பதியமுறை இனப்பெருக்கம் என்பது..... இலிங்கமில் இனப்பெருக்கமே ஆகும்.
* தாவரங்கள் தரை வாழ்க்கைக்கான இசைவாக்கங்கள்.
1. இனப்பெருக்க அங்கங்கள் பல கலங்களினால் ஆக்கப்பட்டிருக்கும்.
2. இனப்பெருக்க அங்கங்கள் மலட்டுக் கலப்படை ஒன்றினால் சூழப்பட்டு பாதுகாக்கப்பட்டிருக்கும்.

- *Pogonatum* - இழைமுதல்கள் தோற்றுவிக்கப்படும்.
- *Nephrolepis* - குவைகள் தோற்றுவிக்கப்படும்.

(நுகம் புணரித்தாவரத்தினுள்ளேயே போசணையை பெற்று முளையமாக விருத்தியடையும்.)

* *Selaginella* - குறைவிருத்தியடைந்த பெண், ஆண் புணரித்தாவரங்கள் உருவாக்கப்படும்.

* *Cycas* - ஆண்புணரி மட்டும் குறைவிருத்தி, பெண் புணரி முதிர்ந்த பெண்புணரித்தாவரம்.

* பல்பிசிர் விந்து, அகநீர் தேவை.

* Anthophyta - பெண்புணரித் தாவரம் முளையப்பை எனவும் அழைக்கப்படும். உணவு சேமிப்பற்றது.
* மகரந்த குழாய் பருகியாக தொழிற்படாது.
* இரட்டை கருக்கட்டல்
* மும்மடிய வித்தகவிழையம்.

* இருவித்திலை தாவரத் வேரின் கலன்கட்டு வெளியாதியானது,
(நாலாதியானது)
தண்டின் கலன்கட்டு உள்ளாதியானது.

* மரவுரி (கலன் மாறிழையத்திற்கு வெளிப்புறம்)

துணை உரியம்
முதல் உரியம்
பரிவட்டவுறை
முதல்மேற்பட்டை
துணையான மேற்பட்டை
தக்கை மாறிழையம்
தக்கை

* சுற்றுப்பட்டை
தக்கைமாறிழையம் + தக்கை + துணைமேற்பட்டை
* வைரம் --- துணைக்காழ்ப் பகுதி
* **இருவித்திலை தண்டின் கலன்மாறிழையம் முதலானதும் (சிறுகட்டு) துணையானதும் (கட்டிடை) வேரின் கலன் மாறிழையம் துணையானது.**
* தாவர வளர்ச்சிப் பதார்த்தங்கள்,
ஓட்சின் - உரியம்
ஜிபரெலின் - புடைக்கலவிழையம்
சைற்றோகைனின் - காழ்
எதிலீன் - உரியம்
அப்சிசிக் அமிலம் - காழ்
* கலன் மாறிழையத் தொழிற்பாட்டை ஆரம்பிப்பது - **Auxin**
தொழிற்பாட்டை அதிகரித்தல் - **Cytokinin**
* வினைத்திறனான களைகொல்லி - 2,4D, MCPA
* கன்னிக் கனியமாதல் - NAA
* Hertiwig - கருக்கட்டலின் போது விந்தின் கருவும், சூலின் கருவும் ஒன்றுடன் ஒன்று இணையும்
* Boveri,Sutton - நிறமூர்த்த கொள்கை
* நிறமூர்த்த கொள்கை - பாரம்பரிய இயல்புக்கு பொறுப்பான பரம்பரை அலகுகள் நிறமூர்த்தங்களினாலேயே காவப்படும்.
* பெரும்பாலான விகாரங்கள் பின்னடைவானவை.
* நிறமூர்த்த எண்ணிக்கையில் மாற்றம் .....
கிரமமில் மடியம்
கிரம மடியம்
* கிரமமில் மடியம் (2n-1) / (2n+1)
Turners Syndrome
Kilinfelters syndrome
Downs Syndrome
* வெளிறல், அரிவாலுரு குருதிச்சோகை, தலசீமியா, Cystic Fibrosis - தன்னிறமூர்த்தத்தில் ஏற்படும்.
பின்னடைவானவை.
* Huntigtons - தன்னிறமூர்த்தம். ஆட்சியான விகாரம்.

* DNA பிரித்தெடுப்பு - அடர்த்திப்படித்திறன் மையநீக்கல்
* Endo Nuclease (வெட்டுதல்)
* DNA Ligase (இணைப்பை ஏற்படுத்தல்)
* DNA Polymarase (பல பிரதிகளை உருவாக்கம்)

* லாமார்க - பெற்ற இயல்புகள் தலைமுறையுரிமை அடையும்.

அனுமானித்தது
அவதானித்தது

* டார்வின் வலஸ்
உயர்வான இனப்பெருக்கும் ஆற்றல்
மாறா குடித்தொகை அளவு
குடித்தொகையில் பல்வகமை
நிலவுகைக்கான போட்டி
தக்கன பிழைத்தல்

வடமராட்சி கிழக்கில் குறைதீர்க்கும் அமைச்சர்

வெற்றிலைக்கேணி மக்கள் சந்திப்பு



வெற்றிலைக் கேணி மக்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்து அவர்களது தேவைகள் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார். வெற்றிலைக் கேணி பொதுநோக்கு மண்டபத்தில் மேற்படி சந்திப்பு கடந்த 25 ஆம் பெற்றது.

இதன்போது பல்வேறு தேவைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பில் அமைச்சரிடம் மக்கள் எடுத்துரைத்தனர்.

இதில் மரபுசாராத கடற்றொழில் நடவடிக்கை, இந்திய மீனவர்களது அத்துமீறிய தொழில் நடவடிக்கைகளால் தாம் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகள், மின்சாரம், போக்குவரத்து, காணி, வீதிப் புனரமைப்பு உள்ளிட்ட பல்வேறு தேவைகள் தொடர்பில் மக்கள் அமைச்சர் எடுத்து விளக்கினர்.

இதுவிடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமைச்சர் குறித்த விடயங்கள தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார். இதில் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), மருதங்கேணி பிரதேச செயலர் திருலிங்கநாதன், ஈ.பி.டி.பியின் யாழ்மாவட்ட அமைப்பாளர கந்தசாமி கமலேந்திரன் (கமல்), ஈ.பி.டி.பியின் வடமராட்சி பிரதேச இணைப்பாளர் சிறிரங்கேஸ்வரன், ஈ.பி.டி.பியின் கரவெட்டி பிரதேச இணைப்பாளர் செந்தில்நாதன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

உடுத்துறை பொது நோக்கு மண்டபம் மக்கள் பாவனைக்கு கையளிப்பு

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சி திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட உடுத்துறை பொதுநோக்கு மண்டபத்தினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்து மக்களிடம் கையளித்தார். வடமராட்சி கிழக்கிற்கு கடந்த 25 ஆம் திகதி விஜயம் மேற்கொண்ட அமைச்சர் பொது நோக்கு மண்டபத்தினைத் திறந்து வைத்தார்.

உடுத்துறை கிராம அபிவிருத்தி அமைப்பின் செயற்திட்டங்களுக்கு அமைவாக 1.5 மில்லியன் ரூபா செலவில் இக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இப் பொதுநோக்கு மண்டபத்தினை திறந்து வைத்த அமைச்சர் மின்னொளியையும் ஏற்றி வைத்து மக்கள் பாவனைக்காக கையளித்தார். அங்கு உரையாற்றிய

அமைச்சர் இக்கடற்கரைப் பகுதியை ஏ9 பாதையைப் போன்று அழகானதாக மாற்றியமைக்க நடவடிககைகள் முன்னெடுக்கப்படுமெனபதுடன் இப்பகுதியின அபிவிருத்தி தொடர்பிலும் கவனம் செலுத்தப்படுமென்றும் தெரிவித்தார்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு மக்களது ஒன்றிணைந்த ஆதரவும் ஒத்துழைப்பும் அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

மருதங்கேணி வடக்கு மக்கள் சந்திப்பு

(மருதங்கேணி)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மருதங்கேணி வடக்கு பொதுமக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

மருதங்கேணி வடக்கு வள்ளுவர் முன்பள்ளியில் இப் பொதுமக்கள் சந்திப்பு நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது அங்குள்ள பொது நோக்கு மண்டபம் கூரையில்லாத நிலையில் இருப்பதாகவும் அதற்கு கூரை வேலையை செய்து தருமாறும் பொதுமக்கள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு அமைவாக குறித்த கட்டடத்தின் கூரை வேலையை கிடுகு மூலமாக வேய்வதற்கான திட்டத்தை உடன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்ட அமைச்சர் அங்குள்ள மைதான புனரமைப்பு மற்றும் தேவா கல்வி நிலையத்திற்கு பிறிதொரு கொட்டகையை அமைத்துக் கொடுப்பதற்கும் துறைசார்ந்தோருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கருவாடு பதனிடும் இடங்கள் பார்வை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் கருவாடு பதனிடும் இடங்களை பார்வையிட்டதுடன் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடினார்.

வடமராட்சி கிழக்கிற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் குறித்த இடங்களுக்கும் சென்றிருந்தார்.

மருதங்கேணி கடற்கரைப் பகுதியில் கருவாடு பதனிடும் இடத்தையும் பார்வையிட்ட அதேவேளைஉடுத்துறை கடற்கரை பகுதியில் மேற்படி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினார்.

வேலி இல்லாத சந்தை

(அச்சுவேலி)

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழ் உள்ள விசுவமடு பொதுச்சந்தையானது நீண்ட காலமாக சுற்று வேலிகள் எவையும் அமைக்கப்படாத நிலையில் திறந்த வெளியரங்காக் காணப்படுகின்ன்றது.

இதனால் சந்தைப் பகுதிக்குள் கால்நடைகளும் கட்டாக் காலி நாய்களும் சென்று வர்த்தகர்களின் விற்பனைப் பொருள்களுக்கு சேதத்தை ஏற்படுத்தி வருவதுடன் சந்தைப் பகுதியையும் அசுத்தப் படுத்தியும் வருகின்றன. இதனால் தாம் பல்வேறு அசௌகரியங்களைச் சந்திப்பதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகள்

கல்வியமைச்சு இலங்கை ஆசிரியர் கல்வியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பினை 11 ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டி பரீட்சை 2013 ஒக்ரோபர் மாதம் 2013 கொழும்பில் நடைபெறும்.

தடைதாண்டல் பரீட்சைக்கான பாடங்களாக பொதுமுகாமைத்துவம் மற்றும் தாபனச் செயற்பாடுகள், நிதி ஒழுங்குக் கோவை, கல்விச சட்டமும் ஆகும் இப்பரீட்சைமும் மொழிகளிலும் நடைபெறும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 19.08.2013 களில் பரீட்சை மண்டபத்தில் தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு காண்பித்தல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் ஒரு பாடத்திற்கு 150 ரூபா மொத்தப் பரீட்சை கட்டணம் 450 ரூபாவாகும்.

பரீட்சைக்கான மாதிரி விண்ணபப்படிவம் விண்ணபிக்கும் முறை மற்றும் மேலதிக தகவல்களை 26.07.2013 அரச வர்த்தமானியை பார்வையிடலாம். (105)

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை 2013, கார்த்திகை மாதம் கொழும்பில் நடைபெறுகின்றன.

இப்பரீட்சைக்கான பாடவிதானம், பொதுநிர்வாகம், நிதி, கல்வி, கல்விச் சட்டம், நிர்வாகம், மேற்பார்வை யாகும். மும்மொழியிலும் பரீட்சை நடைபெறும்.

விண்ணப்பங்கள் 26.08.2012க்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும் பரீட்சைக் கட்டணமாக ஒரு பாடத்திற்கு 500 ரூபாவும் முழு பாடத்திற்கு 1000 ரூபா செலுத்த வேண்டும். முதல் தடவையாக விண்ணப்பம் கோருவோருக்கு கட்டணம் அறவிடபடமாட்டாது.

பரீட்சை விண்ணபப் படிவம், பரீட்சை அனுமதி மற்றும் விவரங்களை அரச வர்த்தமானி 26.07.2013இல் அறிந்து கொள்ளலாம். (105)

23 வருடங்களின் பின்னர் வளலாய் பிள்ளையாரில் இசைநிகழ்ச்சி

(அச்சுவேலி)

வளலாய் பிள்ளையார் ஆலயமானது கடந்த 23 வருடத்திற்குப் பின்னர் இந்த வருடம் திருவிழாக்கள் இடம்பெற்றன.

இத் திருவிழாக்களின் இறுதி நாளாகிய கடந்த செவ்வாய்க் கிழமை இரவு பூசைகள் முடிவுற்றதன் பின் சாந்தன் இசைக் குழுவினரின் இன்னிசை நிகழ்வு இடம்பெற்றது.

நீண்ட காலத்தின் பின்னர் பிரபல பாடகரான சாந்தனின் இசையினை இரசிப்பதற்கு ஏராளமான பக்த அடியார் ஆலயத்துக்கு வருகை தந்து இவ் இசை நிகழ்ச்சியினைக் கண்டு கழித்தனர்.

இந் நிகழ்வில் விநாயகப் பெருமானின் பக்திப்பாடல் களே முதன்மைபடுத் தப்பட்டு இன்னிசை நிகழ்வு இடம்பெற்றதுடன் பல பாடகர்களும் இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்து தமது திறமையை வெளிக் காட்டடினர். (85)

வேலணை தெற்கு ஐயனார் வித்தியாசாலைக்கு மகிந்த சிந்னையில் 5000 ஊட்டல் பாடசாலைகளைப் புனரமைத்தல் செயற்றிட்டத்தின் கீழ் பிரதேச செயலகத்திற்கு ஊடாக ஒதுக்கப்பட்ட 5 இலட்சம் ரூபா நிதியில் பிரதான மண்டபத்தின் கூரை புனரமைப்பும், சிறுவர்களுக்கான சுற்றுவட்ட விளையாட்டு மைதானமும், பாடசாலை கட்டடத்தினையும் சுற்றி நடைபாதையும், பாடசாலை பெயர்ப் பலகையும், நுழைவாயிலும் அமைக்கப்பட்டது. இதில் புதிதாக அமைக்கப்பெற்ற நுழைவாயிலினையும், பெயர்ப்பலகையினையும் காணலாம். (21)

விண்ணப்பம் கோரல்

சுகாதார அமைச்சினால் தாதி வேைவக்குரிய மறுசேவைக் குரிய .மறுபயிற்சி மற்றும் இணைப்புப் பாடநெறிக்காக விஞ்ஞானமானி தாதி பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளப்படவுள்ளது.

இத்றகாக இலங்கைப் பிரஜைகள் ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவர்கள் விஞ்ஞானமாணி தாதி (Bsx.Nursing) பட்டத்தினை பூர்த்தி செய்திருக்க வேண்டும். வயது 18 க்கும் 28 க்கும் இடைபட்டவராகவும், உடல், உள,ரீதியில் ஆரோக்கியமுடையவராகவும் இருத்தல் அவசியம்.

மேலதிகமாக விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் மூன்று வருடங்கள் தொடராக வாழ்பவராகவும், உயரம் 4 அடி 10 அங்குலத்துக்கு குறையாமல் இருத்தல்.

எழுத்து மூலப் போட்டிப் பரீட்சையின் பாடத்திட்டம், விண்ணப்பிக்கும் முறை, நேர்முகப் பரீட்சையின் போது தேவைப்படும் ஆவணங்கள் போன்ற விபரங்கள் 26.07.2013 அரச வர்த்தமானியை பார்வையிடலாம். விண்ணப்ப முடிவு திகதி 26.08.201 ஆகும்.

ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்க பாகிஸ்தான் மக்கள் கட்சி முடிவு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் அதிபர் தேர்தல், வேறு திகதிக்கு மாற்றப்பட்டதை கண்டித்து, பாகிஸ்தான் மக்கள் கட்சி, இத்தேர்தலை புறக்கணிக்க முடிவு செய்துள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியின் பதவி காலம், வரும், செப்டம்பர் மாதம், 8ஆம் திகதி முடிகிறது. இதையடுத்து, அடுத்த மாதம், 6ஆம் திகதி, அதிபர் தேர்தல் அறிவிக்கப்பட்டது. ரம்ஜான் நெருக்கத்தில், ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால், தொழுகைகளில் உரிய நேரத்தில் கலந்து கொள்ள முடியாத சூழல் உள்ளதாக, ஆளும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சித்தலைவர், ஜபருல் ஹக், நீதிமன்றில் மனு செய்திருந்தார். இந்த மனுவை விசாரித்த, நீதிமன்றம் ஜனாதிபதி தேர்தலை, இம்மாதம், 30ஆம் திகதி நடத்தும்படி உத்தரவிட்டுள்ளது. ஜனாதிபதி தேர்தலில், மீண்டும் போட்டியிடப் போவதில்லை என, ஜனாதிபதி சர்தாரி அறிவித்துள்ளார். ஆளும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி சார்பில், சிந்து மாகாண முன்னாள் கவர்னர், மம்நூன் ஹுசைன், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிறார். முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான் கானின், தேரிக்-இ-இன்சாப் கட்சி சார்பில், முன்னாள் நீதிபதி வாஜுதீன் அகமது, போட்டியிடுகிறார். பாகிஸ்தான் மக்கள் கட்சி சார்பில், ஜனாதிபதி வேட்பாளராக, ரசா ரபானி அறிவிக்கப்பட்டுள்ளார். தேர்தல் திகதி மாற்றப்பட்டுள்ளதால், பிரசாரம் செய்ய, போதிய கால அவகாசம் இல்லை. பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி வேட்பாளர், ஹுசைன், எளிதாக வெற்றி பெறுவதற்காக, தேர்தல் திகதி மாற்றப்பட்டுள்ளது. இது அரசியலமைப்பு சட்டப்படி உரிமை மீறலாகும். தேர்தல் திகதியை மாற்றி விட்டால், இத்தேர்தலை புறக்கணிப்போம், என, ரசா ரபானி கூறினார்.

உலகச் செய்திகள்

முதியோர் இல்லத்தில் தீ விபத்து சீனாவில் 11பேர் பரிதாப மரணம்

(பீஜிங்)

தென் கிழக்கு சீனாவின் ஹெய்லோங்ஜாங் மாகாணத்தில் உள்ள ஹெய்லன் நகரில் ஏழ்மை நிலையில் உள்ள நோயுற்ற முதியோரை பராமரிக்கும் இல்லம் அமைந்துள்ளது.இந்த இல்லத்தில் 283 பேர் தங்கியுள்ளனர்.இங்குள்ள ஓர் அறையில் தங்கியிருந்த வாங்குயி என்பவர் வைத்திருந்த பணத்தை யாரோ திருடி விட்டனர்.அறையில் இருந்தவர்களிடம் கேட்டு பார்த்தும் யாரும் பணத்தை திருப்பிதர முன்வராததால் ஆத்திரமடைந்த அவர் அந்த கட்டடத்தை தீயிட்டு எரித்தார்.இந்த சம்பவத்தில் வாங்குயி உள்பட 11 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர்.விரைந்து வந்த மீட்புப் படையினர் மற்ற பகுதிகளுக்கும் தீ பரவாமல் கட்டுப்படுத்தி பிணங்களை மீட்டனர்.காயமடைந்த மேலும் இருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

செவ்வாய் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்பும் முயற்சி

செவ்வாய் கிரகத்திற்கு வருகிற 2021 ஆண்டில் மனிதர்களை அனுப்ப இங்கிலாந்து திட்டமிட்டுள்ளது.செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் வாழ முடியுமா என்பது குறித்து நாசா விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.இதற்காக எண்டோவர் என்ற விண்கலம் அனுப்பப்பட்டுள்ளது. இந்த விண்கலம் செவ்வாய் கிரகத்தின் தட்ப வெப்பநிலை, நில அமைப்பு மற்றும் சூழல் போன்றவற்றை புகைப்படம் எடுத்து பூமிக்கு அனுப்பி வருகின்றது.இந்நிலையில் வருகிற 2033ஆம் ஆண்டில் செவ்வாய் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்பும் முயற்சியில் நாசா தீவிரமாக இறங்கியுள்ளது.நாசாவின் இந்த முயற்சியை முறியடிக்கும் விதமாக, வருகிற 2021ஆம் ஆண்டிலேயே மனிதர்களை அனுப்ப இங்கிலாந்து திட்டமிட்டுள்ளது.இதற்காக லண்டன் இம்பீரியல் கலலூரியை சேர்ந்த விஞ்ஞானிகள், மூன்று பேர் பயணம் செய்யக் கூடிய வகையில் விண்கலம் ஒன்றை வடிவமைத்து வருகின்றனர்.இதுகுறித்து இந்த குழுவின் தலைவர் பேராசிரியர் டாம்பைக் கூறுகையில், செவ்வாய் கிரகத்துக்கு ஆட்களை அனுப்புவதுதான் அடுத்த மிகப்பெரிய இலக்காக கருதுகிறோம்.மனிதர்களை அனுப்பும் அதே நேரத்தில் மற்றொரு ராக்கெட்டில் செவ்வாய் கிரகத்தின் வடக்கு பகுதிக்கு ரோபோக்களை அனுப்பி, ஆய்வு மேற்கொள்ள உள்ளோம்.

மேலும் செவ்வாய் கிரத்திற்கு செல்பவர்கள், 9 மாதங்களுக்கு பிறகு பூமிக்கு திரும்புவர்.அந்த காலங்களில் புவிசர்ப்பு சக்தி கிடைக்காததால், அவர்களின் உடல் எடை, தசை மற்றும் எலும்புகளில் பாதிப்பு ஏற்படும்.எனவே அவர்களுக்கு உடல் நிலையில் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வண்ணம் அதிநவீன முறையில் விசேஷமாக விண்கலம் வடிவமைக்கப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஸ்பெயினின் ரயில் விபத்திற்கு அதிகவேகமே காரணம்



ஸ்பெயின் நாட்டின் வடமேற்கு பகுதியில் உள்ள சான்டியாகோ நகரில் நடைபெற இருந்த கிறிஸ்தவ ஆலய விழாவில் பங்கேற்பதற்காக அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ரயில்களில் ஏராளமானோர் வந்தனர்.அதுபோன்று யாத்திரீகர்கள் வந்த ஒரு ரயில்தான் விபத்தில் சிக்கியது. எட்டு பெட்டிகள் கொண்ட அந்த ரயிலில் 5 ரயில்வே பணியாளர்களும், 218 பயணிகளும் இருந்தனர்.

அந்த ரயில் வளைவு ஒன்றில் அதிவேகத்தில் திரும்பும் போதுதான் தடம்புரண்டு பெட்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்தில் சிக்கியுள்ளது. அந்த வளைவில் அதிகபட்சமாக 80 கி.மீ வேகத்தில்தான் திரும்ப வேண்டும் என்று சாரதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.ஆனால், இரட்டிப்பு வேகத்தில், அதாவது மணிக்கு 200 கிமீ வேகத்தில் அந்த ரயில் வந்ததால்தான் ரயில் விபத்தில் சிக்கியிருக்கிறது.

ரயில் தடம்புரண்டு மோதிய வேகத்தில் பெட்டிகளில் தீப்பற்றியுள்ளது. அப்போது, இடிபாடுகளில் சிக்கியோர் வெளியே வர முடியாமல் தீயில் கருகியுள்ளனர்.விபத்துக குறித்து தகவலறிந்ததும் உடனடியாக பெட்டிகளில் சிக்கியிருந்தோரையும், காயமடைந்தவர்களையும் மீட்புக் குழுவினர் மீட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

மொத்தம் 130 பேர் காயமடைந்துள்ளதாகவும், அவர்களில் 30க்கும் அதிகமானோர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.அந்நாட்டில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் இந்த கோர விபத்தில் சிக்கிய ரயிலை செலுத்தி வந்த 2 சாரதிகளும் உயிர் தப்பியுள்ளார். அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.2004ம் ஆண்டு அங்கு நடந்த கிறிஸ்தவ ஆலய திருவிழாவில் குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட்டதில் 190 பேர் பலியானார்கள். இந்நிலையில், ரயில் விபத்து நடந்த போது படு பயங்கரச் சத்தம் கேட்டதாக கூறப்படுகிறது. எனவே, முதலில் குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டாலும், ரயில் அதிவேகத்தில் வந்ததே விபத்துக்கு காரணமாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.இவ்விபத்தால், சான்டியாகோ நகரில் நடைபெற இருந்த கிறிஸ்தவ ஆலய திருவிழா நிகழ்ச்சிகள் இரத்து செய்யப்படும் என்றும் மேலும், 3 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும் எனவும் ஸ்பெயின் அரசு அறிவித்துள்ளது.

கிருமிகளை அழிக்காத டெட்டோல் விற்பனைக்கு தடை

(ஜோகன்னஸ்பர்க்)

கிருமி நாசினியான, டெட்டோலுக்கு, தென் ஆப்ரிக்காவில் தடை விதிக்கப்பட்டுள்ளது. "இது, பாக்டீரியாக்களை முற்றிலும் அழிப்பதில்லை" என, அந்நாட்டு தேசிய தரக் கட்டுப்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

உலகின் பெரும்பாலான நாடுகளில், கிருமி நாசினியாக, டெட்டோல் பயன்படுத்தப்படுகிறது. இதை பயன்படுத்துவதால், 99.9 சதவீத பாக்டீரியாக்கள் அழிக்கப்படுவதாக, அந்நிறுவனம் விளம்பரம் செய்து வருகிறது. இதுகுறித்து, தேசிய தரக் கட்டுப்பாட்டு ஆணையத்தை சேர்ந்த, தோமஸ் மட்ஸ்வே கூறியதாவது பிரிட்டனை சேர்ந்த நிறுவனத்தின் சார்பில் தயாரிக்கப்படும் டெட்டோல், 99.9 சதவீதம் பாக்டீரியாக்களை அழிக்கும் திறன் கொண்டதாக, விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. அதன் பாட்டிலிலும், அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், எங்கள் நாட்டில் விற்பனை செய்யப்படும் பொருட்களின் தரத்தை, சோதனையிடுவது வழக்கம். அந்த வகையில் நடத்தப்பட்ட சோதனையில், அந்நிறுவனம் தெரிவித்துள்ளபடி, 99.9 சதவீத பாக்டீரியாக்கள் அழிக்கப்படவில்லை. இதனால், அந்நிறுவன விளம்பரங்களை நம்பி, வாடிக்கையாளர்கள் இதை உபயோகிப்பதால், அவர்களுக்கு தீமை ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, டெட்டால் விற்பனைக்கு, எங்கள் நாட்டில் தடை விதித்துள்ளோம் என்றார். இதே போல், வேறுசில காரணங்களுக்காக, மற்றொரு கிருமி நாசினியான, டாமெஸ்டோஸ் விற்பனைக்கும் அந்நாட்டில் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, சந்தையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த, 4,000 டெட்டோல் போத்தல்கள் மற்றும், 8,000 டாமெஸ்டோஸ் போத்தல்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

அமெரிக்க நீதிமன்றுக்கு இந்தியர் நீதிபதியாக நியமனம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் வசிக்கும் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர் வின்சி கிர்தாரி சப்ரியா.என்பவரை கலிபோர்னியா வடக்கு மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக நியமிக்க ஜனாதிபதி ஒபாமா உத்தரவிட்டார். தற்போது இவர் சான் பிரான்சிஸ்கோ நகரில் அரசு துணைச் சட்டத்தரணி பணியாற்றுகிறார்.

2005ஆம் ஆண்டு முதல் இப்பதவியை சிறப்பாக வகித்து வருகிறார். இவருடன் வேறு சிலரும் நீதிபதியாகி இருக்கிறார்கள். இந்த நியமனம் செனட் சபை ஒப்புதல் கிடைத்ததும் அமுலுக்கு வந்து பதவி ஏற்பார்கள்.

நீதிபதியாக இந்திய வம்சாவளியான வின்சி கிர்தாரி சப்ரியா நியமனம் செய்யப்பட்டதற்கு வட அமெரிக்காவின் தெற்காசிய சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் நதீம் பெசார் வரவேற்றுப்பாராட்டு தெரிவித்தார். கலிபோர்னியா மாவட்ட நீதிமன்றத்துக்கு இந்தியர் நீதிபதியாக நியமிக்கப்பட்டு இருப்பது இதுவே முதல் தடவையாகும்.

அமெரிக்க நீதிமன்றம் ஏற்கனவே தெற்கு ஆசியாவைச்சேர்ந்த ஸ்ரீகாந்த் சீனிவாசன் அமுல் தாபர் கதே பிச்சூன் நீதிபதிகளாக பதவி வகித்து வருகிறார்கள். தற்போதைய நியமனத்தின் மூலம் வின்சி கிர்தாரி சப்ரியா 4ஆவது நீதிபதி என்ற பெருமையைப் பெறுகிறார்.

வேம்பிராய் குடிநீர் விநியோகதிட்டத்தை வரணி வடக்குவரை விரிவுபடுத்தக் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபைக்கு உட்பட்ட வரணி கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய வரணி வடக்கு மாசேரி இடைக்குறுச்சி போன்ற பகுதி மக்கள் குடிநீர் பெறுவதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இப்பகுதிகளில் காணப்படும் நன்நீர்க் கிணறுகள் நீர் வற்றிவிடுவதும், சில நீர்க் கிணறுகள் பழுதடைந்து பாவிக்க முடியாமல் இருப்பதனாலும் இப்பகுதி மக்கள் நன்நீர் பெறுவதற்கு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மேலும் வேம்பிராயில் இருந்து மேற்கொள்ளப்படும் குடிநீர் விநியோகமானது வரணி மகா வித்தியாலம் மட்டும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த திட்டத்தினை வரணி வடக்கு வரை குழாய் பொருத்தி நீர் பெற வசதி யேற்படுத்தித் தரவேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். இப்பகுதி மக்கள் குடிநீர் பெறுவதற்கு நீண்ட தூரம் சென்றே நீரினைப்பெற வேண்டியுள்ளது.

எனவே வேம்பிராயில் இருந்து குழாய் மூலம் குடிநீர் பெறும் திட்டத்தினை வரணி வடக்கு வரை நீடித்தால் இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் பெரிதும் நன்மையடைவார்கள் எனவே சம்பந்தப்பட்ட அதி காரிகள் கவனமெடுத்து குடிநீர் பெற வசதியேற்படுத்தித்தர வேண்டுமென இப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (130)

தாளையம்பதியில் மகோற்சவம்

சாவகச்சேரி விளைவேலி தாளையம்பதி துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று ஆரம்பமாகின்றது. இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகும் மகோற்சவம் 10 தினங் கள் நடைபெறவுள்ளது.

தினமும் காலை 8.30 மணிக்கு அபிசேகம், பூசை வழிபாடுகள் இடம்பெற்று நண்பகல் 12.30 மணிக்கு நிறைவுபெறுவதோடு அன்னதான நிகழ்வும் இடம்பெறும்.

மாலை திருவிழா 5 மணிக்கு யாகபூசையுடன் ஆரம்பமாகி இரவு அம்பாள் வீதியுலாவுடன் நிறைவடையும். எதிர்வரும் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு வேட்டைத்திருவிழா மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெறுவதோடு மறுநாள் ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழா இடம்பெறும். வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை இரதோற்சவம் இடம்பெறுவதுடன், மறுநாள் ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (இ)

அரசாங்க...

நிலைமையையே இது காட்டுகிறது.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை விலை கொடுத்து வாங்கி, ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் பிரசாரங்களை உளரீதியாக வீழ்த்தி, தேர்தலில் வெற்றிபெற அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

கோடிக்கணக்கில் பணத்தை விநியோகித்து, பதவி, சிறப்புரிமைகளை வழங்கி, ஊடகங்களைப் பயன்படுத்தி விமர்சித்த போதும் ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்த்தமுடியாது என்பதை ராஜபக்ச அரசாங்கத்திற்கு கூறிவைக்க விரும்புகிறோம்.

அரசாங்கம் தற்போது மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளது. வாக்குச்சாவடிகளுக்கு செல்லாத சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்காளர்களை உள ரீதியாக தட்டியெழுப்புவதற்காக அரசாங்கம், எதிர்க்கட்சியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களை தம்பக்கம் இழுத்து வருகிறது என்றார்

ராஜீவ்...

தில் தமிழக மக்களின் மன நிலையைப் புரிந்துகொண்டு மத்திய அரசு செயற்பட்டு வருகின்றது. தமிழக மக்களின் மன உணர்வைப் புரிந்துகொண்டதன் வெளிப்பாடே முதலமைச்சர் ஜெயலலிதா, தி.மு.க. தலைவர் கருணாநிதி மற்றும் கம்யூனிஸ்ட் தலைவர்களுக்கு எழுதிய கடிதத்தில் பிரதமர் மத்திய அரசின் நிலைப்பாட்டை தெளி வாகத் தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்களுக்கு இணை யான உரிமையுடனும், அதிகாரத்தில் சமபங்குடனும் இலங் கைத்தமிழர்கள் வாழவேண்டு மென்பதற்காக உருவாக்கப்பட்டதே ரஜீவ் - ஜே.ஆர் ஒப்பந்தம் அந்த ஒப்பந்தத்தில் எவ்வித குறைவும் ஏற்படாமல் அதனை நடைமுறைப்படுத்த மத்திய அரசு நட்வடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

4 பால்மா...

அமைச்சர் சம்பிக்க ரணவக்க தலைமையிலான தொழிநுட்ப ஆய்வுத்துறை அமைச்சு, தனியான ஆய்வொன்றை நடத்தி, வெளிநாட்டு பால்மா வகைகளில் டிசிடி கலந்திருப்பதாக ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிட்டுள்ளது.

'DCD என்பது விவசாயத்திற்கு பயன்படுத்தப்படுகின்ற அல்லது வைக்கோலுக்கு பயன்படுத்துகின்ற ஒருவகை இரசாயனப் பொருள். நாங்கள் ஆய்வுக்குட்படுத்திய வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் எல்லா பால்மா வகைகளிலும் இந்த னுஊனு இராசயனம் இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று தொழிநுட்ப ஆய்வுத்துறை அமைச்சின் ஊடகச் செயலாளர் தனுஷ்க ராமநாயக்க பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

இலங்கை நுகர்வோர் அதிகார சபைக்கும் சுகாதார அமைச்சுக்கும் சுங்கத்துறைக்கும் தொழிநுட்ப ஆய்வுத் துறை அமைச்சு பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

இந்த பால் மாவகைகளை தொடர்ந்தும் இறக்குமதி செய்வதை அனுமதிப்பதா அல்லது இலங்கையில் தடை செய்வதா என்ற தீர்மானத்தை நுகர்வோர் அதிகாரசபையும் சுகாதார அமைச்சும் எடுத்தால் அதன்படி நாட்டின் சுங்கத்துறை அடுத்தகட்ட நடவடிக்கையை எடுக்க முடியும் என்று தனுஷ்க ராமநாயக்க கூறினார்.

இலங்கையில்...

குறிப்பிட்டுள்ளது. தகவல்களை அறிந்து கொள்ளும் சட்டம் இதுவரையில் அமுல்படுத்தப்படவில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தகவல் அறிந்து கொள்ளும் சட்டத்தை எதிர்க்கட்சிகள் முன்வைக்க முயற்சித்த போதிலும், அதற்கு அரசாங்கம் இடமளிக்கவில்லை எனவும் ப்ரீடம் ஹவுஸ் தெரிவித்துள்ளது.

பிரிட்டன்....

தாபய ராஜபக்ச கடைசி நேரத்தில் நிறுத்தியுள்ளார்.

முன்னதாக, ஜனாதிபதியையும் இந்தக் குழு சந்திக்கத் திட்டமிட்டிருந்தது. ஆனால், இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர், சைமன் டன்சுக், ஜனாதிபதியைச் சந்திக்கும் போது, நீதி வழங்கப்படாத பிரித்தானிய சுற்றுலாப் பயணியின் கொலை தொடர்பாக கேள்வி எழுப்பப் போவதாக வெளியிட்டிருந்தார்.

இதனால், பிரித்தானிய நாடாளுமன்றக் குழுவுக்கும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்பை வெளிவிவகார அமைச்சு நிறுத்தியது.

இந்தநிலையிலேயே கோத்தாபய ராஜபக்சவும், பிரித்தானிய நாடாளுமன்றக் குழுவை சந்திக்காமல் தவிர்த்துள்ளார்.

பொதுநல...

மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பு முறைமையை எமது நாட்டுடன் ஒப்பீடு செய்யமுடியாது எனவும், பாரிய பொருட்செலவில் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மூன்று மாகாணசபைகளிலும் நடைபெறவுள்ள தேர்தல்களுக்காக 4500 பேரை கடமையில் ஈடுபடுத்தத் திட்டமிட்டுள்ளதாக பெபரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹெட்டியாரச்சி சுட்டிக்காட்டியுள்ளார்

வெங்காயத் திருடர்கள் அளவெட்டியில் அட்டகாசம்

(அளவெட்டி)

அளவெட்டி வடக்குப் பகுதியிலுள்ள வயல் வெளிகளில் இரவு வேளைகளில் திருடர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

சிறிய வெங்காயத்திற்கு நல்ல கிராக்கி காணப்படும் இக்காலப்பகுதியில் சிறிய வெங்காயம் அறுவடை செய்யப்பட்டு வெயிலில் உலரவிடப்பட்டுள்ள நிலையில் இரவு வேளைகளில் திருடர்கள் தமது கைவரிசையை காட்டுகின்றனர் என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அண்மையில் கூட வெங்காயத்தைத் திருடியவேளையில் விவசாயிகளைக் கண்டு திருடர்கள் ஓடிய சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது. இதனால் இரவு வேளைகளில் விவசாயிகள் வயல் வெளிகளில் காவலுக்கு இருக்கவேண்டிய நிலை காணப்படுவதாக கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் உற்பத்திக்கடை; பச்சிலைப்பள்ளியில் திறப்பு



பச்சிலைப்பள்ளி பிரதேசத்தல் உள்ள முல்லையடி கிராம சேவையாளர் பிரிவில் கைத்ொழில் உற்பத்திப் பொருள் கடையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் மீள் எீச்சித் திட்டத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 18 கிராம சேவையாளர் பிரிவுகளில் கைத்தொழில் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்தக் கடையானது ஏ9 வீதிக்கு அருகாமையில் இருப்பதனால் தென்பகுதி சுற்றுலா பயணிகள் பெருமளவானவர்கள் இங்குவந்து பொருட்களை வாங்கிச் செல்வதனை காணமுடிகின்றது.

மேலும் இங்கு பனை உற்பத்திப் பொருட்களான பனை வெல்லம் அதிகளவில் விற்பனையாவதும் குறிப்பிடத்தக்கது. இயற்கை வளங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களும், பனை, தென்னை மர உற்பத்திப் பொருட்கள், எள்ளுப்பாகு, புளுக்கொடியல் முதலான பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. (130)

வடமாகாண...

இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராம நாதன், முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான முடியப்பு றெமிடியஸ், சாவற்கட்டு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எஸ். பொன்னம்பலம், நெல்லியடி வணிகர் கழகத்தலைவர் அகிலதாஸ், யாழ் மாநர சபை உறுப்பினர் அகமட் சுபியான், எஸ்.செந்தூரன், எஸ். கதிரவேல் ஆகியோர் போட்டியிடவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

புளொட் வேட்பாளர்கள்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) சார்பில் வட மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டம் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன்,, முல்லைத்தீவு மாவட்டம் கந்தையா சிவநேசன் (பவன்), வவுனியா மாவட்டம் வவுனியா நகரசபை முன்னைநாள் தலைவர் ஜி.ரி.லிங்கநாதன் (விசுபாரதி) மற்றும் வவுனியா நகரசபை முன்னைநாள் உபதலைவர் க.சந்திரகுலசிங்கம் (மோகன்), மன்னார் மாவட்டம் இருதயராஜா சார்ள்ஸ் ஆகியோர் வட மாகாணசபைத் தேர்தலில் புளொட் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களாவர்.

மீனவர்களின்....

தெரிவித்தார்.

ஊடகசந்திப்பின் பின்னர் இரு அமைப்புக்களும் இணை ந்து இந்திய இழுவைப் படகு களின் வருகையினால் வட பகுதி மீனவர்கள் அனுபவித்து வரும் பிரச்சினைகளுக்கான கோரிக்கைகளை முன்வைத்துள்ளன.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இலங்கை அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ள இந்திய மீனவர் களுக்கிடையிலான கலந்துரை யாடலில் யாழ்.மாவட்ட பிரதிநிதிகள் பங்குபற்ற வேண்டும்.

கலந்துரையாடலில் எட்டப்படும் தீர்வு அரசியல் கட்சி சார்ந்ததாக அமையாமல் சுதந்திரமானதாக அமையவேண்டும். மீனவர்களின் பிரச்சினைக்கு இந்தியாவால் திணிக்கப்பட்ட தீர்வு எமக்கு வேண்டாம். இருநாடுகளுக்குமான சமத்துவமான தீர்வு வேண்டும். இரு நாட்டு மீனவ பிரச்சினை தொடர்பான விடயங்களில் கச்சதீவு பிரச்சினையை ஆழமாக சிந்தித்து செயற்படவேண்டும்.

இலங்கைக்குள் இழுவைப் படகு மீன்பிடி முறை முற்றாகத்தடைசெய்யப்படுவதோடு சகல விதமான சட்டவிரோத மீன்பிடி முறைகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். பாக்கு நீரிணைப் பிரதேசத்தில் மட்டுமன்றி, மன்னார் வளைகுடாவிலும் இந்திய மீனவப் படகுகளின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

மீனவ பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் யாழ்.பல்கலைக் கழகத்தின் இத்துறை தொடர்பான கல்வியலாளர்களை இணைத்துக் கொள்ளவேண்டும். இரு நாட்டு மீனவ பிரச்சினை தொடர்பான விடயங்களுக்கு தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம், வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பு ஆகியன இணைந்து தொடர்ச்சியான ஒத்துழைப்பை வழங்கும்.

மஹியங்கனையில் இல்லாத பள்ளிவாசல் மீது தாக்குதலா?

ஹக்கீம் மீது பாயும் விகாராதிபதி

மஹியங்கனையில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசல் சேதமாக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் பொய்யான அறிக்கை வெளியிட்டுள்ளதாக மஹியங்கனை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி தம்மரக்கித்த தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் அமைச்சரை கடுமையாகச் சாடியுள்ளார். பொறுப்பு மிக்க அமைச்சர் என்ற வகையில் அமைச்சர் ஹக்கீம் உண்மையான ஆதாரங்களை வழங்கி, குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டும்.

அமைச்சர் தனது அறியாமை காரணமாக பொய்யான அறிக்கைகளை தொடர்ந்தும் வெளியிட்டு வருவதால் அவரை மன்னிக்க முடியாது. மத நல்லிணக்கத்திற்கு குந்தகம் ஏற்படுத்தும் இப்படியான அமைச்சர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேவேளை மஹியங்கனை பிரதேசத்தில் ஜூம்மா என்ற பெயரில் பள்ளிவாசல்கள் எதுவும் இருக்கவில்லை.

பள்ளிவாசலை அமைக்க மாவட்ட செயலகம், வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச் சபை, நகர அபிவிருத்தி அதிகாரச் சபை உட்பட பல நிறுவனங்களிடம் அனுமதி பெறவேண்டும்.

இதனடிப்படையில் இந்த நிறுவனங்களிடம் விசாரித்த போது, அவர்கள் பள்ளிவாசல் தொடர்பான எந்த தகவலையும் வழங்கவில்லை என தம்மரக்கித்த தேரர் தெரிவித்துள்ளார்.

பௌத்த பிக்குகளுக்கு தனியான நீதிமன்றம்

பௌத்த பிக்குகளுக்கு தனியான நீதிமன்றமொன்று அமைக்கப்படவுள்ளதாக பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அறிவித்துள்ளார். பௌத்த பிக்குகளுடன் தொடர்புடைய வழக்கு விசாரணைகளை மேற்கொள்வதற்கு இந்த விசேட நீதிமன்றம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பௌத்த பிக்குகள் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்யும் நீதிமன்றம் சங்கா நீதிமன்றம் என அழைக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இந்த நீதிமன்றின் விசாரணைகள் ஒரே நாளில் மேற்கொள்ளப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதிமன்றத்துறையில் முதலீடு செய்து நலன்களைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் விரும்புவதாகத் தெரிவித்துள்ளார். வழக்குகளை ஒரு வருடத்திற்குள் நிறைவு செய்ய வேண்டுமென்றே நீதவான்கள் விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியா கொள்ளை; சந்தேகநபர் கைது

(வவுனியா)

வவுனியா நகரிலுள்ள பிரபல வர்த்தக நிலையமொன்றில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா நகரிலுள்ள குறித்த வர்த்தக நிலையத்தின் சுவர்கள் உடைக்கப்பட்டு மூன்று இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணம் மற்றும் பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைதான சந்தேகநபரிடம் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் நடைபெற்ற காணி செயலமர்வில் பதற்றம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ரிவேரா விடுதியில் நடத்தப்பட்ட செயலமர்வின் போது அழையா விருந்தாளியாக வந்த மாவட்டத்தின் மங்களாராம விஹாரதிபதியின் அநாகரிகமான செயலால் அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கற்றறிந்த பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் காணிப் பிரச்சினை மற்றும் அவற்றுக்கான தீர்வு தொடர்பிலான பரிந்துரைகள் குறித்து தெளிவு படுத்துவதற்கான செயலமர்வொன்று நேற்றைய தினம் ரிவேரா விடுதியில் நடத்தப்பட்டது.

தேசிய சமாதானப் பேரவையினாலேயே இந்த செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் மட்டக்களப்பு மாவட்டத்தைச்சேர்ந்த மூவினங்களையும் சேர்ந்தவர்கள், சிவில் சமூகத்தினர், மீள்குடியேறிய பகுதியிலுள்ள முக்கியஸ்தர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உள்ளிட்ட கல்வி மான்கள் கலந்துகொண்டனர்.

திடீரென அந்த செயலமர்விற்கு வந்த மட்டக்களப்பு மங்களாராம விஹாராதிபதி அம்பிட்டிய சமரத்ன தேரர் தானும் இந்த செயலமர்வில் உரையாற்ற வேணடுமென கேட்டுள்ளார்.

அவருக்கு அழைப்பு விடுக்கப்படாத நிலையில் அந்த செயலமர்வில் உரையாற்றுவதற்கு ஏற்பாட்டாளர்கள் இடமளித்துள்ளனர்.

அவரது உரை செயலமர்வின் தொனிப்பொருளுக்கு அப்பால் சென்றுக்கொண்டிருக்கின்றமை குறித்து ஏற்பாட்டாளர்கள் விஹாராதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்தபோதே அவர் ஏற்பாட்டார்களை தாக்கியதாகவும் இதனையடுத்தே அங்கு பதற்றமான நிலைமையொன்று ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏழாலைக்கான போக்குவரத்து எந்நேரமும் தடைப்படலாம்

மக்கள் கவலை

(சுன்னாகம்)

ஏழாலைக்கான போக்குவரத்துச் சேவை எந்நேரமும் நிறுத்தப்படும் நிலைமை காணப்படுவது குறித்து ஏழாலை, குப்பிளான், மயிலங்காடு, குரும்பசிட்டி மக்கள் பெரும் கவலையடைகின்றனர்.

மல்லாகம் சந்தியிலிருந்து குப்பிளான் வரையிலான சுமார் 5 கிலோமீற்றர் நீளமான வீதி மிகவும் சேதமடைந்து குன்றும் குழியுமாக காணப்படுவதுடன் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் என்பன பயணிக்க முடியாத நிலையில் கற்கள் சிதறுண்ட நிலையில் காணப்படுகின்றது.

இந்நிலையில் காங்கேசன்துறை வீதியூடாக யாழ்ப்பாணத்திலிருந்து மல்லாகம், ஏழாலை ஊடாக 770 இலக்க இலங்கை போக்குவரத்துச் சேவை தற்போது காலை, மாலை ஒரு சேவை மட்டுமே நடைபெறுவதுடன் தனியார் மினிபஸ் சேவை தொடர்ந்து நடைபெறுகின்றது.

எனினும், வீதியின் மிகமோசமான சூழலால் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் அடிக்கடி இப்பிரதேசத்தில் பழுதடையும் நிலையும், காற்றுப்போய் நிற்கும் நிலையும் காணப்படுவதுடன், சாரதிகள் மிகவும் கஷ்டமான சூழலில் சேவையில் ஈடுபடவேண்டிய நிலையில் சில வேளைகளில் எதிர்காலத்தில் இந்நிலை தொடருமானால் தொடர்ந்து போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பஸ்களின் சேவை நிறுத்தப்படலாம் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதி விரைவாக புனரமைக்கப்படுவதற்கு ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் குறித்த வீதி வலிகாமம் பகுதியையும், வடமராட்சிப் பகுதியையும் இணைக்கும் முக்கிய போக்குவரத்து மார்க்கமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. (66)

சிறுநீரக நோயைத் தடுக்கும் குழு அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

சிறுநீரக நோய் பரவி வருவதை தடுப்பதற்காக அது தொடரபில் நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழு 19 தற்காலிக தீர்வுகளும், 10 நீண்ட கால தீர்வுகளும் அடங்கிய அறிக்கையொன்றை அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளது.

இந்த தீர்வுகளை அமுல் படுத்த அமைச்சரவை தீர்மானித்துள்ளதோடு இதனைக் கண்காணிக்க நிர்மாண, பொறியியல் அமைச்சர் தலைமையில் அதிகாரிகள் குழு வொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இரசாயனப் பசளை, மற்றும் இரசாயன பாவனையினால் சிறுநீரக நோய் பரவுவதாக கண்டறியப்பட்டுள்ளது. வட மத்திய மாகாணத்தில் சிறுநீரக நோயாளர்கள் அதிகளவில் இருப்பதற்கு இரசாயன பொருட்கள் நீரில் கலப்பதே காரணம் என ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆராய 13 அமைச்சர்கள் கொண்ட அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழு 58 விஞ்ஞானிகளை அழைத்து இது தொடர்பாக ஆராய்ந்தது. உப குழுவின் அறிக்கை அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டது.

உணவகத்திற்கு சீல்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரமற்ற நீரை உணவகத்தில் பயன்படுத்திய குற்றத்திற்காக மானிப்பாய் உடுவில் வீதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு நேற்று முன்தினம் சீல் வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி உணவகத்தில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போதே சுகாதாரப் பரிசோதகர்கள் இதனைக் கண்டறிந்துள்ளனர்.

குறிப்பிட்ட உணவகத்தின் உரிமையாளர் மீது மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

மிலேச்சத்தனத்திற்கு எதிரானதே போர்

ஜனாதிபதி தெரிவிப்பு

இறுதி யுத்தம் மேற்கொண்டது விடுதலை புலிகளின் மிலேச்சத்தனத்திற்கு எதிராகவே அன்றி, அவர்களுடனான வைராக்கியத்தினால் அல்லவென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் வைராக்கிய அரசியலை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிலியத்தலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாங்கள் யுத்தம் செய்தது, விடுதலை புலிகளின் மிலேச்சத்தனத்திற்கு எதிராகவே. நாட்டை இரண்டாக பிரிப்பதற்று எதிராகவே யுத்தம் செய்தோம். அதனாலேயே நாங்கள் வெற்றிப்பெற்றோம். வைராக்கிய அரசியல் கூடாது. சிலர் எனக்கு குழிபறிப்பதாக நினைத்து நாட்டிற்கு குழிபறிக்கிறார்கள். அதுவே பொது நலவாய நாடுகளின் அரச தலைவர்களது மாநாட்டை இலங்கையில் நடத்தக் கூடாது என்று போடும் கோஷமாகும். இந்த வைராக்கிய அரசியலை இல்லாமல் செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஆஸி. படகு விபத்து உயிரிழப்பு பதினைந்தாக அதிகரிப்பு

இந்தோனேசியாவின் ஜாவா தீவுக்கு அருகே கடலில் மூழ்கிய அகதிகள் படகில் பயணம் செய்த நான்கு பெண்களின் சடலங்கள் நேற்று முன்தினம் கரையொதுங்கின.

இதையடுத்து இந்த விபத்தில் மரணமானவர்களின் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த செவ்வாயன்று படகு மூழ்கிய இடத்தில் இருந்து மேற்கே 50 கி.மீ தொலைவில் உள்ள உயுங் ஜென்ரெங் கடற்கரையில் கடந்த மூன்று தினங்களுக்குள் நான்கு பெண்களின் சடலங்கள் கரையொதுங்கின.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களில் இலங்கையைச் சேர்ந்த தமிழர்களும் அடங்கியுள்ளனர்.

சடலங்கள் மீட்கப்பட்டு உயிரிழந்ததாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள 15 பேரில், 18 மாத ஆண் குழந்தை ஒன்று உள்ளிட்ட ஆறு சிறுவர்களும், கர்ப்பிணிப் பெண் ஒருவரும் அடங்கியுள்ளனர்.

இந்த விபத்தில் காணாமற்போனவர்களின் சரியான எண்ணிக்கையை உறுதிப்படுத்த முடியாதுள்ளதாக மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

204 பேர் பயணம் செய்ததாகக் கருதப்படும் இந்தப் படகில் இருந்த 189 பேர் மட்டும் காப்பாற்றப்பட்டனர். அவுஸ்ரேலியாவில் அடைக்கலம் கோருவதற்காக சென்ற ஈரான், ஈராக், இலங்கையைச் சேர்ந்தவர்களே இந்த விபத்தில் சிக்கியுள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூலை 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.